பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 14, ஞாயிற்றுக்கிழமை 28.05.2017 | கதிர் 203

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789 c/400

# யுத்தக் குற்றங்கள்: விசாரிக்கப்பட வேண்டியவர் விசாரணையாளராவதா?



## ஜெனரல் ஜெகத் டயஸ் குறித்து சீற்றத்துடன் யஸ்மின் சூகா கேள்வி



கொழும்பு, மே 28

"இலங்கையில் யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்கப்பட வேண்டியவர் ஜெனரல் ஜெகத் டயஸ்.

"அப்படிப்பட்டவரை, ஹெய்டியில் அமைதிப் படைப் பணிக்குச் சென்ற இலங்கைப் படையினரால் இழைக்கப்பட்டவை என்று கூறப்படும் பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குப் பொறுப்பாளராக நியமிப்பதா?"

- இலங்கை அரசின் நடவடிக்கை குறித்து இவ்வாறு சீற்றத்துடன் கேள்வி எழுப்பி, கருத்து வெளியிட்டிருக்கின்றார் உண்மை, நீதிக்கான சர்வதேச மன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூகா. பக்கம் 22 »

## ❀ 120 பேர் பலி ❀ 113 பேர் காயம் ❀ 100 பேர் மாயம் ❀ 14 மாவட்டங்களில் 4 லட்சத்து 94 ஆயிரம் பேர் பாதிப்பு

# வெள்ளச் சீற்றம் குறையும் சூழல்; மீட்பு, நிவாரணப் பணிகள் துரிதம்

கொழும்பு, மே 28

தென்னிலங்கையில் 14 மாவட்டங்களில் கடந்த சில நாள்களாகப்பெய்துவந்தபேய்மழை மற்றும் பெரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு 120 பேர் உயிரிழந்திருக்கின்றனர்; 113 பேர்காயமடைந்திருக்கின்றனர். இன்னும் நூறு பேர் வரை காணாமல்போயிருக்கின்றனர். மொத்தம் 4லட்சத்து 94 ஆயிரம் பேர் வெள்ளித்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அவர்களில் அனேகமானோர் வெள்ளத்தில் தங்கள் வீடு, வாசல்கள் மூழ்கியமையால் நலன்புரிநிலையங்களில் பக்கம் 22 »



## பல ஆஸ்பத்திரிகளும் வெள்ளத்தில் மூழ்கின

பெரு வெள்ளம் காரணமாக இத்தேபான, கல்பாத்த, இரத்தினபுரி, தெனியாய, மொரவக்க, கம்புறுப்பிட்டிய வைத்தியசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன என சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜிதசேனாரத்னதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டி பக்கம் 22 »

## நாடு திரும்பிய கையோடு ஜனாதிபதி வெள்ள நிலையை நேரில் அவதானிப்பு

கொழும்பு, மே 28

நான்கு நாள் விஜயமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாடுதிரும்பிய கையோடு களுத்துறை உட்பட பெருவெள்ளப்பாதிப்புக்கு உள் பக்கம் 22 »

## பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரியிடம் பொலிஸார் விசாரணை

பொதுபலசேனாவின்பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் தேடி வருகையில் - அவர் தலைமறைவாகியுள்ள சூழலில் பக்கம் 22 »

## 10 சடலங்கள் மீட்பு

இரத்தினபுரி மாவட்டம் நிவித்திகலை, கிரிபத்கல குரான வண்ணியவத்தை கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்சரிவில் புதையுண்டு போன 31 பேரில் பத்துப்பேரின் சடலங்கள் நேற்று வரை மீட்கப்பட்டன. எஞ்சியோரைத் தேடும் பணி தொடர்கிறது. (உ)

## அளப்பு அருணாசலம்



அப்ப... அங்கை மழை வெள்ளம்... இஞ்சை பக்தி வெள்ளம் எண்டு சொல்லுங்கோ...!

## நாட்டில் இப்போது அதர்ம ஆட்சி அதனால்தான் இந்த அனர்த்தமாம்!

### ஞானசார தேரரின் கண்டுபிடிப்பு இது!




கொழும்பு, மே 28

பொலிஸார் தம்மைக் கைது செய்வதினின்றும் தப்புவதற்காகத் தலைமறைவாகியிருந்து வரும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர், வண. கலகொட அத்த ஞானசரதேரர், நாட்டில் கனமழை, பெரு வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் இடம்பெறுவதற்கு நாட்டில் அதர்ம ஆட்சி நிலவுவதே காரணம் என்று கூறியிருக்கின்றார்.

தலைமறைவு நிலையில் தாம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (அறிக்கையின் விவரம் 2 ஆம் பக்கத்தில்)


## தெற்கிலிருந்து 309 பிக்குகள் உட்பட 500 பேர் நயினாதீவு விகாரையில் நேற்றிரவு மத வழிபாடு



(எஸ்.நிதர்ஷன்)

தென்னிலங்கையில்இருந்து வருகைதந்த 309 பௌத்தபிக்குகளும் 200 வரையான சிங்களவர்களும் நேற்றிரவு நயினாதீவு நாக விகாரையில் விசேட பூசைவழிபாடுகளில்ஈடுபட்டனர்.

ஆரிய மத என்ற தென்னிலங்கை அமைப்பின் ஏற்பாட்டிலேயே மேற்படி பௌத்த பிக்கு பக்கம் 22 »



தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

### அனர்த்த மனிதாபிமானப் பணிகளுக்கு

# தமிழ், முஸ்லிம் இளைஞர்களை அழைக்கிறார் வண.ஞானசாரதேரர்



கொழும்பு, மே 28

எமது நாட்டில் ஓர்அனர்த்தம் இடம்பெற்றவுடன் சகலரும் ஒன்று திரண்டு செயற்படுவது போன்று இப்போதும் எடுத்துக்காட்டாக நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இளைஞர்களே அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். இதில், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி மக்கள் என்ற வகையில் சகலரும் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

-இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தம் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டில் தற்போது அதர்ம ஆட்சி நிலவுகின்றது அதனால் தான் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. போலி தெய்வங்களிடம் குறைகளைக் கூறாமல் அனர்த்தம் நேரக்கூடாது என்று உண்மை தெய்வமான புத்த பெருமானை பிரார்த்தனை செய்ய வேண்டும். நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் விளைவாக ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்துக்குப் புத்த மதத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பதே காரணமாகும்.

நாட்டில் பெரிய வெள்ள அனர்த்த நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதனால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

எனது பிரச்சினைதற்போதைய தருணத்தில் முக்கியமில்லை. எனவே, எதிர்ப்புச் செயற்பாடுளை விடுத்துவிட்டு தற்போதைய நிலைமைக்கு உரிய செயற்பாடு எதுவோ அதனை செய்ய வேண்டும்.

ஆட்சியாளர்கள் புத்த மதத்தைப் பின்பற்றாமல் இருந்தால் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும்.-என்றுள்ளது. (ஐ)

## நாடாளுமன்றமும் கூட வெள்ளத்தில் மூழ்கும் நிலை!

கொழும்பு, மே 28

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் வேகமாக உயர்வடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக நாடாளுமன்றம் நீரில் மூழ்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

தியவன்னா ஓயாவின் நீர் நாடாளுமன்றத்தைச் சூழ்ந்தால் அதனை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மணல் மூடைகள் கொண்டு அணை வைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறான அபாய நிலை ஏற்படும் பட்சத்தில் அதனைத் தடுக்க கடற்படையினர் உட்பட பாதுகாப்புப் பிரிவினர் தயார் நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முதல்வர் நிதியில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் நேற்றுத் திறப்பு

வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் நேற்றுக் காலை கிளிநொச்சியில் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள சுமார் 150 குடும்பங்களின் பாவனைக்காகவே இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மக்கள் பாவனைக்காக நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி .சிறிதரன், வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





## நாளை மின் தடை

நாளை திங்கள் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய பிரதேசங்களில், மின்விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நாவற்குழியில் ரயில் மீது கல்வீச்சு; பயணித்த ராணுவச் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம், மே 28

நாவற்குழியில் ரயில் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அந்த ரயிலில் பயணித்த இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றுச் சனிக்கிழமை காலை பயணித்த ரயிலின் மீதே கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு வீசப்பட்ட கல் ரயிலில் பயணித்த இராணுவ சிப்பாயின் தலையைத் தாக்கியமையால் அவர் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த இராணுவ சிப்பாய் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய பிரதமர் அனுதாபம்



இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது 'டுவிட்டர்' பக்கத்தில் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிவாரண பொருள்களுடன் இந்தியா 2 கப்பல்களை அனுப்பியுள்ளது என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கு நாம் எப்போதும் துணை நிற்போம். இலங்கை மக்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம். இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கைச் சகோதர, சகோதரிகளுக்கு இந்தியா துணை நிற்கும் என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## திறப்பு விழா

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் படையினரால் விடுவிக்கப்பட்ட பாடசாலையின் கட்டடங்களது திறப்புவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நிகழ்வில் கலந்து கொண்டு கட்டடங்களைத் திறந்து வைப்பார்.

## அடுத்துவரும் நாள்களில் மழை பெய்யும் வாய்ப்பு

### வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

கொழும்பு, மே 28

கடந்த சில நாள்களாக நிலவிய அடை மழையுடன் கூடிய காலநிலை தற்போது குறைவடைந்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாளையும் நாளை மறுதினமும் மீண்டும் அடைமழை பெய்யலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவபெயர்ச்சி மழை நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தில் தொடரும் என்று நேற்று அதிகாலை வெளியிட்ட அறிக்கையில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, வடமேல் மாகாணங்களில் மழை பெய்யும் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் 68.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும் காற்று மணிக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என்றும் மழை பெய்யும் நேரங்களில் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மஹிந்தவின் புதல்வர்களும் நிவாரணப் பணிகளில்!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களும் மக்களுக்கான நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். இது குறித்து நாமல் ராஜபக்ஷ தன்னுடைய உத்தியோக பூர்வமுகப் புத்தகப் பக்கத்தில் வீடியோ காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு இலங்கை சந்திக்கும் மிகப் பெரிய அனர்த்தத்தில் இரண்டாவது அனர்த்தம் இதுவாக பதிவாகியுள்ளது. குப்பை மேடு சரிந்து விழுந்து மக்களை துயரில் ஆழ்த்தியிருந்த தருணத்திலும், அந்த இழப்பில் இருந்து மக்கள் மீண்டு வரும் பொழுது வெள்ளப் பெருக்கும் மண் சரிவும் அந்த மக்களை மீண்டும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுற்றுநிருபங்களுக்குள் நிற்காமல் மக்களுக்கு உதவி செய்யுங்கள்!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, மே 28

சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப வேலைகளை மட்டுப்படுத்தாமல் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில்நேற்று முற்பகல் களுத்துறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

திடீர் அனர்த்த நிலைமையினால்சேதமடைந்தவீடுகளை அரசாங்கத்தினால் நிர்மாணிப்பதற்கு உரிய நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். குறித்த நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தகவல்களின் அடிப்படையில் அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

உயிரிழந்தவர்களுக்கான நட்டஈடு வழங்குதல், இடம்பெயர்ந்து மற்றும் அன்றாட தொழில்களை இழந்துள்ளவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கானஒருமுறைமை குறித்து தொடர்புடைய நிறுவனங்களுடன் அடுத்தவாரம் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

நாட்டில் அவ்வப்போது ஏற்படும் அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும்.

அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைப் பாதுகாத்து, இடம்பெயர்ந்த மக்களுக்குஉணவு,குடிநீர்,மருத்துவ உதவிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் தொடர்ச்சியாக வழங்கவேண்டும். அனர்த்தத்திற்குள்ளான பிரதேசங்களைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குஇதில் முக்கிய பொறுப்பு உள் ளது.– என்றார்.

மேலும், இந்தத் திடீர் அனர்த்த நிலை காரணமாக நிவாரண உதவிகளை வழங்க பங்களிப்புகளை வழங்கிவரும் முப்படையினர் பொலிஸார் மற்றும்ஏனையஅரச,அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அனைவருக்கும் அவர் தனது நன்றிகளையும் தெரிவித்தார். அத்துடன், நிவாரண உதவிகளை வழங்கும் நடவடிக்கையின்போது உயிரிழந்த இராணுவ வீரருக்கு அவர் அனுதாபங்களைத் தெரிவித்தார்.

நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக குறித்தநிறுவனங்களுக்குவழங்கப்பட்டுள்ளது. உயிர்களை மீட்பதற்குத்தேவையானபடகுகள், குறித்தஇடங்களுக்குக்கொண்டு செல்வதற்குகட்டணமின்றிஅதிவேகநெடுஞ்சாலையைப்பயன்படுத்த முடியும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ம)

# 2 இலட்சம் ரூபா கொடுத்தால் சுகாதாரத்துறையில் வேலை!

## வவுனியாவில்நேற்று மோசடி நேர்முகப் பரீட்சை

சுமார் இரண்டு லட்சம் ரூபா பணம் வழங்கினால் சுகா தாரத் துறையில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும் எனக் கூறிய ஒரு குழுவினர் நேற்று வவுனி யாவில் பகிரங்கமாக நேர்முகப் பரீட்சை ஒன்றையும் நடத்தினர் எனக் கூறப்படுகின்றது.

அரசியல் கட்சியொன்றில் செல்வாக்கைப் பெற்ற ஒரு குழுவினரே இவ்வாறு மோசடி வேலையில் ஈடுபட்டனர் எனவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

வவுனியாவில் உள்ள 92 பேருக்கு கடந்த காலத்தில் சுகா தாரத் துறையில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்திருக்கிறோம். நீங்களும் தலா இரண்டு லட்சம் ரூபா பணம் தந்தால் உங்களுக்கும் நிச்சயமாக வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவோம் என ஒரு குழுவினர் ஆசை வார்த்தை கூறிப் பலரை ஏமாற்றியுள்ளனர்.

வவுனியாவில் உள்ள ஒரு விடுதிக்கு இளைஞர், யுவதிகளை அழைத்த மேற்படிக் குழுவினர், நேர்முகப் பரீட்சை என்ற பெயரில் அவர்களைச் சந்தித்து பணம் அறவிட்டனர் எனவும் கூறப்படுகின்றது. நேற்று மட்டும் நாற்பது பேர் வரை அங்கு சென்றனர் எனவும் கூறப்படுகின்றது.

ஒருபுறம் தமக்கு நியமனம் பெற்றுத்தருமாறு சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் நிலையில், மறுபுறம் அரசியல் செல்வாக்குடன் இடம்பெறும் இந்தச் செயற்பாடு தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம)

# பாதிப்புற்றவர்களை நேரில் சென்று பார்வையிட்டனர் மஹிந்த, வீரவன்ஸ

கொழும்பு, மே 28


நாட்டின் தெற்குப் பகுதியில் இயற்கை அனர்த்தத்தால் மக்கள்பாதிக்கப்பட்டுள்ளநிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதன்போது மக்களுக்கான தேவைகள் தொடர்பிலும் அவர் ஆராய்ந்தார் எனக் கூறப்படுகின்றது.

பெலியத்த பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களை முன்னாள் ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ஸவும்அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிடுவதற்காக சென்றுள்ளார். கொழும்பு மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அவர் இவ்வாறு சென்றிருந்தார். (ம)





# பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விமானம் மூலம் உணவுப்பொருள்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் துரிதமாகத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்த பின்னர், தேவையான நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இருப்பிடங்களை இழந்தவர்களின் வீடுகள், சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி ஆகியன தொடர்பிலான விடயங்களைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கல்வி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உள்ள பிரதேசங்களுக்கு விமானத்தின் மூலம் உணவுகள் வழங்கப்படும். – என்றும் பிரதமர் தெரிவித்தார். (ம)




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

பேரன்புமிக்க இஸ்லாமிய சகோதரர்களே அல்லாஹ்வுத்தஆலா நம் அனைவருக்கும் இவ் வருடமும் ரமழானை அடைந்து அதன் நோன்புகளை நோற்பதற்கு பாக்கியம் செய்துள்ளான்.

நோன்பு நோற்பதன் நோக்கம் அல்லாஹ்வுத்த ஆலா திருமறை அல் குர்ஆனில் கூறுகிறான்.

"அல்லாஹ்வை விசுவாசம் கொண்டோரே நீங்கள் இறையச்சமுள்ளவராக மாறுவதற்காக வேண்டி உமக்கு முன்னால் சென்ற சமுதாயத்தினருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போல் உம்மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது."

ஆகவே, சகோதரர்களே இறைவன் கூறியது போல் இறையச்சமுள்ளவர்களாக நல்ல செயல்கள் செய்தும், பாவங்களை விட்டு தவிர்த்திருந்தும் முழு ரமழானுடைய பயனையும் அடைய எம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக.

# ஆரம்ப கட்டமாக நிவாரணத்துக்கு 15 கோடி ரூபா அரசினால் ஒதுக்கீடு

அனர்த்தத்தினால்உயிரிழந்த மற்றும் பாதிப்புக்கு உள்ளான வீடுகளுக்காக நட்டஈடு வழங்குவதற்கும், வீடுகளில் பாதிக்கப்பட்ட பொருள்களுக்கு உரிய நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கும், உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளை அரச செலவில் மேற்கொள்வதற்கும்தேவையான ஆலோசனைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினால் வழங்கப்பட்டுள்ளன.

அரச தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது –

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 15கோடி ரூபா நிதி ஆரம்ப கட்டமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்றாற்போல் எல்லா நேரங்களிலும் மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், தற்போது பாதிப்புக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் நிவாரணப் பொருள்களை இரத்மலானையில் அமைந்துள்ள விமானப் படை முகாம் சூழலுக்கு வந்து ஒப்படைக்குமாறு அனைவரிடத்திலும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனர்த்தத்திற்கு உள் ளான முக்கிய 7 மாவட்டங்களில் இருக்கும் அரசஅதிகாரிகளின் எண்ணிக்கை போதுமான அளவு காணப்படாவிடின், அதனைச் சூழவுள்ள மாவட்டங்களில் பணி புரியும் அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனஆலோசனை வழங்கியுள்ளார்.

சொந்த இடங்களுக்கு வெளியில்சென்று வாழும்நபர்கள் உயிரிழந்து இருப்பின், அவர்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு உரியமரியாதையுடன் இறுதிகிரியைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும்பிரதேசசெயலாளர்களுக்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

28.05.2017
தொழுகை நேரம்
சுபஹ் - 4.28 மு.ப
லுஹர் - 12.08 பி.ப
அஸர் - 3.36 பி.ப
மஃரிப் - 6.24 பி.ப
இஷா - 7.40 பி.ப

ஞாயிறு தோறும்
குருவியார் எழுதும்
'ஊர்வம்பு'
இம்முறை வெளிவரவில்லை.
அடுத்த வாரம் முதல் வழமை போல் அது பிரசுரமாகும்.

வீடு கட்டவா? திருத்தவா? தொடர்பு கொள்க!
யாழ்ப்பாணத்தில் உள்ள உங்கள் வீடுகளைப் புனரமைத்துக் கொள்ளவும், புதிய வீடுகளைக் கட்டிக் கொள்ளவும் தொடர்புகொள்க. உத்தரவாதத்துடன் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
077 045 4140

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மூலோபாய நகரமாக யாழ்ப்பாணம்

எதிர்கால நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தை மூலோபாய நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக அறிய வருகின்றது.

அதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து இந்த வருடத்துக்குள் தாங்கள் செயற்படுத்தவுள்ளனர் என பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கின்றார்.

அண்மைக் காலத்தில் சில தடவைகள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணம் வந்து, நின்று, தங்கிச் செல்கின்றார் என்று கூறப்பட்டது. அதன் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு சுயாதீன அமைப்புக்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக மூலோபாய நகரத் திட்டத்தின் யாழ். பிரதிநிதிகளை அமைச்சர் சந்தித்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்வாங்கி, அவற்றையும் கவனத்தில் எடுத்து உரிய திட்டம் தயாரிக்கப்படும் என்றும், அத்திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தை நல்லதொரு மூலோபாய மையமாக - நகரமாக - மாற்றுவோம் என்றும் அமைச்சர் கூறுகின்றார்.

நாட்டில் நிலவிய போர் காரணமாக யாழ். நகர அபிவிருத்திக்குத் தடைகள் ஏற்பட்டன என்றும் -

1980 ஆம் ஆண்டின் பின்னர் யாழ். நகரத்தின் இயல்பான வளர்ச்சி முழுமையாகத் தடைப்பட்டது என்றும் - அமைச்சர் கூறியுள்ளார்.

போர் காரணமாக இயல்பான வளர்ச்சி தடைப்பட்டமை மட்டுமல்ல, பல பின்னடைவுகளையும் யாழ்ப்பாண நகரம் மட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கே - முழுத் தமிழர் தாயகமே - எதிர்கொண்டது என்பது உண்மையே.

போரின் பின்னரான அபிவிருத்தி என்ற வகையில், அதிகம் கவனிக்கப்பட வேண்டியவை, யுத்த காலத்தில் - சுமார் இரண்டரை தசாப்தங்கள் - புறம் ஒதுக்கப்படிருந்த தமிழர் தாயகம்தான்.

அந்த வகையில், தமிழர் தாயகத்தின் மூளை மையமான - கருவூலமான - யாழ்ப்பாண நகரம் மிக முக்கியமானது. நாட்டின் மூலோபாய நகரங்களுள் ஒன்றாக யாழ்ப்பாணத்தை விருத்தி செய்யும் திட்டம் வரவேற்கப்பட வேண்டியதே.

ஆனால், இந்த நகரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்புகளின் கருத்துகள், எதிர்பார்ப்புகள், விருப்புகள், நோக்கங்கள் உள்வாங்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதே அவசியமாகும்.

இந்த மண்ணின் வழமையான பாரம்பரியங்கள், தொன்மைகள், பண்பாட்டுக் கோலங்கள், வழக்காறுகள், விழுமியங்கள் பாதிக்கப்படாத வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவது முதலில் முக்கியம்.

சம்பந்தப்பட்ட பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், சமூக, சமய ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என இன்னோரன்ன தரப்புகளின் கருத்துக்களை உள்வாங்குவது இவ்விடயத்தில் மிக அவசியமானதாகின்றது.

யாழ்ப்பாணத்தை மூலோபாய நகரமாக விருத்தி செய்தால் போதுமானதன்று. அதனுடனான வெளியிடங்களின் போக்குவரத்துகளும் செம்மைப்படுத்தப்பட வேண்டும். அதிவேகப் பாதைகள், ரயில் பாதைகள் மேம்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தை அண்டியதான பலாலி விமானத்தளம் பிராந்திய விமான நிலையமாகத் தரமுயர்த்தப்பட வேண்டும். காங்கேசன்துறை துறைமுகத்தின் பயன்பாட்டு வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். தொலைத்தொடர்பு முறைமைகள், வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுலாத்துறையைத் தரம் உயர்த்துவதற்கு வசதியாக சுற்றுலா மையங்களை அடையாளம் கண்டு அவற்றை விருத்தி செய்ய வேண்டும். வடமராட்சி கிழக்கை சுற்றுச் சூழல் பேணும் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் போன்றவை பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவது அவசியம்.

யாழ்ப்பாணத்துக்கென ஒழுங்குபடுத்தப்படும் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானத்தை ஸ்தாபிக்கும் நடவடிக்கை பேச்சளவைத் தாண்டி விரைந்து செயலளவுக்கு நகர்த்தப்பட வேண்டும்.

இவை எல்லாம் ஏறத்தாழ ஒரே சமயத்தில் முன்னெடுக்கப்பட்டால் தான், ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாண நகரம் மூலோபாய நகரங்களுள் ஒன்றாகத் தரம் உயர வாய்ப்பு ஏற்படும்.

அத்தோடு இந்த அபிவிருத்தி நடவடிக்கையின் இன்னொரு முக்கிய விடயமும் கவனிக்கப்பட வேண்டும். அது, இந்தக் கட்டுமான மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் உள்ளூர் நிறுவனங்கள், உள்ளூர் தொழிலாளர் தரப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். குடாநாட்டுக்குள் செயற்படும் பல பொது நிறுவனங்கள், அமைப்புகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

சாதாரணமாக சிறிய வீடு ஒன்றைக் கட்டுவதற்கே மணலுக்கு அல்லாடும் சூழலே யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. இந்தச் சீத்துவத்தில் யாழ். நகரை மூலோபாய நகரமாக மேம்படுத்துவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலைதான்.

பல தரப்புகளும் ஒன்றிணைந்து, சுயநலன் கருதாமல் செயற்பட்டால் மட்டுமே இது சாத்தியம். செயலில் நடக்குமா? நடந்தால் மகிழ்ச்சியே.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் சர்வமதப் பிரார்த்தனை

### போராட்ட நூறாவது நாளான நாளைமறுதினம் நடத்த ஏற்பாடு

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளில் மாபெரும் சர்வமதப் பிரார்த்தனை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டத்தில் இருந்தும் உறவுகள் நாளைமறுதினம் 30 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலில் ஒன்று கூடுவர் என்று காணாமல் போனவர்களுடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களுக்கான நீதியைக் கோரித் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், இதுவரை அரசிடம் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை. அந்த வகையில் காணாமல் போனவர்களுடைய உறவினர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் நாளைமறு தினம் 30 ஆம் திகதி 100 ஆவது நாளை எட்டவுள்ளது. இந்த நிலையில் மாபெரும் சர்வமதப் பிரார்த்தனை ஒன்றைக் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தச் சர்வமதப் பிரார்த்தனையின் மூலம் சர்வதேசத்துக்கு இந்தப் பிரச்சினையை மீண்டும் மீண்டும் தெரியப்படுத்தி தீர்வைப் பெற்றுத்தரக் கோரவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த மாபெரும் பிரார்த்தனையில் பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் சிவில் சமூக உறுப்பினர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளனர். (ஐ)

# 60 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் யாழ். நூலகத்துக்கு!

யாழ்ப்பாணம், மே 28

இந்திய அரசால் யாழ். பொது நூலகத்துக்கு 60 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சிங் இந்த நூல்களை யாழ். பொது நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

இந்திய மக்களால் யாழ். பொது நூலகத்துக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள சுமார் 16 ஆயிரம் நூல்கள் இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

யாழ். பொது நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்னர் பல்வேறு நூல்கள் இருந்துள்ளன என்றும், மிகச் சிறந்த நூல் தொகுதிகள் உள்ளடக்கிய பழம்பெரும் நூலகமாக விளங்கியுள்ளதால், மிக அதிகமான நூல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று இந்தியத் துணைத்தூதரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, இந்த நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அமெரிக்காவில் குடியமர்த்தப்படவுள்ளனர் இலங்கையர் உட்பட 1,250 அகதிகள்

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சிக் காலகட்டத்தின் இறுதி நேரத்தில் ஆஸ்திரேலியா - அமெரிக்கா இடையே கையெழுத்தான ஒரேமுறை அகதிகளை குடியமர்த்துவதற்கான ஒப்பந்தத்தின் படி, ஆஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்பு முகாம்களில் இருந்து ஆயிரத்து 250 அகதிகள் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியமர்த்தப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஆயத்த பணிகள் நடந்துவரும் நிலையில், இதற்கு ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட அகதிகள் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

மனுஸ் மற்றும் நவுரு தீவில் உள்ள ஆஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்பு முகாம்களில், அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் 900 அகதிகளிடையே இதற்கான முதற்கட்ட நேர்காணல்கள் முடிந்துள்ளன. அதில் 800 இற்கும் மேற்பட்டோரிடம் கைரேகைப் பதிவுகளும், 250 பேரிடம் பாதுகாப்புக்கான நேர்காணல்களும் நிறைவடைந்துள்ளன. மருத்துவ பரிசோதனைகளும் தொடங்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.

முந்தைய கணக்கின்படி, ஆஸ்திரேலிய தடுப்பு முகாம்களான மனுஸ்தீவில் 675 அகதிகளும் நவுருதீவில் 941 அகதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளில் பெரும்பாலானோர் ஆப்கானிஸ்தான், இலங்கை, சிரியா, ஈரான், மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

இது நவுருதீவு மற்றும் மனுஸ் தீவின் தடுப்பு முகாம்களிலுள்ள அகதிகளை மீள்குடியமர்த்துவதற்கான ஒப்பந்தம். எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா வரமுயற்சிப்பவர்கள் ஒரு போதும் அங்கு குடியேற்றப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்த்துவதில் பெண்கள், குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இது நடைமுறைப்படுத்துவதற்கு காலம் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையத்தால் நிர்வகிக்கப்படும் என்று ஒப்பந்தம் தொடர்பான ஆஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதே சமயம், இந்த ஒப்பந்தம் முட்டாள்தனமானது என்று விமர்சித்திருந்த தற்போதைய அமெரிக்க அதிபர் டொனல்ட் ட்ரம்ப், இதற்கு அண்மையில் ஒப்புதல் அளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யோகர் சுவாமிகளின் உருவச்சிலை திறப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள யோகர் சுவாமிகளது திருவுருவச்சிலை திறப்புவிழாவும் அழகியற் கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

யோகர் சுவாமிகளது திருவுருவச்சிலை திரைநீக்க நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைமாமணி சிற்பி து.குமரநாதனும், கௌரவ விருந்தினராக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த க.நிஜலிங்கமும் கலந்து கொள்வர்.

சிற்பியின் பெற்றோர்களான க.துரைசிங்கம், திருமதி து.ராணி ஆகியோர் சிலையை திரைநீக்கம் செய்து வைப்பர்.

அழகியற் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரையை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்துவர். (ஐ)

## நாளை

29.05.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: புனர்பூசம் மா. 6.57 வரை
திதி: சதுர்த்தி பி.ப. 4.54 வரை

சுபநேரம் : 11.52 – 12.22 வரை
இராகுகாலம் : 7.22 – 8.52 வரை

# அரசு கொடுத்த வாக்குறுதிகளை நம்புகிறோம்!

## அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறுகிறார்


கொழும்பு, மே 28

அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கின்றது. அதனை நாம் இன்னும் நம்புகின்றோம் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் சமகால பிரச்சினை, சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு தொடர்பாக குருநாகல் கண்டி றிச் ஹோட்டலில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாசபையின் குருநாகல் கிளை ஏற்பாடு செய்த கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-





உலமா சபையும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இந்த நல்லாட்சியை உருவாக்குவதில் பெரிய பங்களிப்பை நல்கியவர்கள். பல்வேறு அர்ப்பணிப்புகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

நமது சமூகம்படுகின்ற வேதனைகள் துன்பதுயரங்கள் அழிவு மற்றும் நஷ்டங்களில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த இரு சாராருக்கும் பெருமளவில் இருக்கின்றது.

அதேபோன்று நல்லாட்சி அரசிடம் சமூகத்தைப் பாதுகாக்குமாறு கோருவதற்கும் எங்களுக்கு அத்தனை உரிமைகளும் இருக்கின்றது. எனவே, தான் தற்போது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையை கருத்திற்கொண்டு உலமாக்களும் அரசியல் தலைமைகளும் ஒன்றுபட்டு இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றோம்.

அரசியலுக்கப்பால் இயக்க வேறுபாடுகளுக்கப்பால் கருத்து முரண்பாடுகளை மறந்து விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டியது நமது தலையாய கடமையாக இருக்கின்றது.

இவ்வாறான ஓர் இக்கட்டான கால கட்டத்தில் முஸ்லிம்களாகிய நாம் நமக்குள் இருக்கும் சிறு சிறு முரண்பாடுகள் மற்றும் மதக் கடமைகளை நிறைவேற்றுவதில் கொண்டுள்ள சிற் சில வேறுபாடுகளை பெரிதாக்கிக் கொள்ளாமல் அவைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

அவ்வாறான பிரச்சினைகள் இந்தச் சந்தர்ப்பத்தில் எழுந்தால் மாற்று சமூகத்தவர்கள் இதனால்தான் முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினை ஏற்பட்டதென்று கூறுவதற்கு அது வாய்ப்பாக அமைந்து விடும்.

பொலிஸாரும் அந்தக் கோணத்திலேயேதான் பிரச்சினைக்கான தீர்வைத் தேடிக் கொண்டிருப்பர். இது நமக்கு ஆபத்தாகவே முடிந்து விடும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.

அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றது. அதனை நாம் இன்னும் நம்புகின்றோம். முஸ்லிம் சமூகம் பொறுமையைக் கடைப்பிடிப்பதுடன் எதிர் வினைகளுக்கு ஆட்படாமல் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் இந்தப்பிரச்சினைக்கு முடிவு கட்டலாம்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் ஜம்இய்யதுல் உலமாவின் குருநாகல் கிளை தலைவர் இம்றான் மௌலவி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.சி. அலவத்துவெல ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

# ஆஸி. அணுசக்தி விஞ்ஞான நிறுவனத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம்!

கொழும்பு, மே 28

ஆஸ்திரேலியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டின் அணுசக்தி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அவதானிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.



புதிய மருந்து உற்பத்திக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் பிரிவை நேற்று முன்தினம் ஜனாதிபதி பார்வையிட்டுள்ளார்.

தைரொயிட் மற்றும் ஈரல் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் முறை பற்றி இந்த நிறுவனத்தால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதே மசயம், அதற் காக அணுசக்தியை உபயோகித்து மருந்துகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஜனாதிபதிக்குநிறுவனத்தின் செயற்பாடு தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்திய நிறுவனத்தின் தலைவர் பீற்றர் சன், நிலத்தடி நீரில் அடங்கியுள்ள தீங்குபயக்கக்கூடிய உலோகங்களை இனங் காண்பதற்கும் இந்த அணுசக்தி தொழில்நுட்பத்தை உபயோகிக்க முடியுமென தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படும் சிறுநீரக நோய் நிவாரணம் பற்றிய ஆய்வுகளை மேற் கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு இணங்கிய இந்த நிறுவனத்துக்கும் இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் ஜனாதிபதியின் விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜோன் அமரதுங்க, பிரதி அமைச்சர்களான ஹர்ஷ டி சில்வா, அஜித் பீ. பெரேரா மற்றும் ஆஸ்திரேலியாவிற்கான தூதுவர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். (க)

# பெண்ணைக் காப்பாற்றப் போராடிய சிப்பாய் மரணம்!



கொழும்பு, மே 28

வெள்ள அனர்த்தத்தில் சிக்கிய பெண்ணொருவரைக் காப்பாற்ற முனைந்த விமானப் படை சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

காலியில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுப்பட்ட போது, ஹெலிகொப்டரில் இருந்து கீழே வீழ்ந்த நிலையில் காயமடைந்த விமானப்படைச் சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

வெள்ளத்தில் சிக்கியிருந்த பெண் ஒருவரை கேபிள் உதவியுடன் ஹெலிகொப்டருக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது விமானப் படை சிப்பாய் கீழே தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விமான படையில் பணியாற்றும் வை.எம்.எஸ்.யாப்பாரத்ன என்ற 38 வயதுடைய சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துலிஎத்த என்ற தேயிலைத் தொழிற்சாலையில் சிக்கியிருந்த இரண்டு பெண்களில் ஒருவரை காப்பாற்றிவிட்டு மற்றப் பெண்ணைக் காப்பாற்றுவதற்காக கேபிள் மூலம் கீழே இறங்கும் போதும் அவர் 30 அடி உயரத்தில் இருந்து விழுந்துள்ளார்.

பின்னர் வேறு விமானப் படை உறுப்பினரால் அவர் காப்பாற்றப்பட்டு கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


விற்பனைக்கு

வவுனியாவில் Jhon Door Tractor றொட்டவிட்டர், வீல் (up RC XXXX) 2012 Model No 5047D விற்பனைக்கு உண்டு. விலை 13.5 லட்சம் பேசித் தீர்மானிக்கலாம்.
0771754024,0702518224 (C/462)

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரில்

AUTO CAD
Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D
Computerized
Accounting
AccPack + Quick book + M.Y.O.B. + Tally
Hot Line : 0777-596148

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Mullaithivu. Tel : 021-4927497
Mannar. Tel : 023-4924124

15 வருட நிறைவை முன்னிட்டு 50% விசேட கட்டணக்கழிவு Only 50 Students

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : ~~15250/=~~ Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : ~~21000/=~~ Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124



## இனவாத விஷத்தூவல்கள்: விளைந்து நிற்கும் விபரீதங்கள்

''எழில்மிகுந்தது இலங்கை நாடு. அத்தோடு இயற்கை வளமும் சூழ்ந்ததான நாடு...'' - என்று எல்லோராலும், முன்னொரு காலத்தில் ஏற்றிப் போற்றிப் புகழப்பட்டது தான் இந்த இலங்கை நாடு. இன்று இந்த நாட்டில் இன வாதம் எனும் உணர்வு இங்குள்ள பெரும் பான்மை இனத்தவர்களில் பலருக்குள் தோற்றம் பெற்று நிற்பதனால், இன்றுவரை இன, மத, மொழி யாவற்றுக்குள்ளும் பிரிவினைகள் பூதாகரமாக உருவெடுத்து நிற்கின்றன. இதனால் பிரச்சினைகள் பல தோற்றம் பெற்று வருகின்றன.

எழிலும், இயற்கை வளமும் நிறைந்த இந்த நாட்டில், இன வாதம் எப்படித் தோற்றம் பெற்றது? என்பது குறித்து, சற்றுப் பின் நோக்கிப் பார்க்கும் போது, முற்றுமுழுதாக சுயநலப் போக்குக் கொண்ட அரசியல்வாதிகளே காரணமாக அமைகின்றனர்.

பதவி ஆசைகளின் நிமித்தம் மக்களின் வாக்குகளைக் கவர்வதற் காக, அமரர் டி.எஸ்.சேனநாயக்காவில் இருந்து தோற்றம் பெற்ற இன வாதம், எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் - ''நான் ஆட்சிக்கு வந்தால், 24 மணிநேரத்துக்குள் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவேன்'' எனும் வார்த்தைகளோடு உத்வேகம் எடுத் துக் கொண்டது.

பண்டாரநாயக்காவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மற்றும் டி.பி.விஜயதுங்க போன்றவர்க ளோடு, அமைச்சர்களாக இருந்த அமரர்கள் சிறில்மத்தியூ, காமினி திசா நாயக்கா, அத்துலத்முதலி... ஆகியோரிடமும் மோசமான இனவாதச் சிந்தனைகளும், பிரிவினைவாதப் போக்குகளும் இருந்தன.

அன்றைய காலகட்டத்தில் (1950 களின் பிற்பாடு) அரசியல் வாதிகளே மக்களைத் தம்வசம் ஈர்ப்பதற்காக, இனவாதிகளாக மாறினர் என்பது வெளிப்படையானது. இந்த இனவாதிகள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள, படிப்பறிவற்ற, பாமர, அடித்தட்டு வர்க்கத்தில் உள்ள சிங்கள மக்கள் மத்தியில் தங்கள் இனவாத வித்துக்களைத் தூவத் தொடங்கினார்கள்.

இதன் நிமித்தம் - ஒருவரை ஒருவர் புரிந்து, மதித்து, விட்டுக் கொடுத்து ஒற்றுமை உணர்வோடு வாழ்ந்த தமிழ் - சிங்கள மக்களிடையே விரிசல் உருவாக ஆரம்பித்தது. நாளடைவில் ஒரு வருக்கொருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினார்கள்.

அதன் விளைவு -

1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் இனக் கலவரங்கள் நடந்தேறி முடிந்தன. அதிலும் 1958, 1983 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்கள் "தமிழ் மக்களுக்கெதிரான வன்முறை யின் உச்சம்" என்று பல ஊடக அரசியல் விமர்சகர்களின் கருத்தா கவும் அமைந்தது.

1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் கொழும்பு உட்பட தென்னிலங்கை எங்கும் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறை இனவாத ஆட்சியாளர்களின் குண்டர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கொலைகள், கொள்ளைகள், பெண்கள் மீதான வல்லுறவுகள், சொத் துடைமைகள் அழிப்பு; அபகரிப்பு... எனப் பல்வேறு வகையான அராஜக நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமிழ் மக்களைப் பார்த்து ஒரு வேண்டுகோளை விடுக்கின்றார்.

"உங்களுக்குப் போர் வேணுமா? சமாதானம் வேணுமா? போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம.''

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் உள்ளக்கிடக்கையில் ஊறிக்கிடந்த இனவாத உணர்வு அப்பட்டமாக வெளிப்பட்டது அன்று.

இவர் மட்டுமல்ல, இவரோடு சேர்ந்து இவரது அமைச்சரவை யில் இருந்த அத்துலத்முதலி, ''இது அடங்கிக் கிடந்த சிங்கள மக்க ளின் உணர்வுபூர்வமான வெளிப்பாடு" - என்றும் மற்றும் காமினி திசா நாயக்கா, ''இனியும் சிங்கள மக்களால் பொறுத்துக் கொள்ள முடி யாது'' - என்றும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி, அந்த இனவாத வேள்வித் தீயை நியாயப்படுத்தி நின்றார்கள்.

அப்பொழுதுதெல்லாம் காவி உடை அணிந்த தேரர்கள் தங்கள் இனவாதக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாமல், அரசியல் வாதிகளின் இனவழிப்புச் செயல்களுக்கு மறைமுகமாக ஆதரவ ளித்து அவர்களை ஊக்கப்படுத்தியே வழிநடத்தினார்கள்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரமானது தமிழர்களுக்கு உள, உடல் சார்ந்த ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது ஒருபுறம் இருக்க, மறுபுறம் சுதந்திரத்துக்கான எண்ணத்தையும் தனிநாட்டுக்கான கோரிக்கையையும் தோற்றுவித்துச் சென்றுவிட்டது.

இதன் விளைவு -

'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பு தோற்றம் பெற்று, அது இறுதியில் முள்ளிவாய்க்காலுடன் முடிவடையும் வரை சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான் இனவழிப்புத் தொடரவே செய்தது.

முள்ளிவாய்க்காலுடன் தமிழ் மக்களுக்கான போராட்டம் முடக் கப்பட்ட பின்பு, இனவாதச் செயற்பாடுகளும் அதன் வெளிப்படைத் தன்மையும் அதிகாரத்தில் உள்ள ஆட்சியாளர்களிடமிருந்து வெளிப் படும் கனதியை விட, காவி உடை தரித்த பௌத்ததேரர்களிடமி ருந்தே தற்போது வெளிப்படுகிறது. குறிப்பாக - ஞானசார தேரர் மற்றும் சுமனதேரர் இன்னும் வெளிச்சத்துக்கு வராத காவி உடை தரித்தவர் களின் செயற்பாடுகளைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

குருவிக்குஞ்சு

# ஞானசார தேரரைக் கைது செய்து சிறைக்குள் கொலை செய்ய முயற்சி

## ராவணா பலய அமைப்பு பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடு

கொழும்பு, மே 28

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை கைது செய்யும் போர் வையில் சிறைக்குள் வைத்து படுகொலை செய்யும் முயற்சி கள் இடம் பெறுகின்றன என்று பொதுபலசேனாவுக்கு ஆதர வான ராவணா பலய என்ற அமைப்பு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்துள்ளது.

ஞானசார தேரரைக் கைது செய்து படு கொலை செய்து அந்தக் குரலை மௌனிக்கச் செய்தாலும் ஆயிரக் கணக்கான ஞானசாரர்கள் தற்போதே எழுந்துவிட்டார்கள்என்றும்அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதி ரான வன்முறையை ஏற்படுத்தி வருவதாக ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸ் தலைமை யகம் மற்றும் ஜனாதிபதி, பிரத மரிடம் முஸ்லிம் அமைச்சர் களும் நாடாளுமன்ற உறுப் பினர்களும் அண்மையில் முறையிட்டிருந்தனர்.

இதனையடுத்து ஞானசார தேரரை கைது செய்வதற்கு பொலிஸார் முயற்சித்ததோடு குருநாகல் பகுதியில் வைத்து அவரை சுற்றிவளைத்தனர். எனினும் அன்றைய தினம் ஞான சார தேரர் கைது செய்யப்பட வில்லை.

இந்த நிலையில் பொலி ஸாரின் இந்த நடவடிக்கை மனித உரிமை மீறும் செயல் என்று தெரிவித்து பொதுபல சேனாவுக்கு ஆதரவாகச் செயற் படும் மற்றுமொரு பேரினவாத அமைப்பான ராவணா பலய அமைப்பு நேற்றைய தினம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்தது.

இதனையடுத்து ஊடகங் களுக்கு கருத்து வெளியிட்ட இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர், கல கொட அத்தே ஞான சாரதேரர் மீது காணப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் அவரை கைது செய்வதற்கான முயற்சிகளால் அவருடைய மனித உரிமைகளும் மீறப்பட் டுள்ளன.

இது தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளோம். பாரதூ ரமான வகையில் பொலிஸார் மனித உரிமைகளை மீறு வதை யும் முறைப்பாட்டில் சுட்டிக் காட்டியுள்ளோம்.

ஒருவரைக் கைது செய்ய வேண்டுமென்றால் அதற்கான காரணத்தை சந்தேக நபருக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் காணப்படுகிறது. எனினும் தெளிவுபடுத்தலோ, நீதிமன்ற உத்தரவோ அல்லது பிடியாணையோ இல்லாமல் குருநாகல் பகுதியில் வைத்து பொலிஸார் என்று கூறிக்கொள் ளும் 200 இற்கும் மேற்பட்ட வர்கள் ஞானசார தேரரை பலாத்காரமாக கடத்த முயற் சித்தனர். அவரை கைது செய்து அரசியல் கைதியாகச் சிறை பிடிக்க முயற்சிக்கின்றனர்.

அதேபோல, அவரைக் கைது செய்யும் போர்வையில் கடத் திச் சிறைக்குள் வைத்துக் கொலை செய்யும் முயற்சியும் இடம் பெறுகிறது என்று எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அந்தச் சூழ்ச்சிக்குப் பயன் படுத்திய அத்தனை ஆவணங் களும் எம்மிடம் உள்ளன. எந்தப் பிரச்சினையானாலும் அதனை பேச்சு நடத்தி தீர்வுகாண்பதற்கு நாங்கள் தயார்.

அதைவிடுத்து ஞானசார தேரரை கைது செய்து குரலை ஓயச்செய்ய முடியுமெனநினைத் தால் அது தவறு. ஞானசார தேர ரைக் கைது செய்து கொலை செய்தால் அவரைப் போன்று இன்னும் ஏராளமான ஞானசா ரர்கள் எழுந்துவிட்டார்கள் என்ற செய்தியை தெரிவிக்க விரும் புகிறோம்.- என்றார். (ஐ)

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 28

பிதாபோல்கஸ்பேர்சஸ் நினை வுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பொது நூலகச் சிற்றுண் டிச்சாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிதா ஜெயசீலன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ஐ)

## கவலை வெளியிட்டார் முன்னாள் ஜனாதிபதி!



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

வெள்ளம் மற்றும் மண் சரிவால் உயிரிழந்தவர்க ளுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட் டுள்ள அனர்த்தம் தொடர் பில் அவரது 'டுவிட்டர்'பக் கத்தில் மஹிந்த கருத்து வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்காகவும் நாட்டு மக்கள் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றமை அவ சியம் எனவும் மஹிந்த அந் தப் பதிவூடாகக் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஷிரந்தி ராஜபக்ஷ உதவி!





கொழும்பு, மே 28

சீரற்ற காலநிலையால் தென் மாகாணம் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. பெரும்பாலான நகரங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதேசமான தங்காலையும் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட் டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் தேவையான அத்தியாவசிய பொருள்களையும் வழங்கினார். (ஐ)

# விடுதலைப் புலிகளை அழிக்க ஆலோசனை வழங்கிய பஞ்சாப் முன்னாள் பொலிஸ் பணிப்பாளர் கில் மரணம்!



கொழும்பு, மே 28

விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக இலங்கையின் முன்னைய சந்திரிகா குமாரதுங்க அரசு ஆலோசனைகளை வழங்கிய, இந்தியாவின் பஞ்சாப் மாநில முன்னாள் பொலிஸ் பணிப்பாளர் கே.பி.எஸ்.கில் நேற்றுமுன்தினம் காலமானார்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு நேற்று முன்தினம் பிற்பகல் மரணமானார். இறக்கும்போது அவருக்கு வயது 82 ஆகும்.

பஞ்சாப் மாநிலத்தில் காலிஸ்தான் எனப்படும் தனிநாடு கோரி நடத்தப்பட்ட சீக்கியர்களின் போராட்டத்தை கொடூரமான முறையில் ஒடுக்கியவர் கே.பி.எஸ்.கில்.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தனிநாடு கோரும் போராட்டத்தை ஒடுக்குவதற்காக இவரது தலைமையில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வந்த இவர், மற்றொரு தரப்பினரால் கிளர்ச்சி ஒடுக்கும் நிபுணராகவும் மதிக்கப்பட்டு வந்தார்.

இதனால், இவரை குஜராத்தில் நரேந்திர மோடி முதல்வராக இருந்தபோது, சிறப்பு பாதுகாப்பு ஆலோசகராக நியமித்திருந்தார். சட்டீஸ்கர் அரசு இவரது பாதுகாப்பு ஆலோசனைகளைப் பெற்றிருந்தது.

2000ஆம் ஆண்டு மே மாத நடுப்பகுதியில் விடுதலைப் புலிகள் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும், ஓயாத அலைகள் -3 நடவடிக்கையை மேற்கொண்டு சந்திரிகா அரசை திணறடித் திருந்த நேரத்தில், கே.பி.எஸ்.கில் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சந்திரிகா அரசு இவரை கொழும்புக்கு அழைத்து, விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான ஆலோசனைகளைப் பெற்றிருந்தது.

இலங்கை அரசால் தனக்கு தனிப்பட்ட முறையிலேயே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்றும் இதற்கும் இந்திய அரசுக்கும் தொடர்பில்லை என்றும், கே.பி.எஸ் கில் அப்போது கூறியிருந்தார்.

அதேவேளை, இவர் விடுதலைப் புலிகளால் பூகோள பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று எச்சரிக்கும் வகையில் பல்வேறு கட்டுரைகளையும் எழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## வெளிநாட்டு பெண்ணுடன் இலங்கையர் கைது!

கொழும்பு, மே 28

பயண ஆவணங்கள் எதுவுமின்றி இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இலங்கையருடன் துருக்கி நாட்டுப் பெண் ஒருவரையும் இந்திய பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். இலங்கையை சேர்ந்த உமதர்ஷன் என்ற நபரே இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

SPOKEN SINHALA
அரச கருமமொழித் திணைக்களத்தின் பரீட்சைக்கான பாடநெறி
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Hot line : 0777-596148
BRITISH COLLEGE of Education
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497

## மழை வெள்ள மீட்புப் பணிகளில் துருப்புக்காவி கவச வாகனங்கள்!



கொழும்பு, மே 28

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் இலங்கை இராணுவத்தினரின் பிரிஆர் துருப்புக்காவி கவச வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினரிடம் உள்ள பிரிஆர்-80 ரக துருப்புக்காவி கவச வாகனங்கள் ஆழமற்ற நீர்ப்பரப்பிலும் ப்யணம் செய்யக் கூடியவை.

இந்த வகையான கவச வாகனங்களை மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக செல்லவுள்ள இலங்கைப் படையினரின் பயன் பாட்டுக்காக, இலங்கை இராணுவம் தயார்ப்படுத்தி வைத்திருந்தது.

இந்த நிலையில், இலங்கையின் தெற்கு, மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் கடந்த வியாழக்கிழமை பெய்த கடும் மழையை அடுத்து நேற்று முன்தினம் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், இலங்கை இராணுவத்தின் மீட்புக் குழுக்கள் களம் இறக்கப்பட்டுள்ளன.

800 இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்

அத்துடன், வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளில் இராணுவத்தினரின் ஆறு பிரிஆர் கவச வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யு.என். எனப் பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளை நிற கவச வாகனங்களே மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. (க)

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
இலங்கையில் IELTS பரீட்சை நிலையமாக
அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

## இரண்டு கடற்படைக் கப்பல்களில் இந்தியாவின் உதவிப் பொருள்கள்!





கொழும்பு, மே 28


இலங்கையில் வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப் பொருள்களை இரண்டு கடற்படைக் கப்பல்களில் இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளால் பலர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இந்த அனர்த்தங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாக தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று, இந்தியா இரண்டு கப்பல்களில் உதவிப் பொருள்களை அனுப்பியுள்ளது.

இந்தியக் கடற்படையின் கப்பல் ஒன்று உதவிப் பொருள்களுடன் நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. மற்றொரு கப்பல், நாளை கொழும்புக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# உலக சாதனை படைக்கும் முயற்சியில் பெண் விமானி!

ஆப்கானிஸ்தானில் பிறந்த பெண் விமானி ஒருவர் தனியாக உலகம் முழுவதும் விமானத்தில் சுற்றி உலக சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளார்.

ஷயஸ்தா வயஷ் என்ற பெண் விமானி, சுமார் 40 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பறந்து உலக சாதனை படைக்கத் திட்டமிட் டுள்ளார்.

மேலும் தனியாக தனது பயணத்தை அமெரிக்காவின் புளோரிடா. மாநிலத்தி லுள்ள டேடோனா கடற்கரை விமான நிலையத்திலிருந்து இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பித்துள்ள நிலையில், அவர் ஸ்பெயின், எகிப்து மற்றும் இந்தியா உள்ளிட்ட 18 நாடுகளுக்குச் செல்ல முடிவு செய்துள்ளார்.

சோவியத் போர் இடம் பெற்ற காலத்தில் ஆப்கானிஸ்தான் அகதிகள் முகா மில் பிறந்துள்ள அவர், அமெரிக்காவில் விமானி பயிற்சியைப் பெற்று, ஆப்கானிஸ்தான் பயணிகள் விமானத்தின் மிக இளமை யான விமானியாகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அழிவடைந்து வருகிறது

## மொஹெஞ்சதாரோ



உலகின் ஆதிகால நாகரிகங்களுள் முக்கியமான ஒன்றாகிய மொஹெஞ்சதாரோ படிப்படியாக அழிவடைந்து வருவதாக தொல்லியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆதிகால நாகரிகத்தின் மிக முக்கிய கேந்திரமாகக் கருதப் படுவது மொஹெஞ்சதாரோ. இது, பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ளது. கிறிஸ்துவுக்கு முன் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மொஹெஞ்சதாரோ வாசிகளால் கட்டப்பட்ட கழிவகற்றும் அமைப்பு மற்றும் நீர்ப் பங்கீட்டுப் பொறிமுறை என்பன இங்குதான் இருக்கின்றன.

சுமார் ஐயாயிரம் ஆண்டு பழைமையான இந்த நாகரிகம் எவ்வாறு அழிந்தது என்பது இதுவரையில் மர்மமாகவே இருக்கிறது.

அந்தப் பகுதியில் உரிய முறையில் ஆய்வுகளை நடத்தினால் மொஹெஞ்சதாரோ காலத்து மக்களின் வாழ்க்கை முறை உள்ளிட்ட பல இரகசியத் தகவல்களைக் கண்டறியலாம் என்ற போதும், அதிகரித்து வரும் வெப்ப நிலை மற்றும் உரிய பராமரிப்பு இல்லாததால் அந்தப் பகுதி வேகமாக மேலும் சிதைவடைந்து வருகிறது.

பாகிஸ்தான் அரசு இதை உரிய முறையில் பாதுகாக்கத் தவறி வருவதால், விரைவில் உலக சரித்திரத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதி அழிந்து போய்விட வாய்ப்புள்ளது என்று பதறுகிறார்கள் தொல்லியல் ஆய்வாளர்கள்.

# நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் எடுத்து வந்த பை ஏலத்துக்கு!

சந்திரனில் முதன் முதலாக காலடி வைத்த 'நாசா' விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அவருடன் சென்ற புஷ் ஆல்டிரின் ஆகியோர் சந்திரனிலிருந்து மண் எடுத்து வந்த பை ஏலத்துக்கு விடப் படவுள்ளது.


இந்த ஏலம் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

அப்பலோ- 12 விண்கலம் மூலம் 48 ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரனுக்குச் சென்று, அங்கிருந்து 500 கிராம் மண் மற்றும் 12 பாறை படிவங்கள் போன்றவை கொண்டுவரப்பட்டன. இவை நினைவு சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

இந்நிலையில் சந்திரனில் இருந்து மண் எடுத்து வருவதற்கு பயன்படுத் தப்பட்ட 'பை' எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள 'சோத்பீ' மையத்தில் ஏலம் விடப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த பை சுமார் 56 கோடி ரூபாவுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





பை சுமார் 56 கோடி ரூபாவுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

# ஆஸ்திரேலியாவை திரும்பிப் பார்க்க வைத்த திருமணம்





ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட ஜோடிக்கு பிரம்மாண்டமான முறையில் திருமணம் அரங்கேறியுள்ளது.

சிட்னியில் வசித்து வருபவர் Divya Dhingra. இவருக்கும் இந்தியாவில் நிதித் துறையில் வேலை பார்க்கும் Gurjeb Sigh Kohli என்னும் நபருக்கும் நாடே திரும்பி பார்க்கும் வகையில் ஆஸ்திரேலியாவில் பிரம்மாண்டமாக திருமணம் நடைபெற்றது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்ற Rosehill கார்டனுக்கு ஹெலியில் வந்து இறங்கிய தம்பதிகளுக்கு வாண வேடிக்கைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதே போல எல்லோரும் கேக்-ஐ சிறிய கத்தியால் தானே வெட்டுவார்கள். ஆனால் இந்த தம்பதி 2 மீற்றர் உயரத்தில் செய்யப்பட்ட பிரம்மாண்ட கேக்கை வாளைக் கொண்டு வெட்டினார்கள்.

திருமண பிரமாண்டம் இதோடு நிற்கவில்லை. பொலிவுட் சினிமா பாணியில் ஆடலும் பாடலும் நிகழ்ச்சிகள், பிரேசில் நடனக் கலைஞர்களின் நடனம் எனக் களை கட்டியது.

இந்தியாவின் டில்லிக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் அடிக்கடி பறக்கும் இந்தத் தம்பதிகள் இதுவரை கடந்த 6 மாதங்களில் 5 முறை வித்தியாசமான முறையில் திருமண நிகழ்வை பிரமாண்டமாக நடத்தியுள்ளார்கள்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து 1,500 விருந்தினர்கள் வந்திருந்தனர்.

இது குறித்து Divya கூறுகையில், திருமண வரவேற்பு நிகழ்வை சிறப்பாக நடத்த நாங்கள் கடுமையாக உழைத்தோம்.

எங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் எங்கள் மீது காட்டிய அன்பால் நாங்கள் மிகவும் நெகிழ்ந்து போயுள்ளோம் - என்றார்.

சீக்கிய மதத்தைச் சேர்ந்தவரான இவர், இந்திய கலாசாரத்தைப் பின்பற்றுகின்றமை எங்களுக்கு மிக முக்கியம். எங்களின் அடுத்த சந்ததியினரும் இதைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகிறார் எனக் கூறியுள்ளார்.

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில்

## தேர்த்திருவிழா சிறப்பு மலர்- 28.05.2017





# அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இணுவையம்பதிப் பிள்ளையார்

## ஆலயக் குருவின் ஆசியுரை



வரலாற்றுப் புகழ் பெற்ற ஆலயமான எங்கள் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் ஏவிளம்பி வருட மகோற்சவம் இப்போது நடை பெற்றுக் கொண்டிருக்கிற இன்றைய தினம் தேர்த்திரு விழா நடைபெறுகிறது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடி பஞ்சமுகப் பிள்ளையார் தேரில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டுவருவது கண் கொள் ளாக் காட் ியாகும். மக்கள், பாற்காவடிகளா கவும் பறவைக் காவடிகளாகவும் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் போது மெய் சிலிர்க்கும். இத் தேர்த் திருவிழாவானது எங்கள் ஊரில் நடைபெறும் ஒரு பெரிய பக்தி திருவிழாவாகும்.

சிவஸ்ரீ சோ.அரவிந்தக்குருக்கள்
*பிரதம குரு.*
இணுவில் பராஜ சேகரப்பிள்ளையார் கோயில்.

யானை முகமும் மூன்று விழிகளும் நான்ற வாயையுமுடைய ஞானமே வடிவான விநாயகப்பெருமான் பரராஜசேகரன் என்னும் திருநாமத்துடன் தெய்வீகத் திருவுருவும், வைதீகத் திருவுருவம் மிக்க இணுவையம்பதியில் கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றான்.

எம்பெருமான கோயில் கொண்ட வரலாற்றைக் கூறுவதில் நாம் பெருமை அடைகின்றோம். இவ்வாலயமானது இற்றைக்கு ஆறு நூற்றாண்டுகளுக்குப் பழைமை வாய்ந்த பெருமைக்குரியது. மேலும் அரச பரம்பரையோடு தொடர்புடையபெருமையுடையது. யாழ்ப்பாண அரசின் சிம்மாசனப் பெயர்களில் ஒன்றான 'பரராஜ சேகரன்' என்னும் பெயர் தாங்கி நிற்கின்றது இந்த ஆலயம்.

14,15 ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தை ஆரியச்சக்கரவர்த்திகள் ஆண்டு வந்தனர். அவர்களில்பதினோராம்தலைமுறையில் வந்த பரராஜசேகர மன்னன் இவ்வாலயத்தைக் கட்டினான். இதனால் இவ்வாலயத்துக்குப் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் என்னும் திருநாமம் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கால கட்டத்தில் இலங்கை அந்நியராட்சிக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் அமைதியற்ற ஒரு சூழ்நிலை காணப்பட்டது. சமயப் பூசல்களும், போட்டிகளும் நிறைந்த காலமாக இது இருந்தது. இக் காலத்தில் சமயக் கோட்பாடுகளை வளர்க்க, வழிபாட்டு முறைகளை வளர்க்க, கலைகலாசாரத்தை வளர்க்க ஆலயங்கள் பயன்பட்டன. காலத்தின் தேவையை உணர்ந்தனர் ஆரியச் சக்கரவர்த்திகள்.

ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரை இராசதானியாக்கி யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தனர். இவர்கள் சமயப் பற்றுடையவர்களாகக் காணப்பட்டனர். தென்னாட்டின் கோவில் போன்று ஈழத்திலும் கோயில்களைக் கட்டுவதில் மன்னர்கள் ஆர்வம் காட்டினர். கோபுரங்களும் கோயில்களும் சமய வளர்ச்சியைத் தூண்டின.

அந்தக் கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் ஆலயங்கள் தோற்றம் பெற்றன. எனவே, ஆரியச் சக்கரவர்த்திகள் மரபில் வந்த பரராஜசேகர மன்னன் ஆன்றோரும், சான்றோரும் மிக்கதும், சைவவேளாண் குடிகள் வாழ்கின்றதுமான இணுவை என்னும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து விநாயகப் பெருமானுக்கு மாட மாளிகை, கூடகோபுரங்களுடன்

### அனைவரையும் ஈர்க்கும் ஐந்து தள இராஜகோபுரம்

கூடிய ஆலயத்தை எழுப்பி வழிபட்டு வரலாயினான். இதனை மெய்ப்பிக்கும் வகையில் ஆலய உட்பிரகாரத்தில் மன்னனும் பிரதானிகளும் வழிபடுங்காட்சி சிற்பமாகவும், ஓவியமாகவும் வரையப்பட்டுள்ளன. மேலும் கலாநிதி சிற்றம்பலத்தின் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் நூலிலிருந்தும் இதனை அறியலாம்.

பரராஜசேகர மன்னன் காலம் (1478-1519) வரையாகும். எனவே, இவ்வாலயமும் அத்தனைக்குப் பழைமை வாய்ந்ததாகும். பரராஜ சேகரன் போருக்குச் செல்லும் போது இப்பெருமானை வழிபட்டுச் சென்றார் எனவும், நூற்றுக்கும் அதிகமான இளநீர்க் குலைகள் யானை மேல் ஏற்றி வந்தும், குடம் குடமாகப் பால் கொண்டுவந்தும் அபிஷேகித்து வணங்கினான் என்றும் நாளும் வற்றாது குளம்போல் நின்ற இடம் குளக்கரை எனவும் வழங்குவதாயிற்று. மன்னனால் ஆலயத்துக்கு அருகே ஒரு கிணறும் திருக்கேணியும், திருமஞ்சக்கிணறும் தோண்டப்பட்டது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)


**வட இந்திய காசி சீரடி யாத்திரை**

★ஆரம்பம்:- 05.08.2017 ★யாத்திரீகர்:- 20
★நாள்கள்:- 15

டெல்லி, ஆக்ரா, தாஜ்மஹால் உட்பட பல வரலாற்றுத் தலங்களுக்கும் சீரடி பாபா தலத்துக்கும் சென்று வரலாம்.

தொடர்பு: கலாநிதி T.ஸ்ரீரங்கநாதன்
மகன் ராஜன்
0777680102, 0777362154

**பரராஜசேகரரின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்**

**நொதேன்**
கால்நடை வைத்திய நிலையம்
K.K.S Road, Inuvil.
T.p. 0773337146

**நியூ லங்கா பாம்**
பூங்கன்றுகள், பூச்சாடிகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள
K.K.S, Road, Inuvil.
Palaly Road Oorelu, West.
T.p.0776129343

**அம்பிகா பான்சி**
K.K.S Road, Inuvil.
T.p.021 2242074
**அம்பிகாபதி பான்சி**
கிறீன் பசார் றோட், யாழ்ப்பாணம்.
021 2225759.

**சக்திவேல்**
ஹாட்வெயார்
K.K.S Road, Inuvil.
T.p. 021 4921213

**அனுஷா பந்தல்**
இணுவில் கந்தசுவாமி கோவில் முன்பாக
T.p. 0779789467

**Telesoon**
Phone Shop
K.K.S Road, Chunnakam
T.p 021 2241552
Jaffna
T.p 021 2217995

**Pb Mobile**
phone Shop
All Phone Accessories
UNLOCK
banu724@gmail.com
T.P.0776636619, 0214545135
K.K.S Road, Chunnakam

**LITTLE MASTERS' MONTESOORI**
[அதி நவீன கணினி மயமாக்கப்பட்ட முன்பள்ளி]
நன்கு பயிற்றுவிக்கப்பட்ட போதியளவு முன்பள்ளி ஆசிரியர்கள்
CHILDREN'S PRESCHOOL
கே.கே.எஸ் றோட், இணுவில்.
[இணுவில் மத்திய கல்லூரிக்கு அண்மையில்]
T.p 0774172128

## முகநூலில் பேதுரு காசு - திருப்பீட செயலகம்

உலகளாவிய திருஅவையின் பல்வேறு தேவைகளுக்கும் மிகவும் தேவையில் இருப்போருக்கும் உதவுவதற்கென திருத் தந்தையருக்கு வழங்கப்படும் பேதுரு காசு என்ற உலகளாவிய கத்தோலிக்கத் திருஅவையின் நன்கொடை நடவடிக்கை குறித்து டுவிட்டர் இன்ஸ்டகிராம் ஆகிய சமூகவலைத்தளங்களுக்கு மேலதிகமாக முகநூலிலும் வெளியிடப்படும் என திருப்பீட செயலகம் அறிவித்துள்ளது.

காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL


உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான் 18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## 15 ஆவது பங்குத்தளத்தில் திருத்தந்தையின் ஆன்மீகப் பணி

திருத்தந்தை பிரான்சிஸ் உரோம் சான் பியர் தமியானி பங்குத்தளத்திற்கு மேற்கொள்ளும் பயணம் அவரின் 15 ஆவது மேய்ப்புப் பணிப் பயணமாகும். 1972இல் திருத்தந்தை அருளாளர் 6ஆம் பவுல் அவர்களும் 1988இல் திருத்தந்தை புனித 2ஆம் ஜான்பால் அவர்களும் இப்பங்குத்தளத்திற்கு சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய பெருவிழாவில் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர்



யாழ். மறைமாவட்டத்தின் புகழ்பெற்ற யாத்திரைத் தலமான செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயப் பெருவிழா மே மாதம் 26ஆம் திகதி யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. யாழ் ஆயர் செம்பியன்பற்று பங்குக்கு செல்வது முதற் தடவை என்கின்ற வகையில் திருப்பலிக்கு முன்னதாக புனித பிலிப்பு நேரியார் ஆலயத்துக்கு முன்பாக 200 மீற்றர் தூரத்தில் இருந்து கோலாகலாமாக பாண்ட் வாத்திய இசையுடன் அவர் அழைத்து வரப்பட்டார். திருநாளுக்கு முன்னைய தினம் நற்கருணைப் பெருவிழாவை யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் கலாநிதி ப.யோசவ்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்தார். தாளையடி செம்பியன்பற்று பங்கின் புதிய பங்குத்தந்தை புனித பிலிப் நேரியார் யாத்திரைத்தல பரிபாலகர் ஜீ. அருள்நேசன் அடிகளார் "இவ்வாண்டு செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் ஆலய பெருவிழாவுக்கு இங்கிலாந்து' கனடா இத்தாலி ஆகிய நாள்களில் இருந்து 10க்கு அதிகமான குடும்பங்கள் வந்து சிறப்பித்தமை மகிழ்வானது. யாழ் மறைமாவட்டத்தின் மிகப்பிரசித்தி பெற்ற செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார்ஆலயப்பெருவிழாவை இனிவருங்காலங்க ளில் இன்னும் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளோம்'' - என காலைக் கதிர்கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்துத் தெரிவித்தார்.

### உண்மையின் எண்ணங்கள்

## யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் யாத்திரைத்தலம்

யாழ் மறைமாவட்டத்தின் மிகப்பிரசித்தி பெற்ற பழம் பெருமை வாய்ந்த யாத்திரைத்தலம் பெற்ற செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் யாத்திரைத் தலம் ஆகும். புனித பிலிப் நேரியாரிடம் விளங்கிய பெரிதும் அறியப்படாத பண்பு மற்றவரை மகிழ்ச்சிப்படுத்துவதாகும். அவர் எப்போதும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். கவலை தோய்ந்தமுகத்தோடு வாழ்வதல்ல கிறிஸ்தவம். மாறாக மகிழ்ச்சியே கிறிஸ்தவத்தின் அடையாளம் என்பது அவருடைய கொள்கையாக இருந்தது. அவர் நகைச்சுவைக்குப் பேர் போனவர். எனவே எல்லா இடங்களிலும் மகிழ்ச்சியைப் பரப்புவதை அவர் தம் பணியின் இலக்காகக் கருதினார். அவர் சால்பு நிறைந்த எல்லாரையும் மதிக்கின்ற மகிழ்ச்சியோடு தோற்றமளிக்கின்ற ஒரு மனிதராக விளங்கினார். நன்முறையில் ஆடை அணிந்தவர் அவர். நகைச்சுவை மிகுந்தவர். செம்பியன்பற்று இந்தப் பெருவிழாவை இனிவருங்காலங்களில் இன்னும் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளோம் என புனித பிலிப் நேரியார் யாத்திரைத்தல பரிபாலகர் ஜீ. அருள்நேசன் அடிகளார் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அதனை நடைமுறைப்படுத்த அனைவரும் முயல்வோம்.

## திருப்பீடத்தின் தொடர்புத்துறையை பாராட்டிய திருத்தந்தை பிரான்சிஸ்

திருப்பீடத்தின் தொடர்புத்துறை இரக்கத்தின் நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்வதற்கு புதிய வழிகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை பாராட்டுவதாக திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார். திருப்பீடத்தில் தனித்தனியே இயங்கி வந்த வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், வலைத்தளம் என்ற அனைத்து தொடர்புத்துறை பிரிவுகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள திருப்பீடத் தொடர்புத்துறை வருகிற ஜூன் மாதம் இரண்டாம் ஆண்டை நிறைவு செய்கிறது. தற்போதைய தொடர்பு உலகத்தின் டிஜிட்டல் புரட்சிகள் ஒருங்கிணைப்பை அவசியமாக்குகின்றன. வரலாற்றைப் பாதுகாப்பதும் புதிய வழிகளில் பயணிப்பதும் திருப்பீடத் தொடர்புத்துறை சந்திக்க வேண்டிய சவால் என்பதையும் திருத்தந்தை தன் உரையில் வலியுறுத்திக் கூறினார்.

## யாழ். மறை மாவட்டத்துக்கு ஐந்து புதிய குருமணிகள்



யாழ் மறைமாவட்டத்தின் 2017ஆம் ஆண்டிற்குரிய புதிய குருக்களாக அலோசியஸ் அன்ரோ டெனிசியஸ் (ஒட்டகப்புலம் அமல உற்பவ அன்னை ஆலயப்பங்கு - தற்போது யாழ் திருமுழுக்கு யோவான் ஆலயப்பங்கு) - கென்றி இரோனியஸ் (பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயப்பங்கு) - றிச்சேட் ஒலிவர் றெறன்ஸ் (குருநகர், யாகப்பர் ஆலயப் பங்கு) - அந்தோனிப்பிள்ளை அன்ரன் துஸ்யந்தன் (புதுக்குடியிருப்பு சூசையப்பர் ஆலய பங்கு) - மேரியோசேப் துரைசிங்கம் அலோய் அருணேஸ் குமார் (சில்லாலை கதிரை மாதா ஆலயப்பங்கு) ஆகியோர் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ். மரியன்னை பேராலயத்தில் 15 ஜூன் 2017 அன்று திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். புதிய குரவர்கள் ஐவரும் 17 ஜூன் 2017 அன்று தத்தமது பங்கு ஆலயங்களில் முதற் திருப்பலியை ஒப்புக்கொடுப்பர். புதிய குருமணிகளின் பணி சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவச் செய்தி இதழ் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறது.

## அமெரிக்க ஐக்கிய நாட்டில் புனித் பியோவின் திருப்பண்டங்கள்

புனித பாத்ரே பியோ அடிகளாரின் திருப்பண்டங்கள் அடங்கிய பேழை 6 மே முதல் 1 ஒக்ரோபர் வரை அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல்வேறு மறைமாவட்டங்களில் பவனியாக எடுத்துச் செல்லப்படுகிறது. புனித பியோ அவர்கள் பிறந்ததன் 130 ஆண்டையும் அவர் புனிதராக உயர்த்தப்பட்டதன் 15ஆம் ஆண்டையும் சிறப்பிக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 1887 ஆம் ஆண்டு, மே மாதம் 25 ஆம் திகதி இத்தாலியில் பிறந்த புனித பியோ 1968ம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி தன் 82 ஆவது வயதில் இறையடி சேர்ந்தார். அவரை 2002 ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2 ஆம் ஜான்பால் புனிதராக உயர்த்தினார். அமெரிக்காவில் கல்வி உடல்நல பராமரிப்பு ஆகிய துறைகளில் பிறரன்புப் பணிகளை மேற்கொண்டு வரும் புனித பியோ அறக்கட்டளை இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

## திருத்தந்தை பிரான்சிஸ் – ட்ரம்ப் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் 24 மே 2017 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார்.

அவரது பிரசாரத்தின்போது கறுப்பினத்தவர்களுக்கு எதிராகவும் அகதிகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாக வெறுப்பைக் கக்கும் பேச்சை உதிர்த்து வந்தார். இதைக் கவனித்த திருத்தந்தை பிரான்சிஸ் "வேறொரு நாட்டினரை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணத்தில் எல்லையில் சுவர் எழுப்புவது பற்றி யோசிக்கும் ஒரு நபர் உண்மை கிறிஸ்துவர் அல்லர்'' - என்று கடுமையாக சாடினார். இதனால் இருவருக்கும் இடையில் இணக்கமான சூழல் இல்லாத நிலை இருந்தது. இந்நிலையில் ட்ரம்ப் மற்றும் திருத்தந்தை சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. இந்த சந்திப்பின் போது ட்ரம்ப் ''நமக்கு அமைதி பயனளிக்கும். உங்களுடனான சந்திப்பை மறக்கவே மாட்டேன். அனைத்துக்கும் நன்றி. நீங்கள் சொன்னதை நினைவில் வைத்துக் கொள்கிறேன்.'' - என்று கூறினார்.







# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




159

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### உள்ளக, வெளியக சுயநிர்ணய உரிமை

1970 ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடன விதிகள் சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக அம்சங்களைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றன.

சுயநிர்ணய உரிமை, வழமையான் உள்ளீடாக, அதாவது ஓர் அரசகட்டமைப்புக்கு உட்பட்டதாக நிறைவு பெற வேண்டும். ஐ.நா. சாசனத்தின் விதிகளுக்கு இசைவாக, ஒவ்வோர் அரசும் தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களுக்குச் சம உரிமையையும் சுயநிர்ணய உரிமையையும் வழங்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதனையே உள்ளக சுயநிர்ணய உரிமையாக 1970 ஆம் ஆண்டுப் பிரகடனம் எடுத்தியம்புகிறது.

சுதந்திரமான, இறையாண்மை உடைய அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இந்தப் பிரகடனம் உறுதிப்படுத்துகிறது. ஆனால் அதே வேளை, பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை வலியுறுத்தும் அரசுகள் சில தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும் என்கிறது இந்தப் பிரகடனம். அதாவது, எல்லா மக்களுக்கும் சம உரிமைகளையும் சுயநிர்ணய உரிமையையும் வழங்கி, இன, மத வேறுபாடின்றி அந்த நாட்டிலுள்ள மக்கள் சமூகத்தினர் அனைவரையுமே பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அரசுக்கு மட்டுமே பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் தகுதியும் தகைமையும் உண்டு என்கின்றது இந்தப் பிரகடனம்.

கியூபெக் மாநிலத்தின் பிரிவினைப் பிரச்சினை கனடாவின் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 1970 ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்தினதும் மற்றும் சர்வதேச நியமங்களதும் அடிப்படையிலேயே உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது. கனடாவின்பிரதேசஒருமைப்பாட்டுக்கும் கியூபெக் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கும் மத்தியிலான உறவு பற்றியதாகவே இந்தத் தீர்ப்பு அமைந்தது:-

*''இப்போதுள்ள அரசுகள், கனடா உட்பட, தமது பிரதேச ஒருமைப்பாட்டைப் பேண விளைவதற்கும், ஒரு 'மக்கள்' தமது சுயநிர்ணய உரிமையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முனைவதற்கும்மத்தியில்முரண்பாடு எழுவதற்கு அவசியமில்லை. எவ்வித பாகுபாடுமின்றி முழு மக்களையும் அல்லது மக்கள் சமூகங்களையும் தனது ஆட்சியமைப்பில் பிரதிநிதித்துவப்படுத்தி, உள்ளீடான ஆட்சி ஒழுங்கில் சுயநிர்ணயத்தின் விதிகளுக்கு ஓர் அரசு மதிப்பளிக்குமானால், சர்வதேச சட்டத்துக்கு அமைய தமது பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அந்த அரசுக்கு உரிமையுண்டு.''*

1970 ஆம் ஆண்டு ஐ.நா. பிரகடனத்திலும் கனடா உச்சநீதிமன்றத் தீர்ப்பிலும் வெளியக சுயநிர்ணய உரிமைக்கு, அதாவது பிரிந்து சென்று தனியரசை அமைக்கும் உரிமைக்கு இடமளிக்கப்படுகிறது.

*''ஓர் அரசின் பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இந்தப் பிரகடனம் உறுதிப்படுத்துகிறது. ஆனால், ஒரு சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்கு ஆளாக்கும் பொழுது, பிரிவினைக்கு இடமளிக்கும் விதிவிலக்காக, ஓர் அரசு தனது பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இழக்கிறது.''*

ஒருதலைப்பட்சமான பிரிவினையைப் பிரகடனம் செய்யும் பிரத்தியேகச் சூழ்நிலை பற்றிக் கனேடிய உச்சநீதிமன்றத் தீர்ப்பு கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறது:-

*''அரசியல் சுதந்திரத்தைத் தேர்ந்தெடுக்கும் அல்லது நிறுவிக் கொள்ளும் உரிமையான வெளியக சுயநிர்ணய உரிமை இரு வகுப்பினரான மக்களுக்கு (குடியேற்ற ஆட்சியின் கீழுள்ள மக்களுக்கு அல்லது அந்நிய ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களுக்கு) உரித்தாகும்.*

*''ஏகாதிபத்திய வல்லரசிடமிருந்து உறவை முறித்துக்கொண்டு, தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்குக் குடியேற்ற நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு என்பது இப்பொழுது விவாதத்துக்கு இடமற்ற உண்மையாகிவிட்டது.*

*''குடியேற்றத்துக்கு வெளியான சூழ்நிலையை எடுத்துக் கொண்டால், ஒரு மக்கள் சமூகம் அந்நிய அடக்குமுறைக்கும், ஆதிக்கத்துக்கும், சுரண்டல் முறைக்கும் ஆளாகும்பொழுது வெளியக சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டலாம்.*

*''ஒரு தலைப்பட்சமான பிரிவினைக்கு சுயநிர்ணய உரிமையைப் பாவிக்கும் மூன்றாவது சூழ்நிலை பற்றியும் சில மதிப்புரைஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த மூன்றாவது சூழ்நிலை பற்றிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போதும், ஒரு மக்கள் சமூகம் தனது உள்ளக சுயநிர்ணய உரிமையை அர்த்தபூர்வமான முறையில் அடைவதற்குத் தடை ஏற்படுமானால், இறுதி வழிமுறையாகப் பிரிந்து செல்லும் உரிமையைப் பிரகடனப்படுத்த அந்த மக்களுக்கு உரிமையுண்டு.''*

சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியக் அம்சங்கள் ஒன்றோடு ஒன்று இணையப்பெற்று இருக்கின்றன. மக்களின் சம உரிமைகளும், சுயநிர்ணய உரிமையையும் உள்ளீடாக நிறைவு செய்யப்படுவது அரசுகளின் கடப்பாடு என்பதை ஐ.நா. பிரகடனங்கள் வலியுறுத்தியுள்ளமையை நாம் பார்த்தோம். ஓர் அரசின் கட்டமைப்புக்கு உள்ளேயே இந்த உரிமைகள் (சம உரிமையும் சுயநிர்ணய உரிமையும்) நிறைவு காணப்பட்டால் மட்டுமே ஓர் அரசு பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்த முடியும். ஆனால், ஒரு மக்கள் சமூகத்துக்கு அதன் உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, அரசாட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டு, அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டால், அந்த மக்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமைக்கு, அதாவது பிரிந்துசென்று அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டும் உரிமைக்கு உரித்துண்டு. உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, அரச அடக்குமுறைக்கு ஆளாகும் மக்கள் வெளியக சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்பதை, 1970 ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடனத்தையும் கனேடிய உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மேற்கோள்காட்டி நிறைய ஆய்வுப் பிரசுரங்கள் வெளியாகியுள்ளன.

சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியகப் பரிமாணங்களின் உறவு நிலையை ஆதாரமாகக் கொண்டே விடுதலைப் புலிகளின் கொள்கை நிலைப்பாட்டைப் பரிசீலனை செய்ய வேண்டும்.



வடக்கு, கிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள்சமூகமாக அமையப்பெற்றிருக்கிறார்கள். ஒரு தனித்துவச் சிறப்புடைய மக்கள் என்பதால் அவர்கள், சுயநிர்ணய உரிமையின் உள்ளக, வெளியகக் கூறுகள் இரண்டுக்கும் உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமையின்அடிப்படையில், அந்நியத் தலையீடு எதுவுமின்றித் தமது அர்சியல் தகைமையைத் தாமே சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்ளவும், தமது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வைத் தாமே மேம்பாடு செய்யவும் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு.

தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை தலைவர் பிரபாகரன், 2002 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில், சிறப்பான முறையில், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

*''தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகிறார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகிறார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாஷை. உள்ளக சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது.''*

தமிழ் மக்கள், தமது வரலாற்றுத் தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் தன்னாட்சி அதிகாரத்தை, அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையை வேண்டினார் பிரபாகரன். ஆயினும் அவர், உள்ளக சுயநிர்ணய உரிமையின் எல்லை வரம்புடன் நின்றுவிடவில்லை. ஐ.நா. பிரகடனத்தில், அரசுகளின் கடப்பாட்டு விதியாக நெறிக்கப்பட்டிருக்கும், 'சம உரிமைகளையும் சுயநிர்ணயத்தையும்', பௌத்த - சிங்கள பேரினவாதச் சகதிக்குள் புதைந்து கிடக்கும் சிங்கள அரசு, தமிழர்களுக்கு வழங்கிவிடப் போவதில்லை என்பது பிரபாகரனுக்கு நன்கு தெரியும். ஆகவேதான், அவர் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்வது பற்றி ஒரு கண்டிப்பான எச்சரிக்கையை விடுக்கிறார். எமது மக்களுக்கு உரித்தான உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, பிரதேச தன்னாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்து, பிரிந்து சென்று தனியரசை அமைக்கத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்பதையும் அந்த மாவீரர் தின உரையில் அவர் அழுத்தம் திருத்தமாக அறைகூவியிருக்கிறார்.

அரச அடக்குமுறைக்கும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் எமது விடுதலை இயக்கம், தனது அரசியற் கொள்கை நிலைப்பாட்டை, உள்ளக, வெளியகக் கூறுகள் இணைந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நெறிப்படுத்தியிருக்கிறது. சாராம்சத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாடு, ஐ.நா. பிரகடனங்களுக்கும், சர்வதேச சட்ட நியமங்களுக்கும் இசைவாகக் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

எமது நியாயமான விடுதலைப் போராட்டத்துக்குச் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை நாம் பெறுவதாயின், ஐ.நா. சாசனங்களுக்கு இசைவாக எமது போராட்டப் பாதையை நெறிப்படுத்துவது சாலச் சிறந்தது.

(தொடரும்...)




பொன்.வேணு கிருஷ்ணா

**மகளையும் மனைவியையும் இறந்து கிடந்தவர்கள் மத்தியில் தேடினேன்: மன்செஸ்டர் குண்டு வெடிப்பு அவலம்**

மன்செஸ்டரில் குண்டுவெடிப்பு இடம்பெற்றதை தொடர்ந்து எனது மனைவியையும் மகளையும் இறந்து கிடந்தவர்களின் மத்தியில் தேடினேன் என சம்பவம் இடம்பெற்ற பகுதியில் காணப்பட்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.



மன்செஸ்டரில் இசைநிகழ்ச்சிக்கு சென்றிருந்த தனது மனைவியையும் மகளையும் அழைத்துவரச்சென்ற அன்டி கோலி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் அவர்களுக்காக காத்திருந்த வேளை குண்டுவெடிப்பொன்று இடம்பெற்றது நான் தூக்கியெறியப்பட்டேன். நான் எழுந்து பார்த்தவேளை உடல்கள் நிலத்தில் வீழ்ந்து கிடப்பதை பார்த்தேன்.

நான் உடனடியாக எனது குடும்பத்தவர்களை பார்ப்பதற்காகச் சென்றேன். அவர்களை அங்கு காணவில்லை அதனைத் தொடர்ந்து நான் அங்கு காணப்பட்ட உடல்களிற்குள் அவர்களை தேடினேன் அங்கும் அவர்களைக் காணவில்லை. எனினும் பின்னர் அவர்களை கண்டுபிடித்தேன். அவர்கள் நலமாக இருக்கின்றனர் என அன்டி கோலி குறிப்பிட்டுள்ளார்.

இது நிச்சயமாக ஓர் குண்டுவெடிப்புதான் மிகவும் சக்திவாய்ந்ததாக இது காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நிகழ்வு நடைபெற்ற அரங்கிற்கானவாயிலில் குண்டுவெடிப்பு இடம் பெற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

லீட்ஸை சேர்ந்த கரிவேர்க்கர் குண்டு வெடிப்பு சிதறல்களால் தனது காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் மனைவிக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும் இசை நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த மகளை அழைத்துச் செல்வதற்காக காத்திருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இறுதிப்பாடலை நாங்கள் கேட்டோம் அதன்பின்னர் பெரியவெளிச்சம்போன்ற ஏதோ தோன்றியது பின்னர் சத்தம் கேட்டது புகைமண்டலம் தோன்றியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இசைநிகழ்விலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த வேளை பயங்கர சத்தத் தைத் தான் கேட்டேன் என மற்றுமொரு பெண் தெரிவித்துள்ளார். நாங்கள் வெளியே வந்துகொண்டிருந் தோம் வாசல் கதவிற்கு அருகில் வந்த வேளை பெரிய சத்தம் கேட்டது அனை வரும் கதறத் தொடங்கினர்.

பெரியவெடிகுண்டே வெடித்துள்ளது. அதன் தாக்கத்தை நான் நெஞ்சில் உணர்ந்தேன். அங்கு பெரும் குழப்பம் நிலவியது அனைவரும் அங்கிருந்து வெளியேற முயன்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இசைநிகழ்ச்சியை பார்வையிடச்சென்றிருந்த தனது சகோதாரியை அழைத்து வரச்சென்ற (22 வயது) மஜீத்கான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சத்தம் கேட்ட பக்கத்திலிருந்தவர்கள் அனைவரும் உடனடியாக எங்கள் பகுதியை நோக்கி ஓடிவரத்தொடங்கினர்.

அவர்கள் மூடப்பட்டிருந்த பாதை வழியாக வெளியேற முயன்றனர் அது முடியாமையால் எந்த பக்கத்தால் தப்பி ஓட முடியுமோ அந்த பக்கங்களால் வெளியேற முயன்றனர் அங்கிருந்தவர்கள் அனைவரும் மிகவும் பதற்றத்துடன் காணப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பகுதியில் காணப்பட்ட ஸ்னூர்க்கர் விடுதியின் மதுபானசாலை பணியாளர் பலர் இரத்தத்தில் தோய்ந்தபடி வீழ்ந்து கிடப்பதை பார்த்தேன் என தெரிவித்தார்.


இங்கு நபர் ஒருவர் வீழ்ந்து கிடந்தார் அவரது காலில் இருந்து குருதிவெளியேறிக்கொண்டிருந்தது இன்னொரு பெண்மணி முகத்தின் ஒரு பகுதியிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

பலர் இங்கு பதற்றம் அச்சம் ஆகியவற்றின் பிடியில் சிக்கியுள்ளனர். ஒரு யுவதி அச்சத்தில் உறைந்து போயுள்ளார். இன்னொரு யுவதி அழுத வண்ணம் காணப்படுகின்றார். ஒரு பெண்மணிக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**மன்செஸ்டர் தாக்குதல்: ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியது**

மன்செஸ்டர் நகரில் இசைக் கச்சேரியில் நடந்த மிக மோசமான பயங்கரவாத தாக்குதலில் இருபத்தி இரண்டு பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பல குழந்தைகள். சென்ற பத்தாண்டுகளில் பிரிட்டனில் நடந்த மோசமான தாக்குதல் இது.

இஸ்லாமிய அரசு என்று தன்னை அழைத்துக்கொள்ளும் அமைப்பு இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருக்கிறது.



எட்டு வயதுடைய சிறார்களைக்கூட குறிவைத்த இந்த தாக்குதல் அருவெறுப்பூட்டும் கோழைத்தனம் என்று பிரிட்டிஷ் பிரதமர் சாடியுள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பில் இருபத்தி மூன்று வயதுடைய ஒரு நபரை கைது செய்திருப்பதாக மன்செஸ்டர் காவல் துறை தெரிவித்துள்ளது.

**'என்னை மன்னித்துவிடுங்கள்' மன்செஸ்டர் தாக்குதல் தீவிரவாதியின் இறுதி தொலைபேசி உரையாடல்**

மன்செஸ்டர் நகரில் இசை நிகழ்ச்சியில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்திய தீவிரவாதி குண்டு வெடிப்பை நடத்தும் முன் 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று தொலைபேசியில் கூறினார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிறு (21ஆம் திகதி) இரவன்று லண்டன் மன்செஸ்டர் நகரில் அரியானா கிராண்டே அரங்கில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 22 பேர் பலியாகினர். 59 பேர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் 22 வயதான சல்மான் அமேதி என்ற இளைஞர்தான் இந்தத் தற்கொலைப்படை தாக்குதலை நடத்தியவர் என்று அவரது புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டு அதனை உறுதியும் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து சல்மான் அமேதி பற்றிய தகவல்கள் ஒவ்வொரு நாளும் வெளி வந்தவண்ணம் உள்ளன.

லிபியாவை பூர்வீகமாகக் கொண்ட அமேதி லண்டனில் வளர்ந்தவர் என்றும் கல்லூரி படிப்பை பாதியிலேயே கைவிட்டு தற்கொலைப்படை தீவிரவாதியர்க மாறியவர் என்று லண்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் தற்கொலைப்படை தாக்குதலை நடத்திய அமேதி குண்டு வெடிப்பை நடத்தும் முன் தொலைபேசியில் 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று கூறினார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமேதியின் உறவினர் கூறும் போது, ''சல்மான் அமேதி தற்கொலைப்படை தாக்குதலில் ஈடுபடுவதற்கு முன்னர் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு 'என்னை மன்னி விடுங்கள்' என்று என்னிடம் கூறினார். கடந்த ஆண்டு லண்டனில் அமேதியின் முஸ்லிம் நண்பர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைப் பற்றி யாரும் கவனிக்கவில்லை என்று அமேதி வருத்தப்பட்டார். லண்டனில் அரேபியர்கள் கொலை செய்யப்படுகின்றமை குறித்து ஏன் இங்கு எந்த சீற்றமும் இல்லை. இதுதான் இந்தத் தாக்குதல் ஏற்பட காரணமாகியுள்ளது'' என்றார்.

இதனிடையே மன்செஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை விவரங்களை இங்கிலாந்து பொலிஸார் அமெரிக்க உளவுத்துறையிடம் பகிர்ந்து வந்தனர். அந்த விவரங்கள் அமெரிக்க ஊடகங்களில் வெளியாகி உள்ளன. இதனால் விசாரணைக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ள இங்கிலாந்து பொலிஸார் இனிமேல் விசாரணை விவரங்களை அமெரிக்காவிடம் பகிர்ந்து கொள்ளமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதுவரை மன்செஸ்டர் தற்கொலைப் படை தாக்குதல் தொடர்பாக இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(கேள்வி தொடரும்...)



## நகை வாங்கப் போகிறீர்களா?

**நகைகள் வாங்கும்போதும், வாங்கிய பின்னும் பின்பற்றப்பட வேண்டிய சில நடைமுறைகள் இதோ!**

★ நகை வாங்குவதற்குச் செல்லும்முன், எந்த நகை வாங்கப் போகிறோம் என்பதை உறுதி செய்து விட்டே நகைக் கடைக்குச் செல்லுங்கள்.

★ நகைக்காக செலவிடும் பணத்தின் அளவு என்ன என்பதில் தெளிவாய் இருக்க வேண்டும்.

★ பழைய நகைகளில் கல் வைத்த நகையைப் போட்டு விட்டுப் புதிதாக வாங்க வேண்டும் என்று நினைத்தால், கற்களை எடுத்த பின் நிறை பார்த்து , அதற்கேற்ற விலையில் புதிய நகைகளை வாங்குங்கள்.

★ செய்கூலி எவ்வளவு சதவீதம், சேதாரம் எவ்வளவு சதவீதம் போடப்படுகிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

★ அணிவதற்காக நகை வாங்கப் போகிறீர்களா? அல்லது முதலீடு செய்யும் முயற்சியா? முதலீடு என்றால், தங்கக் காசாக வாங்கி வைத்துக் கொள்வது தான் சிறந்தது.

★ நகை வாங்கு முன் தங்கத்தின் அன்றைய தின மதிப்பீடு என்ன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ தரமான கடைகளில் நகை வாங்குங்கள். தெருவுக்குத் தெரு முளைத்திருக்கும் கடைகளில் வாங்கினால் தரம் குறையும். பிறகு வருந்த வேண்டாம்.

★ நகைகளை வாங்கியவுடன், அதைப் புகைப்படம் எடுத்து வைத்து விடுங்கள்.


★ நகைகளைக் 'காப்புறுதி' செய்வது மிக முக்கியம். இதெல்லாம் சற்று சிரமமான வேலைகள் தான். ஆனாலும் விடாதீர்கள். செய்து வைத்து விடுங்கள். ஆபத்துக்கு உதவும்.

★ 'ஹால் மார்க்' முத்திரை போட்ட நகைகளையே வாங்க வேண்டும்.

★ நகைகளைக் கழற்றி பத்திரப்படுத்தும்போது வெல்வெட் துணியில் போட்டு வைப்பது நல்லது. வெறுமனே போட்டு வைத்தால் கீறல்கள் விழுந்து பொலிவிழந்து விடும்.

★ நிரந்தரமாக அணிந்து கொள்ளும் நகைகளை வாரந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்.

# பெண்களுக்குத் தேவை தங்கக் கூண்டுகள் அல்ல பலமான சிறகுகளே!



> பெண்கள் உயர்வதால் வீடும் உயரும். நாடும் நலம்பெறும். அவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்பளியுங்கள். பறவைக்கு தங்கக்கூண்டு தேவையில்லை. சிறகுகள்தான் வேண்டும். பறந்து போய் மகிழ்ச்சியாக வாழட்டும். தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளட்டும். யாராவது ஒருவர் அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

பெண் குழந்தைகளுக்குப் பெற்றோரே முழுநேரமும் காவலாக இருக்க முடியாது. அவர்கள் சுயமாகவே தங்களைப் பாதுகாக்கப் பழகிக் கொள்ளவேண்டியமை அவசியம். அப்படியென்றால் அவர்கள் தற்காப்புக் கலைகளைக் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தம் இல்லை. தற்காப்புத் திறன் தன்னம்பிக்கையின் வழியாக பிள்ளைகளின் மனதில் விதைக்கப்பட வேண்டும். அதற்கு பெற்றோர் வழிகாட்டிகளாகத் திகழவேண்டும்.

பெண் குழந்தைகள், தாங்கள் வாழும் உலகைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களால் தங்களை முழுமையாகத் தற்காத்துக் கொள்ள முடியும். இந்த உலகைப் புரிந்துகொள்ள அவர்களுக்குக் கல்வியறிவு மட்டும் போதாது. வெளியுலக அனுபவமும் தேவை. தாங்கள் செல்லும் பாதை சரியானதுதானா? என்பதை சீர்தூக்கிப் பார்க்க அவர்களைப் பழக்க வேண்டும். அதற்கு பெற்றோர் அவர்களிடம் மனம் விட்டுப் பேச வேண்டும். நட்புணர்வோடு பழக வேண்டும். பெற்றோரோடு மனம்விட்டு பேசுவதுதான் பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு என்பதை புரியவைக்க வேண்டும்.


அவர்கள் வாழும் இந்த உலகில் அவர்களைச் சுற்றி பல போலியான விஷயங்கள் இருக்கும். அதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். எது உண்மையான நட்பு? எது போலியானது? என்று தெரிந்து கொள்ள உதவி செய்ய வேண்டும். அவர்களைச் சுற்றி இருக்கும் மனிதர்கள் அவர்களுடைய, செயற்பாடுகள் எல்லாவற்றையும் உற்றுக் கவனிக்க வேண்டும். அதில் ஏதேனும் வித்தியாசமான மாற்றம் தெரிந்தால் விழிப்புணர்வோடு செயற்பட அறிவுறுத்த வேண்டும்.

இந்தக் காலப் பெண்கள் சிந்திக்கும் திறன் பெற்றவர்கள். அவர்கள் சிந்தனை ஓட்டத்தைத் தடை செய்ய வேண்டாம். பழைமையான விஷயங்களைக் கொண்டு அவர்களுடைய சிந்தனைக்கு முட்டுக் கட்டை போடாமல் புதுமையாகச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய தேவைகளை அவர்களே முடிவு செய்யட்டும். அதில் ஏதாவது தவறு இருந்தால் மட்டும் எடுத்துச் சொல்லலாம்.

சிந்திக்கவும், முடிவெடுக்கவும் சுதந்திரம் அளிக்கப்படலாம். ஆனால், சமூகக் கட்டுப்பாட்டுக்குள் வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு பெண் பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிக அவசியம். வீட்டில் இருக்கும்வரை அந்தப் பாதுகாப்பைப் பெற்றோர் வழங்குவர். வெளியே போகும்போது அந்தப் பாதுகாப்பை அவர்களாகத்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் என்ற பெயரில் எல்லைமீறி விட்டு அவப்பெயரைச் சுமந்து எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிக் கொள்ள அனுமதிக்கக் கூடாது.

சமூகத்தில் ஏற்படும் வன்முறைகள், பாலியல் கொடுமைகள் இவற்றையெல்லாம் கூறிப் பெண்களைப் பலவீனப்படுத்தக் கூடாது. மாறாக இதுபோன்ற செயல்களை எப்படி சமாளிப்பது? எவ்வாறு பாதுகாப்பாக நடந்து கொள்வது? என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். வீட்டில் உள்ளவர்களிடம் நேர்மையாக இருப்பதுதான் பாதுகாப்பாகும். அவரவர் செயல்கள் தான் அவர்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. அதனால் நல்ல செயல்களால் எதிர்காலத்தை வளப்படுத்தலாம்.

பெண்கள் உயர்வதால் வீடும் உயரும். நாடும் நலம்பெறும். அவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்பளியுங்கள். பறவைக்கு தங்கக்கூண்டு தேவையில்லை. சிறகுகள்தான் வேண்டும். பறந்து போய் மகிழ்ச்சியாக வாழட்டும். தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளட்டும். யாராவது ஒருவர் அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அது எப்போதும் முடியவும் முடியாது. பெண் குழந்தைகள், சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் நடைபோட பெற்றோராகிய நீங்கள் வழிகாட்டுங்கள். தற்காப்புத் திறனை அவர்கள் தாங்களாகவே வளர்த்துக் கொள்ளட்டும்!



### அழகில் இருக்கும் ஆபத்து

# 'ஐ- லைனர்' போடுபவர்களின் கவனத்துக்கு!



விசேட தினங்களில் மட்டும் அழகு சாதனப் பொருள்கள் உபயோகிக்கும் பழக்கம் போய் அன்றாடம் அலுவலகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லும் போது சாதாரணமாகப் பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது.

இந்த அழகு சாதனப் பொருள்கள் அழகைக் கொடுத்தாலும் அவை ஏற்படுத்தும் பின்விளைவுகள் அதிகம். இவை அனைத்தும் மெதுமெதுவாக கொல்லும் விஷமாகும். கண்களில் ஐ லைனர் போடாத பெண்கள் மிகக்குறைவு. தொடர்ந்து ஐ லைனர் பயன்படுத்தும் பெண்களுக்கு பார்வைக் குறைபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக ஐ லைனரை இமை முடிகளின் மீது தான் பயன்படுத்துவர். இலேசாக ஐ லைனரை உபயோகிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளைக் காட்டிலும், அடர்த்தியாக உபயோகிக்கும் போது அதிக பிரச்சினைகள் உண்டாகின்றன.

பொதுவாக ஐ லைனர் தயாரிப்பில் மெழுகு, சிலிக்கான் மற்றும் கண்களில் ஒட்டி கொள்வதற்காகப் பசை போன்ற பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இமைகளில் போடுவதால் ஐ லைனரின் துகள்கள் 15 முதல் 30 வீதம் கண்களுக்குள்ளே சென்று விடுகின்றன. இது பார்வைக் குறைப்பாட்டை உண்டாக்கி விடுகிறது.

ஒவ்வொரு முறையும் ஐ லைனர் போடும் முன்னதாக ஐ லைனரைக் கூர்மையாக்கி உபயோகிக்க வேண்டும், இதனால் தொற்றுகள் ஏற்படும் அபாயம் குறைகிறது. எனினும் இத்தகைய அழகு சாதனப் பொருள்களைத் தேவையின்றி பயன்படுத்துவதைக் குறைப்பதால் உடலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் திரிதியைத்திதி பகல் 2.04 வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் திருவாதிரை பகல் 3.30 மணி வரை. பின்னர் புனர்பூசம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்- மாலை 4.49 முதல் 6.24 வரை. சுபநேரம்- காலை 8.53 மணி முதல் 10.23 மணி வரை. இன்று சதுர்த்தி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி வைகாசி மாத வளர்பிறை திரிதியை- சதுர்த்தி. பிறந்த நட்சத்திர வழிபாடு- திருவாதிரை.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2,3,4 ஆம் பாகங்கள் திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாகங்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அவசியம் நற் கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

## 28.05.2017 இல் இருந்து 03.06.2017 வரை



**மேஷம்:** இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். உறவினர்களுடன் உரசல்களும், மன உளைச்சலும் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும். வீட்டில் சுப கருமங்கள் தாமதப்படும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். வீணான செலவுகளால் அவதிப்பட நேரும். அலைச்சல்களால் அவலப்பட நேரும். பிரயாணங்களின் போது அவதானம் தேவை. ஏமாற்றுக்காரர்கள் இவர்களிடம் பணம் பறிக்க வாய்ப்புண்டு. கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் சுமாராக இருப்பார்கள்.



**ரிஷபம்:** இன்பமான வாரமாகும். வருமானம் வளமாக இருக்கும். செய்கின்ற தொழில் ஏற்றமடையும். விட்டுப் போன சொந்தமெல்லாம் வலிய வந்து சேர்ந்து விடும். உத்தியோகத்தில் விரும்பிய பதவி உயர்வு, ஊதிய உயர்வு வசதியான இடமாற்றம் என்பன கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் புனித யாத்திரை செல்வார்கள். வாகன வசதி உண்டாகும். திருமண வாய்ப்புகள் வந்து சேரும். அலுவலக நிமித்தம் வெளியூர் செல்ல வேண்டிவரும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். பெண்கள் விலையுயர்ந்த வீட்டு உபயோகப் பொருள்களையும், ஆடை, ஆபரணங்களையும் வாங்கி மகிழ்வார்கள்.



**மிதுனம்:** உயர்வான வாரமாகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அலுவலகத்தில் இவர்களின் மதிப்பு, மரியாதை உயரும். வீட்டில் மங்கல காரியங்கள் நடைபெறும். விருந்து விசேஷங்களுக்கு குடும்பத்துடன் சென்று மகிழ்வார்கள். வியாபாரத்தில் ஆக்கபூர்வமான அபிவிருத்தி உண்டாகும். தொழிலாளர்கள் ஊக்கமுடன் உழைத்து உன்னதம் அடைவார்கள். மாணவர்களுக்குப் பட்டங்களும், விருதுகளும் கிடைக்கும். சுயதொழிலில் பெண்கள் முன்னேற்றம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும்.



**கடகம்:** கவலையான வாரம் ஆகும். வருமானம் குறையும், குடும்பங்களில் பிணக்குகள் தோன்றி மறையும். விவசாயிகள் உற்பத்திக் குறைவால் நட்டமடைவார்கள். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். அரச ஊழியர்கள் அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு. கவனம் தேவை. முதலாளி- தொழிலாளி உறவு பாதிப்படையும். தொழிலாளர் சிலர் வேலையை இழக்க வேண்டி வரும். கலைத்துறையினர் பெரும் சிரமங்களைச் சமாளிக்க வேண்டி வரும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.



**சிம்மம்:** நன்மையான வாரமாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். பழைய கடன்கள் தீரும். புதிய நவீன பொருள் சேர்க்கை உண்டாகும். வெளி வட்டாரப் பழக்கம் சிறப்பாக அமையும். திருமண சுப முயற்சிகளில் வெற்றி கிட்டும். கொடுக்கல் வாங்கலில் சரள நிலை ஏற்படும். பழைய பாக்கிகள் தடையின்றி வசூலாகும். பெரிய மனிதர்களின் ஆதரவு அமையும். தொழில் வியாபார நிலையில் படிப்படியான உயர்வுகளைக் காணமுடியும்.



**கன்னி:** சம பலன்கள் உள்ள வாரமாகும். வருமானம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். உத்தியோகத்தர்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு முன் எச்சரிக்கை ஓரளவு லாபத்தைக் கொடுக்கும். புது முதலீடுகளைத் தவிர்க்க வேண்டும். விவசாயிகள் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி வரலாம். மாணவர்களின் கல்வியில் தடைகள் ஏற்படலாம்.



**துலாம்:** யோகமான வாரம் ஆகும். எதிர்பாராத திடீர் பண வரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எதிலும் சுறுசுறுப்புடன் செயற்பட்டு வெற்றி காண்பார்கள். சிலருக்கு வீடு, வாகனம், வாங்கும் யோகமும் அமையும். திருமண சுப காரியங்கள் தடபுடலாக நடைபெற்று மன மகிழ்ச்சியைத் தரும். உற்றார், உறவினரால் அனுகூலப்பலன் கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம், கொடுக்கல், வாங்கல் சிறப்புடன் அமையும். உத்தியோகத்தில் இவர்கள் திறமைக்கேற்ற உயர்வுகளைப் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.



**விருச்சிகம்:** சஞ்சலமான வாரம் ஆகும். குடும்பத்தில் அமைதி குன்றிச் சச்சரவுகள் தோன்றிமறையும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் உடல், உளப் பாதிப்புக்கள் ஏற்படும். சிலர் அரசாங்கத்துக்கு தண்டனைக்கும் ஆளாக வேண்டி வரலாம். சிலர் விபத்துகளையும், எதிர்பாராத திடீர் நெருக்கடிகளையும் எதிர்நோக்க வேண்டி வரும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். ஆசிரிய - மாணவர் உறவில் விரிசல் ஏற்படும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்க்க வேண்டும்.



**தனுசு:** சமனபலன்கள் உள்ள வாரமாகும். பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். வாகனங்களால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தாய்வழியில் எதிர்பாராத மருத்துவச் செலவுகள் ஏற்படும். பண விடயத்தில் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வியாபாரிகள் பெரிய முதலீடுகளையும், அபிவிருத்தி செய்யும் திட்டத்தையும் தள்ளிப் போடுவது நன்று. தொழிலாளர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவதால் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.



**மகரம்:** யோகமான வாரமாகும். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பொன், பொருள் சேரும். பழைய கடன்கள் நிவர்த்தியடையும். உற்றார், உறவினர் ஆதரவாக அமைவார்கள். கொடுக்கல், வாங்கல் சரளமாக அமையும். சகோதர உறவு வலுப்படும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும். வாக்குறுதிகளை காப்பாற்றுவதால் பெரிய மனிதர்களின் ஆதரவு கிட்டும். பூர்வீக சொத்துகளால் லாபம் அமையும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தொடர்ந்து வரும்.




**கும்பம்:** இன்பமான வாரம் ஆகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷ சூழ்நிலை நிலவும். உறவினர், நண்பர்கள் பக்க பலமாக இருப்பார்கள். வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து போதிய வருவாயைத் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தர்கள் திறமையால் பதவி உயர்வுகளைப் பெறுவார்கள். மாணவர்கள் சிலருக்கு படிப்பு முடிந்தவுடன் வேலை கிடைக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். விரும்பிய வாழ்வு அமையப் பெறும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.



**மீனம்:** துன்பமான வாரமாகும். வருமானம் குறையும். குடும்ப உறவுகளில் சச்சரவுகள் தோன்றும். உத்தியோகத்தர்கள் வருமானம் அதிகரித்தாலும் அதிகாரிகள் மதிப்பை இழக்கும் நிலைமை உண்டாகும். வியாபாரிகளுக்கு ஓரளவு லாபம் கிடைப்பினும், அரசாங்கத் தண்டனைகளால் நட்டமும் ஏற்படும். ஆசிரிய மாணவர் நல்லுறவு பாதிப்படையும் உடல் உபாதைகளால் மருத்துவரை நாடுவார்கள். முதலாளி, தொழிலாளி பிணக்குகள் தோன்றி மறையும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள்.

# இலங்கையில் பாரதி




● முருகபூபதி – ஆஸ்திரேலியா

பாரதியியலில் நாட்டம் கொண்டிருந்த பலரும், பாரதியின் கவிதைகளுக்கே முதன்மை அளித்திருக்கின்றனர். எனினும் பாரதி கவிதைத் துறைக்கு அப்பால், விமர்சனம், கட்டுரை, பத்தி எழுத்து, மொழிபெயர்ப்பு முதலான துறைகளிலும் தீவிரமாக உழைத்தவர்.

பாரதியின் ஆழ்ந்த - தீர்க்கதரிசனமான சிந்தனைகள் அவர் எழுதிய கவிதைகளிலும், அதேவேளையில் அவர் எழுதிய உரைநடைகளிலும் தீவிரம் கொண்டிருந்தன என்ற செய்தியை இலங்கையில் எமக்கு வழங்கியவர்தான் பேராசிரியர் க. அருணாசலம்.




இவர் சாவகச்சேரியில் அல்லாரை என்ற ஊரில் 1946 ஆம் ஆண்டில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை அல்லாரை அரசினர் தமிழ்ப் பாடசாலையிலும், உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றபின்னர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்புப்பாடமாகப் பயின்று பட்டம் பெற்றவர்.

தாம் பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்திலேயே முதலில் துணை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். ஈழத்து தமிழ்ச்சிறுகதைகள் தொடர்பாக ஆய்வுசெய்து, முதுகலை மாணிப்பட்டமும், தமிழ் வரலாற்றுப்புதினங்கள் தொடர்பாக ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டமும் பெற்றிருப்பவர். பின்னர் பேராசிரியராக பேராதனைப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும் 1998 வரையில் பணியிலிருந்தவர். தேசிய சாகித்திய விருதும் சாகித்திய ரத்தினா என்னும் இலக்கிய உயர்விருதும் பெற்றிருக்கும் பேராசிரியர் க. அருணாசலம் 2015 ஆம் ஆண்டில், தமது 69 ஆவது வயதில் மறைந்தார்.

இவர் குறித்து இவருடன் பணியாற்றியிருக்கும் தற்போதைய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:-

*''பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள், தமிழியலின் ஆய்வுப் பரப்பில் தனது ஆழ்ந்த புலமையால் பங்காற்றியவர்களுள் ஒருவர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைகளில் தாய்த் தமிழ்த்துறையான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் புலமைப் பாரம்பரிய முன்னெடுப்புக்களில் முக்கிய பங்காற்றியவர்.*

*பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிய பேராசிரியர், தமக்கெனத் தகைசான்ற ஒரு மாணவ பரம்பரையையும் உருவாக்கியவர்.*

*இலங்கைத் தமிழியல் ஆய்வுமுயற்சிகள் தொடர்பாகவும், மலையக இலக்கியப் பாரம்பரியம் தொடர்பாகவும் பாரதிஆய்வியல் தொடர்பாகவும் அவர் நிகழ்த்திய புலமைசார் உரையாடல்கள் தமிழ் உலகில் என்றும் மறக்கமுடியாதவை.*

*தமிழகத்துத் தமிழ்ப் புலமை மரபிலும் தமது தமிழ்ப் புலமையால் செல்வாக்குச் செலுத்தி ஈழத்தமிழ் அறிவுலகை உயர்த்தியவர்களில் ஒருவர். தமிழ் கூறும் நல்லுலகின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ஆய்வுகளில் தமக்கெனத் தனி முத்திரை பதித்த பேராசிரியர்.''*

பேராசிரியர் க. அருணாசலம் எழுதிய **பாரதியார் சிந்தனைகள்** என்னும் ஆய்வு நூல் 1984 இல் தமிழ்நாடு சோமு புத்தக நிலையத்தினால் வெளியிடப்பட்டது.


பேராசிரியர் க. அருணாசலம்

பாரதியாரின் கவிதைகளும் உரைநடை ஆக்கங்களும், பாரதியார்: ஆஸ்திகன் - முற்போக்காளன் - பொதுவுடைமையாளன், பாரதியாரும் அரசியலும், சாதி ஏற்றத் தாழ்வும் விளைவுகளும், தொழிலாளரும் தொழிலும், கல்வியும் அறிவியலும், சமயமும் வாழ்வும், பாரதியாரும் கலை இலக்கியமும், தமிழ்ச் சாதி முதலான ஒன்பது அங்கங்களில் பாரதியை ஆய்வு செய்திருக்கிறார் பேராசிரியர் க. அருணாசலம்.

''பாரத நாட்டின் தெற்கிலே பாரதியாரும், கிழக்கிலே ரவீந்தரநாத் தாகூரும், மேற்கிலே இக்பாலும் தோன்றி தமது வீறுகொண்ட கவிதைகளாலும் பிற ஆக்கங்களாலும் உலகிற்கு உய்யும் நெறி காட்டினர். தாகூர், இக்பால், பாரதியார் ஆகிய மூவரும் மகாகவிகளே ஆயினும் ஏனைய இருவரிடமும் காணமுடியாத சிலசிறப்பியல்புகளைப் பாரதியாரிடம் காணமுடிகிறது.

தமது பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட முயன்ற பாரதியார் வெறுமனே அரசியல் விடுதலைக்காக மட்டும் கவிதை மழை பொழியவில்லை. அரசியல் விடுதலையுடன் கூடவே சமுதாயம், பொருளாதாரம், சமயம், பண்பாடு முதலிய துறைகளிலும் விடுதலையை அவாவி நின்றார்.


அல்லாமா இக்பால்

தாழ்வுற்று வறுமை மிஞ்சிச் சுதந்திரம் தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத மக்களின் பரிதாப நிலையை ஊன்றிக் கவனித்த பாரதியார் அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களையும் தீர்வு மார்க்கங்களையும் தமது கவிதைகளினூடே விண்டு காட்டியுள்ளார்.'' என்று பதிவுசெய்கிறார் பேராசிரியர் அருணாசலம்.

**சாதி ஏற்றத்தாழ்வும் விளைவுகளும்** என்ற தலைப்பில் பேராசிரியர் அருணாசலம் அவர்கள், பாரதியின் வாழ்வில் நடந்த சில சுவாரஸ்யமான சம்பவங்களையும் விவரிக்கின்றார்.

பாரதி பிராமணர் சமூகத்தில் பிறந்திருந்தபோதிலும் அச்சமூகம் தொன்றுதொட்டு பின்பற்றிவந்த வைதீக மரபுகளைப் பேணியவரல்லர்.

கனகலிங்கம் என்ற அடிநிலை சமூகத்து சிறுவனுக்கு உபநயனம் செய்வித்து, பூநூல் அணிவித்து, **''இன்று முதல் நீயும் ஒரு பிராமணன் தான்.''** என்று பகிரங்கமாக பிரகடனப்படுத்தியவர். சாதி அடக்குமுறைகள் மேலோங்கியிருந்த காலத்திலேயே அதனை துச்சமாக எண்ணி துணிவுடன் எதிர்த்தவர் பாரதி.

பேச்சில் ஒன்றும் செயலில் ஒன்றுமாக வாழ்ந்தவரல்லர் பாரதி.

இலங்கையில் மூத்த எழுத்தாளர் என்.கே. ரகுநாதன் எழுதிய **நிலவிலே பேசுவோம்** என்ற சிறுகதையை குறிப்பிடுதல் பொருத்தமானது.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் சமூகப் பிரமுகராக வாழ்ந்த ஒருவர், தாம் சாதிப்பாகுபாடு பார்ப்பதில்லை என்று வெளியே சொல்லிக்கொண்டு, தன்னைப் பார்க்க வந்த அடிநிலை மக்களை தமது வீட்டினுள்ளே அழைக்காது, ''வெளியே நல்ல நிலவு காய்கிறது. வாருங்கள் நிலவிலிருந்து பேசுவோம்'' - என்று வீட்டு முற்றத்தில் வைத்து பேசி அனுப்புவார். இச்சிறுகதையை எழுதியிருக்கும் என்.கே. ரகுநாதன் வடபுலத்தில் நடந்த ஆலயப் பிரவேசப்போராட்டம் தொடர்பாக **கந்தன் கருணை** என்ற கூத்து வடிவிலான நாடகமும் எழுதியிருப்பவர்.

அடிநிலை மக்களின் எழுச்சிப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

சாதி அடிப்படையில் மக்களை பிரிக்கும் மரபார்ந்த நடவடிக்கைகளில் இலங்கையிலும் தமிழகத்திலும் பல வேறுபாடுகள் இன்றும் நீடிக்கின்றன.

இலங்கையில் அடிநிலை மக்கள், சிறுபான்மைத்தமிழர் என்றும் இந்தியாவின் வடக்கே ஹரிஜனர் எனவும் தமிழகத்தில் தலித்துக்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

பாரதியார் காலத்தில் அவர் வாழ்ந்த அக்ரஹாரத்தெருவில் தாழ்த்தப்பட்ட அடிநிலை மக்களுடன் பாடியும் ஆடியும் கலகலப்பாக அவர்களுடன் இணைந்திருந்தவர்.

சாதிவேற்றுமைக்கு எதிராக எழுதியும் பேசியும் வந்திருக்கும் பாரதி தமது தனிப்பட்ட சொந்த வாழ்விலும் அந்த இயல்புகளினால் தமது உறவுகளின் வெறுப்புக்கும் ஆளானவர்.

குறிப்பிட்ட சம்பவங்களையும் பேராசிரியர் அருணாசலம் இக்கட்டுரையில் சுட்டிக்காண்பிக்கின்றார்.

இந்தியாவின் அரசியல் நிலைமைகள் பற்றிய பாரதியின் கருத்துக்களை விளக்கும் நீண்ட கட்டுரையும் இந்நூலில் இடம்பெறுகிறது.


ரவீந்திரநாத்தாகூர்

பாரதி மற்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார் என்பதையும் இந்நூலில் நாம் காணமுடிகிறது. எந்தவொரு படைப்பாளியும் அறிவுஜீவியும் தனது பலத்தை வெளிஉலகிற்கு காண்பிப்பதற்குத்தான் முயல்வார். ஆனால், தனக்கும் பலவீனங்கள் உண்டு என்பதையும் பகிரங்கப்படுத்தி, அவற்றை நீக்கும் வலிமையும் தனக்கு வேண்டும் என்று பராசக்தியிடம் இறைஞ்சியவர்தான் பாரதி என்பதையும் ஆதாரங்களுடன் அருணாசலம் பதிவுசெய்திருக்கிறார்.

''பராசக்தி, ஒவ்வொரு கணமும் எனது சித்தம் சலிக்கும் முறைகளை அப்போதப்போது பொய்மையில்லாமல், எழுதுவதற்கு எனக் குத்தைரியம் கொடுக்கவேணும். நாம் எழுதுவதைப் பிறர் பார்க்கநேருமென்று கருதி நமது துர்பலங்களை எழுத லஜ்ஜையுண்டாகிறது. பராசக்தி என் மனதில் அந்த லஜ்ஜையை நீக்கிவிட வேண்டும்.''

இவ்வாறு தனது வெட்கத்தை வெளிப்படுத்தும் பாரதியிடத்தில் தாழ்வுமனப்பான்மை இருக்கவில்லை என்பதையும் அருணாசலம் இந்நூலில் சுட்டிக்காண்பிக்கின்றார்.


என்.கே. ரகுநாதன்

*''புவியனைத்தும் போற்றிட*
*வான் புகழ் படைத்துத்*
*தமிழ் மொழியைப் புகழி*
*லேற்றும்*
*கவியரசர் தமிழ்நாட்டுக்*
*கில்லை யெனும்*
*வசையென்னாற் கழிந்த*
*தன்றோ''*

என்று எட்டயபுரம் மகாராசாவுக்கு அவர் எழுதியிருக்கும் சீட்டுக்கவியில் இறுமாப்புடன் பாரதி தன்னைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றமை இந்நூலில் சொல்லப்படுகிறது.

இலங்கையில் பாரதியின் தாக்கம் எத்தகையது என்பதற்கு, அருணாசலம் எழுதியிருக்கும் இந்நூலிலிருந்து பல ஆதாரங்களை நாம் காணமுடிகிறது.

தமிழகத்தில் பாரதியின் கவிதைகளைத்தான் பலரும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார்கள். தொ.மு. சி. ரகுநாதன் இதில் சற்று விதிவிலக்கு. ஆனால், இலங்கையில் பாரதியின் உரைநடைகளை ஆய்வுக்குட்படுத்தியவர்களில் முதன்மையானவர்களாக எமக்கு தென்படுபவர்கள் பேராசிரியர்கள் க. கைலாசபதியும் அருணாசலமும்தான் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பாரதி இயலில் நாட்டம் கொள்ளும் இலக்கிய மாணவர்களுக்கும் பயனுள்ள நூலாக விளங்குகின்றது அருணாசலம் எழுதியிருக்கும் பாரதியார் சிந்தனைகள்.

(தொடரும்)

# சிறுவர்களின் முதல் ஆசான் பெற்றோரே!

மருத்துவர் பொ.ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகர சபை / யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளை சிறந்த பிள்ளைகளாகவே வளர்க்க விரும்புகின்றார்கள். இதற்காகவே அல்லும் பகலும் கஷ்டப்படுகின்றார்கள். இருந்த போதிலும் சில பிள்ளைகள் வழி தவறிப் போவதும் சில பிள்ளைகளின் கல்வி மட்டம் தாழ்ந்து போவதும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இதற்கான காரணங்கள் தான் என்ன? இவர்களின் வளர்ப்பு முறை சரியானது தானா? எனும் கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இன்றைய பெற்றோர் தம் பிள்ளைகள் சர்வதேசப் பாடசாலைகளில் படிக்க வேண்டும். நல்ல பதவி நிலை அடைய வேண்டும். கைநிறைய சம்பாதிக்க வேண்டும். சொத்து சுகத்தோடு வாழ வேண்டும் என்றே சிந்திக்கின்றார்கள். அது தான் வாழ்வின் நோக்கம் என்பது அவர்களின் எண்ணமாகியுள்ளது. பல கலைகளும் தெரிந்திருத்தல், ரெனிஸ், சதுரங்கம் விளையாடும் திறமை பெற்றிருத்தல், கணினி அறிவு ஆரம்ப வயதிலேயே பெற்றிருத்தல், பல்வகை பாஷைகளும் புரிந்து கொள்ளும் திறன் வளர்த்தல் என்று பலவாறு எண்ணும் பெற்றோர்கள் பல முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் கொடுக்க வேண்டும் என்றும் பேரவா கொள்கின்றனர். இவற்றை நிறைவு செய்திட பெரும் பணம் தேவைப்படுகின்றது. இதற்காக தம்மை வருத்தி கூடுதலாக உழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லா சம்பாதித்து சொத்து சுகத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காகத் தம்மை அறியாமலேயே பணம் சேர்க்கும் இயந்திரமாக தம்மை ஆக்கிக் கொண்டு நிம்மதி இழந்து பதற்றத்துடன் ஓய்வில்லாது வாழ்கின்றார்கள். பிள்ளைகளுடன் சந்தோஷமாகக்களிப்பதற்கு நேரமில்லாது திண்டாடுகின்றார்கள். பிள்ளைகளை அன்புடனும் பாசத்துடனும் வழிப்படுத்தி நெறிப்படுத்தி நேரமில்லாது அல்லாடுகின்றார்கள். ஆனால், பிள்ளைகளை மாலை நேர மேலதிக வகுப்புக்களில் சேர்த்து விட்டு, தெருவில் அவர்களுக்காக மணிக்கணக்கில் காத்திருக்கின்றார்கள்.

ஆரம்பக் கல்வி தாய் மொழி மூலமே கொடுக்கப்படல் வேண்டும். இதை புரிந்து கொள்ளாது செயற்படுவதனால் எமது பிள்ளைகள் எங்களை விட்டு விலகிப் போகின்றார்கள். எமது பண்பாட்டு - விழுமியங்களை அறிந்து நடைமுறைப்படுத்தும் வாய்ப்புக்கள் அவர்களுக்கு அருகிப் போகின்றன. வேறொரு கலாசாரத்தைப் பின்பற்றும் சூழல் அவர்களிடம் திணிக்கப்படுகின்றது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான இடைவெளி அதிகரித்துச் செல்கிறது. தாம் விரும்பியபடி நடத்தல், பொறுப்பற்ற போக்கு, பெற்றோரின் விருப்பத்துக்கு மதிப்பளியாமை, புரிந்துணர்வு இன்மை, இறுதியில் பெற்றோர் ஆரம்பம் முதல் பட்ட கஷ்டங்களுக்கு தீர்வு கிடைக்காது, அவை கவலைகளாகவே அவர்கள் மனத்தில் பாரமாக இறங்குகின்றன. பெற்றோர்கள் கஷ்டப்பட்டு, தம் பிள்ளைகளை வளர்க்க முற்பட்டும் இவ்வாறு விரும்பத்தகாத விளைவுகள் வருகின்றமை எங்ஙனம்?

சிறுவர்களின் குண இயல்புகள் பெற்றோரின் பங்களிப்பிலும் பிள்ளைகளுடன் அவர்கள் செலவழிக்கும் நேரத்திலுமே தங்கியுள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. அத்துடன், பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் ஊக்கமும் வீட்டுச் சூழலும் மிகவும் முக்கியமானவை. வீட்டுச் சூழல் சுதந்திர உணர்வையும் சந்தோஷத்தையும் வழங்குதல் வேண்டும். பிள்ளைகளுக்கு முக்கியமாகக் கொடுக்க வேண்டியது மன அமைதியும் சந்தோஷமும் ஆகும். நாம் இவற்றை பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு நாம் அவர்களுடன் நேரத்தைச் செலவிடத் தயாராக இருத்தல் வேண்டும். இன்றைய நிலையில் எம் இளம் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தை விட, அவர்களை மாலை நேர மேலதிக வகுப்பில் சேர்த்துவிட்டு வெறுமனே தெருவில் காத்திருக்கும் நேரமே அதிகமாகும்.



பிள்ளைகளுடன், தம் நேரத்தை பெற்றோர் செலவழித்தல் எனும் போது எவ்வாறு இதனை ஆக்கபூர்வமாக செலவழிக்கலாம் எனப் பார்ப்போம்.

பெற்றோர்கள் வேலைத் தளத்திலிருந்து வீட்டுக்கு வரும் போது மனதை மென்மையாக வைத்துக்கொள்ளல் வேண்டும். வீட்டுக்கு வந்தவுடன் தம் நேரத்தைத் தொலைக்காட்சியுடனோ கணினியுடனோ கழிக்காது பிள்ளைகளுடன் அன்பாக உறவாடி சந்தோஷமாகப் பொழுதைக் கழித்தல் வேண்டும். வந்தவுடனேயே 'படியுங்கள்' 'படியுங்கள்' என்று அவர்களை நச்சரிக்காது அவர்கள் மனம் திறந்து பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல். அவர்கள் சந்தோஷமாக அன்றைய நிகழ்வுகளை விவரித்த பின்பு மகிழ்வுடன் அவர்களை படிக்க அழைத்துச் செல்லலாம்.

பிள்ளைகள் விடும் தவறுகளை பதற்றப்படாமல் பக்குவமாகச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். பிள்ளைகளின் மனதை வென்ற பின்புதான் சுட்டிக் காட்டுதல் சிறப்பு. அதற்காக நாம் அவர்களுடன் நிச்சயமாக எம் நேரத்தைச் செலவழித்தல் வேண்டும். மகிழ்வான இடத்துக்கு அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு மகிழ்வூட்டி சிரிக்கச் செய்து, அவர்களுடன் பொறுமையாக உரையாடுதல் வேண்டும். அது அவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதுவே சிறந்த முறை. ''அம்மா ஏசியமையால் பிள்ளைக்கு கோபம் வந்ததா? அம்மா உங்களைக் கண்டிப்பது அன்பினால் தானே. நீங்கள் இனிமேல் அப்படிச் செய்யக் கூடாது. அது நல்ல பிள்ளைக்கு - எங்கட கெட்டிக்காரப் பிள்ளைக்கு - அழகல்ல.'' என்றவாறாக பூமனதிற்குள் எழுந்த பூகம்பங்களை வருடி ஆற்றுப் படுத்துவதே சிறப்பு; புத்திமதி சொல்லும் போது தனிப்பட்ட முறையில் உரிய சந்தர்ப்பத்தில் அவர்கள் உள்ளத்தைத் தொடும்படி பாசத்துடன் கூறுதல் வேண்டும்.

சிறுவர்களுடன் எம் நேரத்தைக் கழிப்பது பெற்றோருக்கும் சந்தோஷமே. அத்துடன் பிள்ளைகளின் நுணுக்கமான வளர்ச்சியையும் திறமைகளையும் அவதானித்துக்கொள்ளவும் உதவுகின்றது. இது அவர்கள் மீது மேலும் பாசம் கொள்ளத் தூண்டுகின்றது. பிள்ளைகளுக்கு பெற்றோரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும் போது நல்ல முறையில் தாம் வளர்கின்றமையை அவர்கள் உணர்கின்றார்கள். அது உடலாலும் சரி உள்ளத்தாலும் சரி இது அவர்களின் மகிழ்ச்சியையும் சக்தியையும் அதிகரிக்கும். மாறாக பெற்றோர் பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கவில்லை, அவர்களிடமிருந்து அன்பு, பாசம் கிடைக்கவில்லை எனில் குழந்தைகளின் உள வளர்ச்சி பாதிப்புறுகிறது. பெற்றோர் மீது மதிப்பு இல்லாது போகிறது. அதன் காரணமாக கீழ்படிய மறுக்கிறார்கள். பெற்றோருக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள். அடம் பிடிப்பார்கள். பெற்றோரை விட்டுவிலகிச் செல்வார்கள். அவர்களும் பெற்றோரிடம் அன்பு காட்டமாட்டார்கள். சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் மரியாதை கொடுக்காதவர்களாகவும் மாறுகின்றார்கள். பெற்றோர் மீதான வெறுப்பை, தம் அழகிய முகத்தை விகாரமாக்கி முறைத்தும் காண்பிப்பார்கள்.

பிள்ளைகள் உடலால் மட்டுமன்றி மனதாலும் வளர்கின்றனர் எனும் உண்மையை நாம் உணர்தல் வேண்டும். பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்கள் காலத்துக்குகாலம் வேறுபடும். சில சமயம் பெற்றோருக்கு விருப்பமில்லா செயல்களை பிள்ளைகள் செய்திருந்தால், பெற்றோர் அது விடயமாக கலவரமடையாது, அவர்களுடன் அது பற்றி கதைத்து அவர்களுக்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும். கூடாத செயல்களாக இருப்பின், அவை ஏன் கூடாதவை என்பதை, அவர்கள் புரியும் வண்ணம் பாசத்துடன் எடுத்துக் கூறுதல் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே தண்டிக்கக்கூடாது. தண்டிப்பதற்கு முன்பாக பாசத்துடன் கண்டியுங்கள். பிள்ளைகளிடம் குற்றம் கண்டுபிடித்து குற்றம் சொல்வதற்குப் பதிலாக, அவர்களிடமுள்ள இயல்புகளைக் குறிப்பிட்டு, அவ்வியல்புகளில் உங்களுக்கு விருப்பமில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள். அவ்வியல்புகள் திருந்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் விட்ட தவறு குறித்தும் அன்புடன் கூறுதல் வேண்டும். இது அவர்களின் பிடிவாதக் குணங்களை இல்லாது போக்கும். சிறுவர்களுக்கிடையிலான நட்பை, அவர்களின் வயதில் வைத்தே பார்த்தல் வேண்டும். பெற்றோர்களின் வயதுக்கேற்ப வைத்துப் பார்ப்பதையோ கதைப்பதையோ தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகள் மீது அக்கறையாக இருப்பது என்பது அவர்களை கட்டுப்படுத்துவது அல்ல. அல்லது அவர்களின் செயற்பாட்டை இரகசியமாக மறைந்திருந்து கண்காணிப்பதுமல்ல. அவர்களுடன் சேர்ந்து அவர்களை புரிந்து கொள்வதற்காக, செலவழிக்கும் நேரமே பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரமாகும். அவர்களின் விருப்பு வெறுப்புணர்ந்து, அவர்களின் சந்தோஷமே நம் சந்தோஷம் என நினைத்தல் வேண்டும்.

எப்போதும் பெற்றோரின் உதவியும் பாதுகாப்பும் தமக்குண்டு என அவர்கள் உணரத்தக்க முறையில் நம் செயற்பாடுகள் அர்ப்பணிப்புடன் அமைதல் வேண்டும். இது அவர்களின் உடல், உள ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவுகிறது. பிள்ளைகளுடன் பிள்ளைகளுக்காக நேரத்தைச் செலவழிப்பது என்பது நாங்கள் அவர்களுக்கு செய்யும் ஒரு மறைமுகமான முதலீடாகும்.

சிறுவர்களின் மழலைப்பேச்சுக்களை அக்கறையுடன் கேட்டல், முறுவலித்து சிரித்தல், அவர்களின் கேள்விகளுக்கு சலிக்காது பதிலளித்தல், அவர்கள் செய்யும் சின்னச் சின்னச் செயல்களை பாராட்டி சந்தோஷப்படல், நித்திரைக்கு செல்லுமுன் கதைகள் கூறி, அக்கதைகள் சொல்லும் ஒழுக்க நெறி முறைகளை மனத்தில் பதியுமாறு சொல்லுதல், அவர்கள் தனித்திருப்பதை தவிர்த்தல், நல்ல சிந்தனைகளை உருவாக்குதல், அவர்களின் தேவை உணர்ந்து நடத்தல் போன்றவை சிறுவர்கள் வளர்ந்த பின்பும் அவர்களின் மனத்தில் சித்திரமாக பதிந்திருக்கும். அவற்றை நினைக்கும் போதெல்லாம் அவர்களுக்கு இனிமை தரும். வளர்ந்த பின்பு, அவர்கள் தடம் மாறிச் செல்கின்றமையைத் தடுக்கும் கண்ணுக்கு தெரியாத அன்புப் பூட்டுக்களே அவை.

நாங்கள் சிறுவயதில் காய்ச்சலில் அவஸ்தைப்பட்ட போது, தாயார் அருகிலிருந்து கவனித்தும் கசாயம் தந்து வலி நீக்கி உள்ளத்தை இதமாக்கி சுமபாஷித்ததும், இன்றும் மனதினடியில் பக்குவமாய், இருக்கிறதல்லவா? அன்று தொண்டையினுள் கசந்த கசாயத்தை இன்று நினைக்கையில் நினைவுகள் இனிக்கின்றனவல்லவா? இந்த இனிமை எங்கள் சந்ததிக்கு கடத்தப்பட வேண்டாமா?

சர்ச்சைக்குரிய சாமியார் சந்திராசாமி இறந்து போனார். அவரோடு சேர்ந்து சர்ச்சைகளும் மறைந்து போய்விடுமா?

சாமியார், ஆயுத வியாபாரி, அதிகாரத் தரகர்... இவை அனைத்துக்கும் மேலாக, 'ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்' என்றெல்லாம் சந்திரா சாமிக்கு அடைமொழி உண்டு.

இவரது திடீர் மறைவே இயற்கையானதுதானா என்ற அளவில் பேசப்படுகிறது.



# மண்ணுக்குள் புதைந்துபோன மர்மங்கள்!

### ரங்கநாத் சொன்னது என்ன?

ராஜீவ் கொலை வழக்கில் தேடப்பட்ட சிவராசன், சுபா உள்ளிட்ட சிலர் பெங்களூரில் தங்கியிருந்தார்கள். அங்கேயே அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள்.

அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தாரென பெங்களூரு ரங்கநாத் என்பவரைக் கைது செய்தார்கள். அவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. எட்டாண்டுகள் சிறையில் இருந்து விட்டு வெளியே வந்த ரங்கநாத் சொன்ன பல தகவல்கள் அதிர்ச்சிகரமானவை.

சிவராசன் பெங்களூரில் தங்கியிருந்த போது அடிக்கடி சந்திராசாமியோடு போனில் பேசுவார். அதற்கென்றே அங்கிருந்த ஒரு 'டெலிபோன் பூத்துக்கு' அடிக்கடி சென்று வருவார். 'நாங்கள் நேபாளம் வழியாக வெளிநாடு தப்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் சாமியார் செய்து வருகிறார்' என்று என்னிடம் சிவராசன் கூறிவந்தார்.

இது உட்பட மேலும் பல தகவல்களையும் சி.பி.ஐ.சிறப்புப் புலனாய்வுக் குழுத்தலைவரான கார்த்திகேயனிடம் கூறினேன். அதைக் கேட்டவுடன் அவர் ஆவேசமானார். 'பெரிய மனிதர்களைப் பற்றி எல்லாம் பேசாதே அப்புறம் நடப்பதே வேறு. உன் உயிர் இருக்காது' என்று கூறியபடியே மேசையில் இருந்த 'பேப்பர் வெயிட்டை' எடுத்து என் முகத்தில் ஆவேசமாக வீசியடித்தார். அதில் என்னுடைய பல் உடைந்து விட்டது என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

ரங்கநாத்தின் வாக்குமூலத்தை சி.பி.ஐ. ஏற்றுக் கொண்டிருந்தால், அதன் பேரில் விசாரணை நடத்தியிருந்தால், சந்திராசாமியின் தொடர்புகள் அனைத்தும் அம்பலத்துக்கு வந்திருக்கும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மூடி மறைத்து திசை திருப்பும் போக்கிலேயே செயல்பட்டார்கள். அந்தளவுக்கு சந்திரா சாமியின் அரசியல் தொடர்பாடல் இருந்தது.

### இலங்கையும் சிங்கப்பூரும்!

ராஜீவ் கொலை வழக்கில் சந்திராசாமியை விசாரிக்க வேண்டும் என்று ஆணையக அறிக்கை கூறியது. ஏன் அப்படிச் சொன்னது தெரியுமா?

1987 ஜூலை 29. இலங்கையின் தலைநகர் கொழும்பில் 'இந்திய- இலங்கை ஒப்பந்தம்' நிறைவேறியது. ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்டு கை குலுக்கிக் கொள்கிறார்கள்.

அதேசமயம், இலங்கையின் நீலக் கடலுக்கு வெளியே சற்றுத் தள்ளியிருந்த சிங்கப்பூரிலும் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. சத்தமின்றி நடந்த அந்த ஒப்பந்தம்தான், பின்னாளில் ராஜீவைக் கொல்வதற்கு அச்சாரமிட்டிருந்தது என்றால் அப்போது நம்ப முடியாதுதான்.

அமைதியாக நடந்தேறிய அந்த ஒப்பந்தம், 'யுனிகார்ன் இன்டர்நேஷனல்' என்ற அமெரிக்க ஆயுத நிறுவனத்துக்கும் இலங்கை அரசுக்குமானது.

இரண்டு தரப்பும் கையொப்பம் போட்டுக் கொண்டது என்னவோ பச்சை மையில் தான். ஆனால், அது உறைந்த போது, ராஜீவ் காந்தியின் உடலில் இருந்து சிதறி சிவப்பு நிறமாக மாறியிருந்தது.

ஒப்பந்தப்படி அதே ஆண்டு டிசெம்பர் மாதத்தில், 25 ஆயிரம் 'SFG-87' ரக வெடிகுண்டுகள் இலங்கை சென்று இறங்கின.

இது அப்படியே இருக்கட்டும்!

ராஜீவைக் கொன்ற 'பெல்ட் பாமின்' தன்மையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தரும்படி சி.பி.ஐ. கேட்கிறது.

யாரிடம் என்றால், மேஜர் சபர்வாலிடம். சர்வதேச அளவில் மிகச்சிறந்த வெடி குண்டு நிபுணர்களில் இவரும் ஒருவர். இந்திய இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படை, தேசிய பாது காப்புக் குழுவில் எல்லாம் வெடிகுண்டு நிபுணராகப் பணியாற்றியவர்.

இவர் தன் குழுவினரோடு எட்டரை மாதங்கள் கடுமையாக உழைத்தார். சர்வதேச தரத்திலான ஆய்வுகளுடன் ஒப்பீடுகளையும் செய்தார். இறுதியாக 5.2.92 அன்று மத்திய அரசுக்கும், சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கும் அறிக்கையை அளித்தார்.

அந்த அறிக்கையில், 'சுமார் மூன்று 'SFG-87' கையெறி குண்டுகள் 'பெல்ட் பாமில்' பயன்படுத்தப்பட்டதற்கான பலமான சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்த வெடிகுண்டு, கீஈனீ மற்றும் TNT உள்ளடக்கிய, 'Composit ion - B' ரகத்திலானது. இதில் பயன்படுத்தப்பட்ட இரும்புச் சன்னங்கள் (pellets) தனித்தன்மை வாய்ந்தவை. அமெரிக்கத் தயாரிப்பான "SFG-87' ரக கையெறி குண்டுகளில் மட்டுமே இவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன' என மூன்று முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டினார் அவர்.

மேஜர் சபர்வாலின் இந்த அறிக்கையைப் பார்த்த சிறப்புப் புலனாய்வுக் குழுவினருக்கு அதிர்ச்சி, கலக்கம், கலவரம். ஏனென்றால், அதற்கு நான்கு மாதங்கள் முன்பாகவே இங்கே உள்ள தடயவியல் துறையினர், 'பெல்ட் பாமில் 400 கிராம் முதல் 500 கிராம் வரையிலான RDX வெடிமருந்து மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அதில் இருந்த இரும்பு சன்னங்கள் சாதாரண ரகமானவை' என அறிக்கை கொடுத்திருந்தனர்.

இந்த நிலையில், சபர்வாலின் அறிக்கையை ஏற்றுக் கொண்டால், விசாரணை சிங்கப்பூர், இலங்கை என்று போக வேண்டியிருக்கும். அப்படிப் போனால், இலங்கையின் முக்கிய நபர்களுக்கும் சந்திரா சாமிக்கும் இருந்த தொடர்புகள் வெளிவந்திருக்கலாம்.

ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் போது நடைபெற்ற இலங்கையின் இராணுவ மரியாதை அணிவகுப்பில் ராஜீவ் காந்தி தாக்கப்பட்டது வரை போயிருக்கும். எனவே, சபர்வாலின் அறிக்கையைக் கிடப்பில் போட்டுவிட்டு, தமிழகத் தடயவியல் துறை கொடுத்த ஆய்வு அறிக்கையை மட்டுமே எடுத்துக்கொண்டார்கள்.

மறைக்கப்பட்ட இந்தச் சதிகளை எல்லாம் நீதிபதி ஜெயின், தன் விசாரணை அறிக்கையில்



பிடித்து, வாங்கு வாங்கு என வாங்கியிருக்கிறார்.

### இதற்கும் சந்திராசாமிக்கும் என்ன தொடர்பு?

இப்படி மறைக்கப்பட்ட பல ஆதாரங்களின் பின்னணியில், அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் துணையிருந்தார். அவர், சந்திரா சாமியின் நெருங்கிய நண்பர். அதனால்தான் ராவ் தலைமையிலான மத்திய அரசிடம் இருந்து நீதிபதி ஜெயின் கமிஷனுக்குப் போதிய ஒத்துழைப்புகள் இல்லாமல் போனது என்ற பேச்சும் அன்று இருந்தது. அந்த அளவுக்கு சந்திரா சாமி சக்தி படைத்தவராக இருந்தார்.

எல்லா வகையிலும் ஜெயின் கமிஷனின் விசாரணைப் போக்கைத் திசைதிருப்பிக் கொண்டிருந் தார். அதனால்தான் அவர் 'விசாரிக்கப்பட வேண்டிய முதல் நபர், சுப்பிரமணியன் சுவாமியும் விசாரிக்கப்பட வேண்டிய நபர்' என்று ஜெயின் கமிஷன் தன் அறிக்கையில் கூறியிருந்தது.

### இந்திரா கொலையிலும் குற்றச்சாட்டு!

இந்திரா காந்தி தன் பாதுகாவலர்களாலேயே படுகொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை பற்றி விசாரிக்கப்பட்ட கமிஷனிலும், சந்திரா சாமியின் சதிமுகம் தெரிகிறது.

இந்திரா அதிகாரத்தில் இருந்த போதே, இந்த 'சாமிகள்' இருவரும் லண்டன் செல்கிறார்கள். ஒரு விடயத்துக்காக நிதி திரட்டுகிறார்கள்.

அப்போது லண்டனில் இருந்த பிரபல ஊறுகாய் நிறுவனத்தின் அதிபரான லக்குபாய் பதக்கைப் பார்த்து, ''உங்களுக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலும் தடையற்ற வர்த்தகத் தொடர்புக்கு ஏற்பாடு செய்கிறோம்'' என நிதி கேட்கிறார்கள்.

இந்திரா காந்தி இருக்கும் வரை அப்படியான விதிமீறல் நடக்காது என்கிறார் லக்குபாய். அதற்கு சந்திரா சாமி, 'இந்திரா பிரதமராக இருக்கமாட்டார். நரசிம்ம ராவ்தான் பிரதமராக இருப்பார்' என்று கூறுகிறார்.

பிறகு இந்திரா படுகொலை செய்யப்படுகிறார். துரதிர்ஷ்டவசமாக அப்போது நரசிம்ம ராவ் பிரதமராக முடியவில்லை. அதற்கு தமிழரான மூப்பனார் தான் காரணம்.

பெரும்பான்மை எம்.பிக்களின் கையொப்பத்தோடு ஜனாதிபதியைச் சந்தித்தார் மூப்பனார். 'ராஜீவ் காந்திதான் அடுத்த பிரதமர்' என்றார்.

'சாமி'களால் அந்தப் பெரும்பான்மையை உடைக்க முடியவில்லை. ராஜீவ் பிரதமரானார். ராஜீவ் பதவிக்கு வந்ததும், சதிமுகத்தின் சூத்திரதாரியான சந்திரா சாமியை அதிகம் கண்காணித்தார். அவரது ஆசிரமங்கள் வருமானவரி சோதனைக்கு உள்ளாகின. பல வழக்குகள் பாய்ந்தன. பாஸ்போர்ட் முடக்கப்படுகிறது. சந்திராசாமி கொதித்தார்.

"சின்னப்பையன். விளையாடுகிறான். என்னாகப் போகிறான் எனத் தெரியவில்லை. அவன் அம்மாவைப் போலவே மடிவான்'' என்று அவர் பேசியதாக பின்னாளில் ஆசிரமத்தில் இருந்த முக்கிய நபர்களே ஜெயின் கமிஷனில் சாட்சியளித்தார்கள். சந்திரா சாமி கொதித்ததைப் போலவே ராஜீவ் படுகொலை செய்யப்பட்டார்.

அதன்பிறகு நடந்த விசாரணையில், சந்திரா சாமியின் ஆசிரமக் கணக்குகள், பணப் போக்குவரத்து எல்லாம் ஆராயப்பட்டன. அவர் வழியாக பல்வேறு இயக்கங்களுக்குப் பணம் போனதாகவும் தெரிய வந்தது.


இதையெல்லாம் வைத்து தான் ஜெயின் கமிஷன் அறிக்கை தந்தது. அதன் பேரில் தான் சி.பி.ஐயிலேயே ஒரு தனி பிரிவாக 'பல்நோக்கு புலன் விசாரணைக் குழு போடப்பட்டது. அந்தக் குழு போடப்பட்டு 19 ஆண்டுகளாகின்றன.

சந்திரா சாமியை ஒரு முறை கூட அழைத்து விசாரிக்கவில்லை. ஒருவேளை சந்திரா சாமி தீவிரமாக விசாரிக்கப்பட்டிருந்தால், பல மர்மங்கள் வெளிவந்திருக்கலாம்.

அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தனவுக்கும் இந்த கொலைக்குமான தொடர்பும் தெரிந்திருக்கலாம்.

எல்லாமும் மண்ணுக்குள் புதைந்து போயிருக்கின்றன.

நன்றி: விகடன்






வணக்கமுங்கோ!

கிழமையில ஒரு நாளைக்கெண்டாலும் இஞ்சாலிப் பக்கம் வந்து உங்களோடை எப்பன் மனம் விட்டுக் கதைக்க மனசுக்கு எவ்வளவு ஆறுதலாகக் கிடக்குது தெரியுமே!

இண்டைக்கும் ஒரு விசயத்தை உங்களுக்குச் சொல்லிப் போட்டுப்போறன். கேளுங்கோவன்.

காமாலைக் கண்களுக்கு காணுற இருட்டெல்லாம் பேய், பிசாசுகளாகதான் தெரியுமேண்டு சொல்லுறதில எவ்வளவோ உண்மையிருக்குது பாருங்கோ!

தெளிவான பார்வை உள்ள ஆள்களுக்கு எந்த நேரமும் மனசு திடுக்காட்டமாக இருக்காது! நாட்டில, வீட்டில, றோட்டில நடக்கிற எந்தப் பிரச்சினையெண்டாலும், இது ஏன் நடந்தது? எதுக்காக நடந்தது? என்ன காரணத்துக்காக நடத்திவிக்கப்பட்டது? எண்டதை தங்களுக்குள் ஆறஅமர யோசிச்சுத்தான் முடிவெடுப்பினம் கண்டியளே!

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் பிரதமர் ரணில் மாத்தையா யாழ்ப்பாணம் வந்து போனவரல்லோ! அவர் வந்த நேரம் பார்த்து பளைப் பக்கம் பொலிசும், முகம் தெரியாத ஆரோ சில ஆள்களும் றோட்டில சுடுபட்டு விளையாடிச்சினமாம்.

றோட்டாலை போன பொலிசு மீது ஆரோ சுட, பொலிசும் பதிலுக்குச் சுட, ஒரே சடபுட... சடபுட... எண்ட சத்தங்கள் அந்த ஏ-9 வீதியைச் சல்லடை போட்டுத் துளைச்சதெண்டு உங்கை ஊர்ச்சனமெல்லாம் பறைஞ்சுதுகள். கேள்விப் பட்டிருப்பியள்!

இந்தச் 'சூட்டிங்' சம்பவத்தைக் குறிச்சு நீங்கள் என்ன நினைக்கிறியள்?

சும்மா கிடக்கிற வேதாளங்களை மீண்டும் பழையபடி... முருங்கை மரங்களிலை ஏத்திப் போட்டு, அதிலையிருந்து எழுகிற பாரதூரமான பிரச்சின்னையளிலை சிலபேர் 'குளிர் காய' முயற்சிக்கினம்... எண்டது எங்கட சனங்களுக்கு விளங்காமல் இல்லை.

சரி இந்தச் சுடுபாட்டுச் சம்பவம் ஒருபுறம் கிடக்கட்டும். இதைக் குறிச்சு பிறகு ஆறுதலா விவரமாக் கதைப்பம்.

இப்ப நான் என்ன சொல்ல வாறன் எண்டால்;

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி புலியளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது எண்டு கூறிக்கொண்டு, சிங்கள அரசு அதை ஒவ்வொரு வருசமும் வெற்றி விழாவாகக் கொண்டாடி வருகுது. இப்படி ஒவ்வொரு வருசமும் கொண்டாடுறதைப் பார்த்தால், இந்த நாட்டில புலியள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாகவே அர்த்தம்கொள்ள வேண்டியிருக்குது.

புலியளை முற்றாக அழிக்கப்பட்டதான ஒரு பிரதேசத்தில, றோட்டாலை போன பொலிசுமீது சுட்டு விளையாடின ஆள்கள் ஆர்?

புலியளா?

அப்படியெண்டால்புலியளோடை இப்பவும் சண்டை நடந்துகொண்டல்லோ இருக்க வேணும். அண்டைக்குச் சுட்டது புலியள்தான் எண்டால், அப்ப ஏன் வருசா வருசம் ஏகப்பட்ட செலவில அதை வெற்றிவிழாவாக் கொண்டாடுகினம்? இது புலியளோடை சண்டை பிடிச்சுச் செத்துப்போன ஆமிக்காரரை அவமானப் படுத்துறமாதிரியல்லோ கிடக்குது.

பளையில பிரச்சினை நடந்தாலும் நடந்தது. அந்தப் பிரச்சினையை வைச்சுக்கொண்டு 'பார்லிமெண்டில' சிலபேர் அரசியல் வியாபாரம் நடத்தி; ஆதாயம் தேட வெளிக்கிட்டிருக்கினம் கண்டியளோ!

உவர் குறுந்தாடிக்காரர் விமல் வீரவன்ஸ இருக்கிறாரெல்லோ!

அவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமே!

இஞ்சை சண்டை நடக்கேக்கை இந்தியாவுக்கு ஓடிப்போன இயக்கப் பொடியள்தான், இப்ப திரும்பி வந்து பளையில படுத்துக் கிடந்து சுட்டிருக்கிறாங்கள்... எண்டு முழங்கியிருக்கிறார் எண்டால், இதைவிட, இன்னொருவர் (தேசிய சுதந்திர முன்னணி - ஜயந்த சமரவீர) அதற்கு ஒரு படி மேலே போய் வீரவன்ஸவைப் போல விளாசித் தள்ளியிருக்கிறார்.

நான் இதில முன்னுக்குச் சொல்லியிருக்கிற மாதிரி - காமாலைக் கண்களுக்கு, காணுறு இருட்டெல்லாம் பேயள், பிசாசுகளாகத் தான் தெரியுமெண்டு சொல்லுறதில ஏதும் பிழை இல்லைத்தானே பாருங்கோ....!

## கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ விபத்து!



மட்டக்களப்பு, மே 28

செங்கலடி- பதுளை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்று நேற்று முன்தினம் விபத்துக்கு உள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் கொடுவாமடு பிரதேசத்தில் விபத்துக்கு உள்ளாகியது என்று கூறப்படுகிறது. (ஐ)

## காலி நிவாரணப் பணியில் இறங்கினார் காணி அமைச்சர்

காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்றுக் காலை தொடக்கம் காலி மாவட்டத்தின் நிவாரணப் பணிகளில் களமிறங்கியுள்ளார்.

காலியின் பல்வேறு பிரதேசங்களிலும் மண் சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, பெரும் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு காலியை வந்தடைந்த காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக, நேற்றுக் காலை தொடக்கம் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். (ஐ)

## விமானப் படையின் மீட்பு நடவடிக்கை நேற்றும்!

கொழும்பு, மே 28

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன என்று இலங்கை விமானப்படை கூறியுள்ளது.

கொக்கல இராணுவ முகாமில் இருந்து மூன்று ஹெலிகொப்டர்கள் மீட்பு பணிகளில் நேற்று ஈடுபடுத்தப்பட்டன என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் கிகான் செனவிரத்ன கூறினார்.

இது தவிர இரத்மலானை விமானப் படை முகாமில் இருந்து எம்.ஐ. 17 ஹெலிகொப்டரும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது என்றும் கூறினார். (ஐ)

## அடியார்களுக்கு அருள்பாலிக்கும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கோயிலின் அமைவிடம்

யாழ்ப்பாணத்திலிருந்து இணுவில் நான்காவது மைல் தூரத்தில் உள்ளது. வீதியின் தெற்கே பரராஜசேகரர் ஆலயம் என்றால் வடக்கே இப்போது இந்துக்கல்லூரி என அழைக்கப்படும் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைந்துள்ளது. இவ்வீதியின் இருமருங்கும் ஆலயத்திருப்பணிக்கு உதவுவோர் இருக்கின்றனர். பிராமணர் குடும்பங்கள், பிரசித்திபெற்ற தவில் நாதஸ்வர வித்துவான்களின் குடும்பங்கள், பூமாலை, சப்பரம், காவடி தந்துதவுவோர் குடும்பங்கள் கூடியமர்ந்துள்ளன. இணுவில் ஓர் அழகிய கிராமம். இருபதுக்கும் மேற்பட்ட ஆலயங்கள் அழகு செய்ய நடுநாயகமாகப் பரராஜசேகரப்பெருமான் அருள்பாலிக்க சித்தர்களும், பக்தர்களும், கலைகளும், கலைஞர்களும், வாழுகின்ற திருவூராக விளங்குகின்றது.

விநாயக வழிபாடு ஆரியச் சக்க ரவர்த்திகள் காலத்தில் முதலிடம் பெற்றது. இந்த வகையில் செகராஜசேகரப்பிள்ளையார், கருணாகரப்பிள்ளையார், வெயிலுகந்தப்பிள்ளையார், பறாளை விநாயகர் போன்ற பல விநாயகர் ஆலயங்கள் இந்தக் காலத்தில் எழுந்தன. விநாயகர் வணக்கம் முதன்மை பெற்றது.

### தென்னிந்தியச் சிற்பிகளின் கைவண்ணத்தில் பிள்ளையார்

பரராஜசேகரப்பிள்ளையாரின் திருவுருவம் தென்னிந்தியச் சிற்பிகளால் செதுக்கப்பட்டு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தது. எம்பெருமான் கருவறையில் இருக்கும் இந்த விநாயகப்பெருமான் தனது வலக்கரத்தில் அங்குசத்தையும், இடக்கரத்தில் பாசத்தையும், கீழேயுள்ள வலக்கரத்தில் ஒடிந்த தந்தத்தையும், இடக்கரத்தில் மோதகத்தையும் தும்பிக்கையில் கும்பத்தையும் வைத்திருக்கின்றார். மேலும் சுளகு போன்ற இருசெவிகளும் பெரிய வயிற்றையும் உடையவராகவும் இடது பாதத்தை மடித்தும் வலது பாதத்தை தொங்க விட்டபடி காட்சி தருகின்றார். இத்தோற்றம் ஆன்மாக்களின் வினைகளைப் போக்கி பேரின்பத்தை நல்குவதாகவும் அமைந்துள்ளது.

தென்னிணுவைப் பதியினிலே கோயில் கொண்ட எம்பெருமான் திருக்கோயில் போர்த்துக்கேய, டச்சுக்காரர் வருகையினால்; இடர்பட்டது. மக்கள் மதம் மாற்றப்பட்டனர். சைவ ஆசாரப் படியாரும் வாழ முடியாத ஒரு நிலை. சைவ ஆலயங்கள் அழித்தொழிக்கப்பட்டன. இந்த நிலையிலும்கூட இணுவில் சைவப் பெருங்குடி மக்கள் இடர்பாடுற்ற எமது ஆலயத்தை காத்தனர். மூலமூர்த்தியை சிறுகொட்டகையில் வைத்து வழிபட்டனர். அந்நியப் படைகள் வந்தபோது ஆலயம் அன்று மடம் என்று பதிலளித்தனர். அன்றிலிருந்து இது மடத்துவாசல் பிள்ளையார் கோயில் எனவும் அழைக்கப்படலாயிற்று.

ஸ்ரீ பரராஜசேகரனுக்கு கோவிலெடுக்க மனமொருமைப்பட்டனர். இறைவன் உள்நின்று உய்த்த அயராது திருப்பணியில் ஈடுபட்டனர். இதன் பேறாக மடாலயத்தின் கண் மூர்த்தியும், மணிக்கூட்டு வைரவரும், ஒரு திருமஞ்சனக்கிணறும், ஒரு திருக்கேணியுமாக இருந்த ஆலயம் வானளாவிய இராஜகோபுரத்துடனும், பரிவாரமூர்த்திகளுடனும், பஞ்சமுக விநாயகருடனும், மணிக்கூட்டுக்கோபுரமும், அழகிய முகப்பை அலங்கரிக்கும் மணி மண்டபமும் போதாதென்று தென்மேல் திசையில் வானைமுட்டும் மூன்றுமாடிக் கட்டடங்களைக்கொண்ட மணிமண்டபமும், தெற்குவாசலில் ஐந்துதள கோபுரமும் அமையப்பெற்று உலகின் பெருமையுடன் திகழ்கின்றது. இதற்கெல்லாம் அடிநாதமாக இருப்பவன் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரே.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் முகப்பை ஐந்து தளங்கள் கொண்டதும் தெய்வீக கலையம்சங்கள் பொருந்தியதுமான வானளாவிய இராஜகோபுரம் அலங்கரிக்க அயலே வடகீழ்பக்கமாக அமைந்த கண்டாமணிக் கோபுரம் எழுந்து நிற்க, கிழக்கே தீர்த்த மண்டபம் வர்ண வேலைப் பாடுகளுடன் காட்சிதர, தெற்கே பஞ்சமுக விநாயகப் பெருமானுக்குரிய ஐந்துதள இராஜகோபுரம் அழகிய சிற்ப வேலைகளுடன் காட்சிதர, மேற்கே வானவரும் வந்து வழிபடும் அளவிற்கு அழகிய மணி மண்டபமும் காட்சிதர, பரராஜசேகரன் ஆலயத்தோடு கூடியதாக தெற்கே கல்யாண மண்டபம் விளங்க, வடக்கே கல்வித்தானம் வழங்கும் இந்துக்கல்லூரி அமைந்திருக்க ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கொலுவிருந்து ஆட்சி செய்கிறார்.

### கோயிலுக்கு உதவி செய்ய முண்டியடிக்கும் ஊர் மக்கள்

மேலும் இவ்வாலயத்திருப்பணி வேலைகளை இவ்வூர்ப்பிரமுகர்களும், அடியவர்களும் சேர்ந்து நிறைவேற்றி வருகின்றனர். இவ்வாலயம் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம், ஸ்தம்ப மண்பம், வசந்த மண்டபம், யாக சாலை, பாக சாலை, வாகன சாலை, மணி மண்டபம், மணிக்கூட்டு வைரவர் ஆலயம் என்ற வகையில் அமைந்துள்ளது.

இவ்வாலயம் சிறந்தோங்க ஊர்த் தொண்டர்களும், இளைஞர்களும், வர்த்தகப் பெருமக்களும் உதவியுள்ளனர்.

இவ்வாலயப்பிரதம குருவாக விளங்கி ஆகம விதிப்படி பூசைகள் நடாத்தி வருபவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்களும், அவருக்கு அடுத்தாற்போல் அவரது மகன் சோ.அரவிந்தக் குருக்களும் ஆவார். இதற்கு முன்னதாக சதாசிவக் குருக்கள், வைத்தீஸ்வரக்குருக்கள், சிவ ஞானசகுருக்கள் ஆகியோர் அவ்வாலயப் பிரதமசிவாச்சாரியார்களாக இருந்து பூசைகள் விழாக்களை நடத்தியுள்ளனர்.

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பரராஜசேகரர் மீது பாடல்களும், திருவூஞ்சல்களும் பாடப்பட்டுள்ளன.

எம்பெருமானது புகழ் திக்கெட்டும் பரவட்டும்.

# ஓசாமா பின்லேடனின் கடைசி நிமிடங்களில் நடந்தது என்ன?

## உடனிருந்த மனைவியின் முதல் பேட்டி



டோக்கியோ, மே 28

அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த போது, கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி, அமெரிக்க இராணுவம் சுட்டுக் கொன்றது பற்றிய விடயம் மீண்டும்-மீண்டும் பேசப்பட்டாலும், ஒசாமாவின் இறுதி நிமிடங்களில் அவருடன் இருந்தவர் சொல்வது என்ன?

அந்தக் காரிருள் சூழ்ந்த நேரத்தில் என்ன நடந்தது என்று மனம் திறந்து முதன் முறையாகச் சொல்கிறார் ஒசாமா பின்லேடனின் நான்காவது மனைவி அமால்.

ஸ்காட் கிளார்க் மற்றும் அட்ரியன் லெவி இணைந்து எழுதிய, 'த எக்ஸைல்: தப்ளைட் ஒவ் ஒசாமா பின்லேடன் அபவுட் த லாஸ்ட் ப்யூ மினிட்ஸ் ஒப் 9/11 மாஸ்டர்மைண்ட்ஸ் லைவ், புத்தகத்திற்காக, அமால் அவர்களிடம் மனம் திறந்து பேசியிருக்கிறார்.

'சண்டே டைம்ஸ் யூ.கே' -இல் இந்த புத்தகத்தின் ஒரு பகுதி வெளியாகியுள்ளது.

அந்த புத்தகத்திற்காக அமால் தெரிவித்தவை வருமாறு:'-

கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று இரவு உணவு முடிந்து, பாத்திரங்களும் சுத்தம் செய்யப்பட்டன. வழக்கமான இரவு நேர தொழுகைக்கு பின் ஒசாமா பின்லேடனும், நானும் மேல் மாடியில் இருந்த படுக்கையறைக்குச் சென்று விட்டோம்.

இரவு 11 மணி இருக்கும், ஒசாமா ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். பாகிஸ்தானின் அபோட்டாபாதில் நாம் இரகசியமாக மறைந்து வாழ்ந்த வீட்டில் திடீரென்று மின்சாரம் தடைபட்டு, வீடு முழுவதும் இருளில் மூழ்கியது.

பாகிஸ்தானில் மின்சாரத் தடை ஏற்படுவது வழக்கமானது என்பதால், யாரும் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

நள்ளிரவு நேரம், எனது மனதில் காரணமே இல்லாமல் ஏதோ கலக்கம் ஏற்பட்டு தூக்கம் கலைந்தது. ஏதோ சத்தம் கேட்டதாக தோன்றினாலும், அது பிரம்மையாக இருக்கும் என்று நினைத்தேன்.

ஆனால், சிறிது நேரத்திலேயே மாடியில் யாரோ ஏறுவது போல தோன்றியதால் எனக்கு கவலை ஏற்பட்டது. உன்னிப்பாக கவனித்தேன்.

மின்சாரம் இல்லாமல், இருள் சூழ்ந்த நள்ளிரவாக இருந்தாலும், யாரோ கடந்து போனமை நிழல் போலத் தெரிந்தது. சத்தங்கள் அதிகமானவையால், ஜன்னல் வழியாக காற்று உள்ளே வந்த போது, அந்நியர்கள் நுழைந்து விட்டார்களோ என்ற எனது சந்தேகம் உறுதியானது.

### காரிருள் வேளையில் பயங்கரம்

இதற்கிடையில் படுக்கையில் படுத்திருந்த ஒசாமா பின்லேடனும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் அச்சம் நிலவியமை அப்பட்டமாக தெரிந்தது.

கணவர் என்னைப் பிடித்துக் கொண்டார். எங்களை யாரோ உற்றுப் பார்ப்பது போலவும், மேலே ஆள்கள் ஓடுவது போலும் உணர்ந்தேன்.

சட்டென்று நாங்கள் இருவரும் அங்கிருந்து எகிறிக் குதித்து ஓடினோம். எங்கள் வீட்டின் சுவர்கள் அதிர்ந்தன.

பின்பகுதியை ஒட்டியிருந்த கதவின் வழியாகப் பார்த்தோம், அவர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

அமெரிக்காவின் பிளாக் ஹாக் ஹெலிகொப்டர் வீட்டின் அருகே இருந்ததைப் பார்த்து விட்டோம். சில நிமிடங்களில் மற்றொரு ஹெலிகொப்டரும் வந்து விட்டது.

அத்துடன், அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு குழுவும் அவர்களுடன் இணைந்து கொண்டது. யாரோ எங்களை ஏமாற்றி விட்டதை நாங்கள் உணர்ந்தோம்.

பல ஆண்டுகளாக இரகசியமாகவும், பாதுகாப்பாகவும் இருந்த அந்த வீடே எங்களுக்கு மரணப்பொறியாக மாறி விட்டது. ஒசாமா பின்லேடனின் நான்கு மனைவிகளில் மூன்று பேரும், குழந்தைகளும் இரண்டாவது மாடியில் இருந்த படுக்கையறைக்குள் வந்து விட்டார்கள், என்ன செய்வது என்று யாருக்கும் புரியவில்லை,

அனைவரும் தொழுகை செய்தார்கள்.

பிறகு எங்களிடம் பேசிய ஒசாமா, "அவர்கள் கொல்ல விரும்புவது என்னைத்தான் உங்களை அல்ல" என்று சொன்னமையுடன், மனைவியர்களான எங்களையும் குழந்தைகளையும் வீட்டின் கீழ்தளத்துக்குச் செல்லுமாறு கூறினார்.

இருந்த போதிலும், எனது மகன் ஹுசைனுடன் ஒசாமாவின் அருகிலேயே இருக்க நான் முடிவு செய்தேன்.

அமெரிக்கா தன்னை சுற்றி வளைத்து விட்டது என்பதை அவர் உணர்ந்து விட்டார்.

வீட்டைச் சுற்றி வளைத்தவர்கள் வீட்டின் பின்பகுதிக்கு வந்து விட்டார்கள். சத்தங்கள் அதிகமாயின, ஒரு கட்டத்தில் வீடே அதிரத் தொடங்கியது. அத்தோடு எங்களது மன அதிர்வும் அதற்கு குறைந்ததாக இல்லை. வானில் நிலவில்லாத அந்த இரவில், மின் சாரமும் இல்லை. எதுவும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், தவறாக நடக்கிறது என்பதை உணர்ந்து விட்டோம்.

ஹெலிகொப்டர்கள் வருகை, ஆட்கள் நடக்கும் சத்தம், வீடு அதிர்வது எல்லாம் நிலைமையின் விபரீதத்தை உணர்த்தின.

அமெரிக்க இராணுவத்தினர் எங்கள் வீட்டிற்குள் வந்து விட்டார்கள். செஹம் மற்றும் காலித் இருவரும் அமெரிக்கர்களை நெருக்கத்தில் பார்த்துவிட்டார்கள்.

தங்கள் இருப்பிடத்தைப் பற்றிய முழுத் தகவல்களையும் யாரோ அமெரிக்காவுக்கு தெரிவித்து விட்டார்கள், இல்லையென்றால் இது என்றுமே சாத்தியமாகியிருக்காது.

யாரோ எங்களுக்குத் துரோகம் இழைத்து விட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. இப்படி சுற்றிவளைக்கப்படுவோம் என்று எங்களில் யாருமே எதிர்பார்க்கவில்லை.

ஒசாமா பின்லேடன் காலிதை அழைத்தார். அவன் ஏ.கே-47 துப்பாக்கியைகையில் எடுத்துக் கொண்டான். 13 வயதேநிரம்பிய காலிதுக்கு துப்பாக்கியை இயக்கத் தெரியாது என்பது எனக்குத் தெரியும். குழந்தைகள் அழுதன. நான் அவர்களை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தேன். அமெரிக்க இராணுவத்தினர் மேல் மாடிக்கு வந்து விட்டனர். அதன்பிறகு அனைத்தும் சில நிமிடங்களில் முடிந்து விட்டன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## ஐ.எஸ். அமைப்பினர் மீது கடும் தாக்குதல்:

# மொசூல் நகரை விட்டு வெளியேறுமாறு பொதுமக்களுக்கு ராணுவம் எச்சரிக்கை!



பாக்தாத், மே 28

ஈராக்கில் மொசூல் நகரில் உள்ள ஐ.எஸ். அமைப்பினர் மீது உச்சகட்ட தாக்குதல் மேற்கொள்ள இருப்பதால் பொது மக்கள் அந்நகரை விட்டு வெளியேறவேண்டும் என்று ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக் நாட்டில் உள்ள முக்கிய பெருநகரமான மொசூல் மாகாணத்தில் சுமார் 7 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த நகரை கைப்பற்றிய ஐ.எஸ். அமைப்பினர், அப்பகுதி முழுவதையும் இஸ்லாமிக்ஸ்டேட் எனப்படும் ஐ.எஸ். அமைப்பின் ஆட்சிக்கு உட்பட்டது என்று அறிவித்தனர்.

இந்த நகரை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். அமைப்பினர் அங்கிருந்தபடி தங்களது ஆதிக்கத்தை உலகம் முழுவதும் பரவலாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மொசூல் நகரை தீவிரவாதிகளின் தலைமையிடமாக மாற்றியுள்ள இவர்கள் இங்கிருந்தவாறு உலகம் முழுவதும் அப்பாவி மக்களை குறிவைத்து தீவிரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இவர்களை ஒழிக்க ஈராக் ராணுவப் படைகளுடன் அமெரிக்க விமானப்படையும் துணையாக தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த மூன்று மாதங்களாக மொசூலை கைப்பற்ற அமெரிக்க கூட்டுப் படையினரின் துணையுடன் ஈராக் ராணுவம் உச்சகட்ட தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் விளைவாக மொசூல் நகரின் பெரும்பான்மையான பகுதிகள் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

இந்நிலையில், எஞ்சியுள்ள பகுதிகளை மீட்பதற்காக ஐ.எஸ். அமைப்பினர் மீது உச்சகட்ட தாக்குதல் நிகழ்த்தப் போவதாக ஈராக் ராணுவம் தெரிவித்துள்ளது. இதனால், அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

போருக்குப் பின்னர் சுமார் 2 லட்சம் மக்கள் மொசூல் நகரை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐ.நா. கடந்தவாரம் தெரிவித்திருந்தது. ஐ.எஸ் அமைப்பினர் மீது ஈராக் ராணுவம் வலுவான தாக்குதல் நிகழ்த்தும் பட்சத்தில் மொசூல் நகரம் முழுவதுமாக அரசுப் படையினரின் வசம் வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# ஈராக்கில் இருந்து குவைத்துக்கு புறா மூலம் போதைப் பொருள் கடத்தல்!



குவைத், மே 28

ஈராக்கில் இருந்து குவைத்துக்கு புறா மூலம் போதை மாத்திரைகள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் மூலம் போதை மாத்திரைகள் கடத்தப்படும் போது அவர்கள் சுங்கத் திணைக்களத்தினரிடம் சிக்கிக் கொள்கின்றனர். இதனால், தற்போது புதுவிதமான நுட்பத்தை கடத்தல்காரர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

மன்னர் காலத்தில் புறாக்கள் மூலம் இரகசிய தூது மற்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டு வந்தன. பொதுவாக புறாக்கள் குறைந்த பட்சம் 100 மைல்கள் தூரம் பறந்து சென்று தகவலை சேர்த்து விட்டு மீண்டும் திரும்பும் திறன் கொண்டவை.

அதற்காக அவற்றுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இந்த நிலையில், தற்போது புறாக்கள் போதைப் பொருள் கடத்தலுக்குப் பயன்படுத் தப்பட்டு வருகின்றன. ஈராக்கில் இருந்து குவைத்துக்கு புறாக்கள் மூலம் போதை மாத்திரைகள் கடத்தப்படுகின்றன என்று சுங்கத் திணைக்களத்தினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எனவே, குவைத் சுங்கத் திணைக்கள அலுவலகம் அருகே பறந்து வந்த ஒரு புறாவை அதிகாரிகள் பிடித்தனர்.

அதன் முதுகில் போதை மாத்திரைகள் அடங்கிய ஒரு பை இருந்துள்ளது. அதில் 178 போதை மாத்திரைகள் இருந்துள்ளன அவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# அ.தி.மு.கவில் குழப்பம் ஏற்படுத்துவதை விட பா.ஜ.கவில் ஓ.பி.எஸ். சேருவதே சிறந்தது!

சென்னை, மே 28

அ.தி.மு.கவில் குழப்பம் ஏற்படுத்துவதை விட ஓ.பன்னீர் செல்வம் பா.ஜ.கவில் சேர்ந்து விடுவதே சிறந்தது என்று அ.தி.மு.க. அம்மா அணியின் கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

டி.டி.வி. தினகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, மதுரை மாவட்டத்தில் அ.தி.மு. கவில் ஒரு பிரிவினர் பொதுக் கூட்டம் நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக மதுரை சுப்பிரமணியபுரத்தில் நேற்று முன்தினம் இரவு கண்டன பொதுக்கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாஞ்சில் சம்பத் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.கவை ஜெயலலிதா வழிநடத்தி செல்ல பெரும் பங்கு வகித்தவர் சசிகலா.



அ.தி.மு.க. அம்மா அணியின் கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் கூறுகிறார்

ஆனால், ஆட்சியிலோ, கட்சியிலோ பதவிகளுக்கு வர அவர் ஆர்வம் காட்டவில்லை. பன்னீர்செல்வம் அரசியலுக்கு வரவாசல் அமைத்துக் கொடுத்தவர் சசிகலா. ஆனால், இன்று பன்னீர்செல்வம் சசிகலாவையும், அ.தி.மு.கவையும் அழிக்கப் பார்க்கிறார். அ.தி.மு.க. தொண்டர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகிறார்.

ஜெயலலிதா இறந்தபின், சசிகலாவுக்கு முதல்வராகவும், கட்சி பொதுச்செயலாளராகவும் வர வேண்டிய எண்ணம் இல்லை. ஓ.பன்னீர் செல்வம், பொன்னையன், மதுசூதனன் போன்றவர்கள் தான் அவரை பொதுச்செயலாளராக, முதல்வராக வலியுறுத்தினர்.

அப்போது டில்லியில் பா.ஜ.க. சொன்னதால் திடீரென சசிகலாவை முதல்வராகவும், பொதுச்செயலாளராகவும் ஆக்கும் முடிவில் இருந்து ஓ.பன்னீர் செல்வம் பின் வாங்கினார். அதனால், திடீரென போய் ஜெயலலிதாவின் சமாதி முன் தியானம் செய்தார்.

ஜெயலலிதாவின் ஆன்மா பேசுவதாக நாடகமாடி கட்சியை அழிக்க எதிர்க்கட்சிகளுக்கு துணை போகிறார். பன்னீர் செல்வத்திற்கு காலில் விழுவது சுகம். முன்பு ஜெயலலிதாவின் காலில் விழுந்தார். அதன் பின் சசிகலாவின் காலில் விழுந்தார். காலில் விழுந்து காரியம் சாதிப்பதில் அவர் பெரிய ஆள்.

இரட்டை இலையை மீட்க லஞ்சம் கொடுத்த குற்றச்சாட்டில் தினகரனை கைது செய்துள்ளனர். எந்தவொரு வழக்கிலும் லஞ்சம் வாங்கியவர்களைத்தான் பொலிஸார் கைது செய்வர்.

ஆனால், டில்லி பொலிஸார் முதன் முறையாக லஞ்சம் கொடுத்ததாக தினகரனை கைது செய்தது திட்டமிட்ட சதி. அவருக்குப் பிணை வழங்காமல் மனு விசாரணையை தள்ளி வைக்கிறார்கள். ஓ.பி.எஸ். அ.தி.மு.கவில் இருந்து கொண்டு குழப்பம் விளைவிப்பதை விட பா.ஜ.கவில் சேருவதே நல்லது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டப்பேரவையில் ஜெயாவின் படம்; எதிர்ப்புக் கூடாது என்கிறார் ஓ.பி.எஸ்.



சென்னை, மே 28

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உருவப் படம் சட்டப்பேரவையில் திறக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க கூடாது என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

உலகத் தமிழர்களின் உள்ளங்களில் நீக்கமற நிறைந்திருப்பவர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் இதயங்களைவிட்டு மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

ஜெயலலிதா எங்களுக்கு இறைவன் கொடுத்த இன்னொரு தாய் என்று தமிழக மக்கள் எல்லோரும் அன்று மனம் நிறைந்து வாழ்த்தினர். இன்றும் வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன் மாநிலமாக ஆக்குவதற்காக ஓய்வில்லாமல் உழைத்து உயர்த்திக் காட்டியவர் ஜெயலலிதா.

ஜெயலலிதாவின் உருவப் படம் சட்டமன்றத்தில் திறக்கப்படக் கூடாது என்று கூக்குரல் இடுகிறார்கள்.

ஏற்கனவே ஆண்ட சிலருக்கும், இனி ஆள நினைக்கும் சிலருக்கும், தலைசிறந்த முன்னுதாரணம் ஜெயலலிதா. பலருக்கு அரசியல் பாடமாகத் திகழ்பவர் ஜெயலலிதாவின் உருவப்படம் சட்டமன்றத்திலே திறக்கப்படுவது, சட்டமன்றத்திற்குப் பெருமை. தமிழ்நாட்டுக்கே பெருமை ஏன்? உலக தமிழர்களுக்கே பெருமை.- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகத்தில் உள்ள எந்தவொரு கட்சியும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்கக் கூடாது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறுகின்றார்

சென்னை, மே 28

தமிழகத்தில் உள்ள எந்தவொரு கட்சியும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்கக் கூடாது என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திராவிடர் கழகத்தின் தலைமை செயற்குழுக் கூட்டம் சென்னை வேப்பேரி பெரியார்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே கி.வீரமணி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரியாரின் பாசறையில் உருவான தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சட்டப்பேரவை வைர விழா, 94 ஆவது பிறந்த நாளைக் கடந்து உடல் நலம் பெற்று வழக்கமான பணிகளை மேற்கொள்ள வாழ்த்துகிறேன்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவை பிளவு படுத்தி அரசியல் ஆதாயம் தேட மத்திய அரசில் உள்ள அதிகாரத்தை பா.ஜ.க. பயன்படுத்தி வருவது கண்டனத்துக்குரியது.



முதல்வர் கே.பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, மத்திய பா.ஜ.க. அரசு இழுக்கும் கயிறுக்கு ஏற்ப பொம்மலாட்டம் ஆடுவது விரும்பத்தகுந்ததல்ல. அ.தி.மு.கவில் உள்ள திராவிட இயக்க ஆர்வலர்கள் இதனைச் சிந்திக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள எந்த அரசியல் கட்சியும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்கக் கூடாது. அவ்வாறு கூட்டணி அமைப்பது தமிழக மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும்.

தமிழகத்தில் அரசு ஒன்று செயற்படுவது போலவே தெரியவில்லை. பிரதமர் நரேந்திர மோடிக்கு சலாம் போடுவதில் முதல்வர் கே.பழனிச்சாமியும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றனர். மத்திய அரசுடன் உறவுக்கு கை கொடுத்து, உரிமைக்கும் குரல் கொடுக்க வேண்டும்.

மத்திய பா.ஜ.க. அரசு கடந்த 3 ஆண்டுகளிலும் அனைத்துத் துறைகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ளது. மதச் சார்பின்மைக்கு, சமூக நீதிக்கு விரோதமான பா.ஜ.க. அரசை வீழ்த்த சிறு சிறு வேறுபாடுகளை மறந்து அனைத்துக் கட்சிகளும், அகில இந்திய அளவில் ஒன்றிணைய வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டப்பேரவையில் ஜெ. படத்தை வைப்பது சட்டவிரோதம் என்கிறார் இளங்கோவன்!

ஈரோடு, மே 28

நீதிமன்றத்தில் குற்றவாளி என உறுதி செய்யப்பட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் படத்தை சட்டப்பேரவையில் வைப்பது சட்ட விரோதமானது என தமிழக காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்தார்.

ஈரோட்டில் நேற்று முன்தினம் அவர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிமன்றத்தில் குற்றவாளி என உறுதி செய்யப்பட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் படத்தை சட்டப்பேரவையில் வைப்பது சட்டவிரோதமானது.



நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று சொன்னால், பொலிஸ் தலைமையக அலுவலகத்தில் வீரப்பன், ஓட்டோ சங்கர் ஆகியோரின் படங்களைவைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

எம்.ஜி.ஆர். நினைவிடம் இருக்கும் இடத்தில் ஜெயலலிதாவின் உடல் புதைக்கப்பட்டுள்ளது. அதுவே மிகப் பெரிய தவறு. அரசு பணத்தில் அங்கு மணிமண்டபம் கட்டப் போகிறோம் என்று அறிவித்திருக்கின்றனர். ஒரு குற்றவாளிக்கு அரச செலவில் மணிமண்டபம் கட்டுவது எந்த விதத்தில் நியாயம்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சம்பியன்ஸ் கிண்ணப் பயிற்சி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தியது ஆஸ்திரேலியா!



லண்டன், மே 28

இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டியொன்றில், சிறப்பான துடுப்பாட்ட வலிமையை வெளிக்காட்டியிருந்த ஆஸ்திரேலிய அணி இறுதி ஓவரில் 2 விக்கெட்டுக்களால் வெற்றியைப் பெற்றுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான முதற்கட்டமாக, தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. நாளை மறுதினம் 30ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளன.

அந்த வகையில் சவால் மிக்க ஆஸ்திரேலிய அணியுடன், அனுபவம் குறைந்த வீரர்களைக் கொண்டிருந்த இலங்கை அணி மோதிய இந்தப் பயிற்சிப் போட்டி, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் முதல் பயிற்சிப் போட்டியாக லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகியிருந்தது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய தரப்பின் தலைவர், டேவிட் வோர்னர் முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணிக்கு வழங்கியிருந்தார்.

இதன்படி களமிறங்கியிருந்த இலங்கை அணி, ஆரம்ப வீரர்களான உபுல் தரங்க மற்றும் நிரோஷன் திக்வெல்ல ஆகியோரின் துரிதகதியிலான ஆட்டத்துடன், நல்லதொரு ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக, ஜோஸ் ஹெசல்வூடின் பந்து வீச்சில் தரங்க குறைவான ஓட்டங்களுடன் (13 ஓட்டங்கள்) வீழ்ந்தார். எனினும், மறுமுனையில் அபாரமாக ஆடியிருந்த நிரோஷன் திக்வெல்ல அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதில் அதிக கரிசனையுடன் செயற்பட்டார்.

இந்த நிலையில், தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிக்காட்டியிருந்த திக்வெல்ல, மோசேஸ் ஹென்ரிக்ஸின் பந்துவீச்சில் பேட் கம்மின்சிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்கும் போது, 8 பவுண்டரிகளை விளாசியிருந்த திக்வெல்ல மொத்தமாக 30 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து மேலதிகமாக, குறுகிய நேர இடைவெளிகளில் இரு விக்கெட்டுக்களை பறிகொடுத்து ஒரு கட்டத்தில் 92 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தடுமாறிய இலங்கை அணியை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சாமர கபுகெதர ஆகியோர் தமது நிதானமான ஆட்டம் மூலம் மீளக்கட்டியெழுப்பியிருந்தனர்.

இதில் கபுகெதர அணிக்காக பெறுமதி மிக்க 30 ஓட்டங்களை 34 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார். கபுகெதரவுக்கு பின்னால் அசேல குணரத்னவுடன் ஜோடி சேர்ந்த மத்தியூஸ் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார். மத்தியூஸ் 106 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 9 பவுண்டரிகள் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்று தனது அணியை முன்னிலைப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, அசேல குணரத்ன பெற்றுக் கொண்ட அதிரடி அரைச் சதம், சீக்குகே பிரசன்னவின் விரைவான துடுப்பாட்டம் (31 ஓட்டங்கள்) ஆகிய வற்றின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில், இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த அசேல குணரத்ன வெறும் 56 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 8 பவுண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில், சிறப்பாக செயற்பட்டிருந்த வலது கை வேகப்பந்து வீச்சாளரான மொசேஸ் ஹென்ரிக்ஸ் 46 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைச் சரித்திருந்தார்.

தொடர்ந்து, 50 ஓவர்களில் 319 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்கிற நிலையில் துடுப்பாடியிருந்த ஆஸ்திரேலிய அணி, ஆரம்ப வீரராக வந்திருந்த அரோன் பின்ச் அதிரடியாக ஆடி பெற்றுக் கொண்ட சதத்தின் உதவியுடன் தமது இலக்கு எட்டும் பயணத்தில் வலுவான நிலைக்குச் சென்றது.

அந்த அணியின் ஏனைய வீரர்களில் ட்ராவிஸ் ஹெட் தவிர்ந்த ஏனைய துடுப்பாட்ட வீரர்களை இலங்கைப் பந்து வீச்சாளர்கள் குறுகிய ஓட்டங்களுக்குள் ஓய்வறை நோக்கி அனுப்பியிருப்பினும், தனியொருவராக போராடிய ஹெட்டின் ஆட்டத்தின் காரணத்தால் 49.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்த ஆஸ்திரேலிய அணி 319 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்து கொண்டது.

அந்த அணியின் வெற்றியிலக்குக்கு சதம் அடித்து வித்திட்ட அரோன் பின்ச் அதிரடியான நீண்ட இன்னிங்ஸ் ஒன்றை வெளிப்படுத்தி, மொத்தமாக 109 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 11 பவுண்டரிகளை விளாசி 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ட்ராவிஸ் ஹெட் இறுதி வரை ஆட்டமிழக்காமல் நின்று 73 பந்துகளில் 7 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இறுதிவரை சிறப்பாகவே செயற்பட்டிருந்த இலங்கை அணியின் பந்து வீச்சில், நுவான் பிரதீப் 3 விக்கெட்டுக்களையும், லக்ஷன் சந்தகன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

# சம்பியன்ஸ் கிண்ணத்தை இங்கிலாந்தே வெல்லும்!

## பிரைன் லாரா கூறுகிறார்

லண்டன், மே 28


சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணி சம்பியன் பட்டத்தை வெல்லும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பிரைன் லாரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியை விட இந்த முறை மிகவும் பரபரப்பாக இருக்கும். ஏனென்றால் அனைத்து அணிகளும் மிகவும் நல்ல நிலையில் உள்ளன.

சொந்த மண்ணில் விளையாடுவது இங்கிலாந்துக்கு கூடுதல் பலமாகும். என்னைப் பொறுத்தவரை இங்கிலாந்து அணி கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது. அந்த அணி 20 ஓவர் உலக கோப்பையை இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் தோற்று, சம்பியன் பட்டத்தை இழந்திருந்தது. ஆனால், தற்போது அந்த அணியில் சிறப்பான வீரர்கள் உள்ளனர்.

போத்தம், பிளின்டாப் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் இருந்தவர்கள். ஆனால் தற்போது ஒட்டுமொத்த இங்கிலாந்து அணியிலும் அபாரமாக ஆடக்கூடிய வீரர்கள் உள்ளனர். சகலதுறை ஆட்டக்காரர்கள் வரிசையில் வியக்கத்தக்க வீரர்கள் உள்ளனர்.



எனது கிரிக்கெட் வாழ்க்கையில் சம்பியன்ஸ் கிண்ணத்தை (2004 ஆம் ஆண்டு) வென்றது மறக்க இயலாது. தற்போதுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி தரவரிசை காரணமாக இந்தப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ளது.- என்றார்.

இங்கிலாந்து அணி இதுவரை சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்றது இல்லை. கடந்த 2004 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணியிடமும், 2013 ஆம் ஆண்டு இந்தியாவிடமும் தோற்று அந்த அணி கிண்ணத்தை இழந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரெஞ்ச் ஓபன் முதல் சுற்றில் பிரான்ஸ் வீரரை சந்திக்கிறார் நடால்!



பாரீஸ், மே 28

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் 9 முறை சம்பியனான ஸ்பெயினின் ரபெல் நடால் தன்து முதல் சுற்றில் பிரான்ஸ் வீரர் பெனோயட் பேருடன் மோதவுள்ளார்.

ஆண்டின் 2 ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் இன்று தொடங்குகிறது. இதையொட்டி ஒற்றையர் பிரிவில் யார்-யாருடன் மோதுவது என்பது குலுக்கல் மூலம் நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, முதல்நிர வீரரான இங்கிலாந்தின் அன்டி முர்ரே தனது முதல் சுற்றில் 85 ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் ஆந்த்ரே குஸ்னெட்சோவுடன் மோதுகிறார். வாவ்ரிங்கா (சுவிற்ஸர்லாந்து) தகுதி நிலை வீரரையும், ரபெல் நடால் (ஸ்பெயின்) பிரான்ஸின் பெனோயட் பேரையும், நடப்பு சம்பியனும் 2 ஆம் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா), மார்செல் கிரானோலர்ஸையும் (ஸ்பெயின்) சந்திக்கின்றனர்.

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தக் குற்றவாளிகளை விசாரிப்பதை விடுத்து அவர்களைத் தூக்கிப் பிடித்து மேன்மைப்படுத்தும் வேலையைச் செய்யாதீர்கள் என்றும் அவர் இலங்கை ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவைக்கோரியிருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட 57 ஆவது டிவிஷனின் கட்டளைத் தளபதியாக இருந்து அந்த நடவடிக்கையை முன்னெடுத்தவர் ஜெனரல் ஜெகத் டயஸ்.

2009 ஜனவரியில் வன்னியில் வள்ளிபுனம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வைத்தியசாலை மீது, அது வைத்தியசாலை என்று தெரிந்து கொண்டும் அதை நோக்கி ஐம்பதுக்கும் மேற்பட்ட பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அவற்றில் பதினைந்து தாக்குதல்களுக்கு அந்த மருத்துவமனை நேரடியாக இலக்காகியது என சூகாவின் நிறுவனம் விடுத்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

காயப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்து மருத்துவனை மீது இலக்கு வைத்துப் பல்குழல் ஏவுகணைகள் மூலமும், கொத்துக் குண்டுகள் மூலமும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதுபோலவே, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை, பொன்னம்பலம் வைத்தியசாலை போன்றவையும் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன என்று அந்த அறிக்கை விவரிக்கின்றது.

"இந்தக் குற்றங்களுக்காக இலங்கைப் படைகளைப் பொறுப்புக் கூறவைக்கும் விதத்தில் நியாயமான யுத்தக் குற்ற விசாரணைகள் நடைபெற வேண்டும். அதற்காக விசாரிக்கப்படவேண்டியவர் ஜெகத் டயஸ். அவருக்கு இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவியை வழங்கியவர் ராஜபக்ஷ அல்ல, ஜனாதிபதி சிறிசேனாதான்." – என்று சுட்டிக்காட்டியுள்ளார் யஸ்மின் சூகா.

இப்படியான யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்கப்படவேண்டியவரை ஹெய்டியில் இலங்கைப் படைகள் இழைத்தவை என்று கூறப்படும் பாலியல்வல்லுறவுக் குற்றச்சாட்டுக்கான விசாரணையாளராக்குவது மிகப் பெரிய கேலிக்கூத்து என்றும் சூகா கூறுகின்றார்.

இந்தப் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டை சுமத்தியவர் இன்னும் விசாரிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டோரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியவர் இன்னும் விசாரணை செய்யப்படவில்லை. ஆனால், குற்றமிழைத்தவர்கள் என்று கருதப்படும் படையினர் அக்குற்றங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டனர்.

யுத்தக் குற்ற விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டியவர், இராணுவக் குற்றவாளிகளை விடுவிக்கும் முடிவை எடுப்பதற்கு அனுமதிக்கலாமா? இது முறையான நடவடிக்கையா?

ஹெய்டியில் இடம்பெற்ற மோசமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகச் சரியான, நேர்மையான, நீதியான விசாரணைகள் நடந்து முடியும் வரை இலங்கைப் படைகளை ஐ.நா. அங்கு தனது அமைதிப் படை நடவடிக்கையில் ஈடுபடுத்தக்கூடாது.

– இவ்வாறு சூகா மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## வெள்ளச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சம் புகுந்துள்ளனர்.

முப்படையினர், பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகள், தொண்டர் அமைப்புகள் சகிதம் பாதிக்கப்பட்டோரை மீட்கும் பணியும் நிவாரண நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

பெருமளவு சேதம் இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களிலேயே ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் வெள்ளம் மற்றும் மண் சரிவினால் 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப்பிற்பகலில்பல இடங்களில் மழை சற்று ஓய்ந்ததால் வெள்ளம் குறையும் சூழல் காணப்பட்டது.

எனினும் ஆறுகள் பல தொடர்ந்து அணைகளை மேவிப் பாய்வதால் அவற்றை அண்டிய பிரதேசங்களில் நீர்மட்டம் உயரும் வேகம் இன்னும் குறைவடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஜின் கங்கை, களு கங்கை, நில்வள கங்கை, களனி ஆறு ஆகியன இன்னும் அணையை மேவி சீற்றத்துடன் பாய்வதால் அவற்றை அண்டிய பிரதேசங்களில் அபாய நிலைமை தொடர்ந்து நீடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான பிரதேசங்களில் வெள்ள நிலைமை குறைவடைந்திருப்பதாக மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மணித்தியாலங்களில் மழை குறைவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், நதிகளை அண்டிய தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்படக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விசேடமாக ஜின்கங்கை, களுகங்கை மற்றும் நில்வள கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் இந்த பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேற வேண்டுமென்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

## பல ஆஸ்பத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு: –

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளிலிருந்து நோயாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சுகாதார சேவைகளுக்காக மேலதிக வைத்தியர்கள், தாதியர் உள்ளிட்ட சுகாதார பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

போதுமான அளவு மருந்து வகைகள் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நோய் சிகிச்சைகளுக்காக சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். – என்று கூறினார்.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள 185 முகாம்களில் சுகாதார வசதிகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

## பொதுபல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகேயை நேற்றுப் பொலிஸார் விசாரணை செய்து குடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

# போரின்போது நாங்கள் இழந்தவற்றை புதிய மெருகுடன் மீளப்பெறவேண்டும்

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 28

போரின் போது பலதையும் இழந்துவிட்டோம். ஆனால் இழந்ததை மட்டும் சிந்தித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. புதிய மெருகுடனும் உத்வேகத்துடனும் நாம் வெற்றி அடைவோம் என்ற எண்ணத்துடன் புதிய வாழ்க்கையை நாம் உருவாக்க முன்வர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தவறான வழிமுறைகள் மூலம் வெற்றியடைவதற்கு முயல்வது பலாத்காரம். இயக்கங்கள் இயங்கியபோது அந்தப் பலாத்காரமே பயன்படுத்தப்பட்டது. பின்னர் படையினரும் அதே வழியையே பின்பற்றினர் எனவும் அவர் கூறினார்.

இனியும் பலாத்கார வழிமுறைகளைத் தொடர முடியாது எனவும் ஜனநாயகத்தில் கருத்துப் பரிமாற்றங்களே உரிய வழிமுறை எனவும் கூறிய முதலமைச்சர், கருத்துக்களுக்குக் கருத்துக்களால் பதிலளிக்க வேண்டுமே தவிர கட்டைப் பஞ்சாயத்து முறைகளால் அல்ல எனவும் தெரிவித்தார்.

பளையில் அமைக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அண்மைக்காலமாக எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதும் கூட்டம் போட்டு கூச்சல் இடுவதும் ஒருபொதுவான தத்துவமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

பிழையான ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது அதிகாரம் இல்லாதவற்றை நடைமுறைப்படுத்துவிக்க உண்மைகளை மறைத்து தவறான செய்திகளை வழங்குவதன் மூலம் தாம் நினைத்தவற்றைச் சாதித்துவிடலாம் என சிலர் எண்ணியுள்ளார்கள்.

அவர்களுக்கு சகாயம் அளிக்க சில பத்திரிகைகள், இணையத்தளங்கள் போன்றவை முன்னிற்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தவறானவை. அவை ஒருவித பலாத்காரமே.

சில பிரதேசசபைகள் மக்களுக்கு நித்தம் தொல்லைகளை வழங்கக்கூடிய சபைகளாக தொழிற்படுவது கவலைக்குரியது. அதிகாரிகள் அடாவடித்தனமாக அதிகாரம் செலுத்துவதாகத் தெரியவருகின்றது.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் தமக்கு பதவி வழியாக கிடைக்கப்பெற்ற ஆசனம் இறை அனுக்கிரகத்தால் கிடைக்கப் பெற்ற ஆசனம் என்பதனை மனத்தில் இருத்திச் செயற்படுதல் வேண்டும். – என்றார். (ம)

## தெற்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், பிக்குணிகளும் அழைத்து வரப்பட்டு நயினாதீவில் வழிபாடுகள் இடம்பெற்றன.

மேற்படி பௌத்த பிக்குகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவற்குழியில் சர்ச்சைக்குரியவகையில் அமைக்கப்பட்டு வருகின்ற விகாரையில் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அதற்கு எதிராக கடும் எதிர்ப்புக்களும் எழுந்தன.

இந்நிலையிலேயே நாவற்குழி விகாரையில் வழிபாடு மேற்கொள்ளும் திட்டம் கைவிடப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

எனினும் அவர்கள் தென்னிலங்கைக்கு திரும்பிச் செல்லும்போது நாவற்குழியில் சம்பந்தப்பட்ட தூபி அமைக்கப்படும் இடத்துக்குச் செல்வார்கள் எனக் கூறப்படுகின்றது.

மேற்படி பௌத்த துறவிகள் குழுவில் இலங்கையைச்சேர்ந்த பௌத்த துறவிகளுடன் தாய்லாந்து மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து வருகைதந்த துறவிகளும் இணைந்துள்ளனர்.

நேற்று மதியம் மேற்படி பிக்குகள் காங்கேசன்துறையிலுள்ள படையினரின் 'தல்செவண' விடுதியில் தங்கிநின்ற பின்னர், மாலை நயினாதீவுக்குச் சென்று இரவு வழிபாடுகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தென்னிலங்கை திரும்புவதற்கு முன்னர் பலாலியில் படையினரின் ஏற்பாட்டில் அவர்களுக்கு விருந்துபசாரம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது. (ம)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளான பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள், அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் இறுதிக்கிரியை ஏற்பாடுகள் போன்றவை தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்.

வெள்ளத்தில் வீடுகளை இழந்தோருக்குப் புதிய வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு அரசு உதவும் என்றார் அவர். (உ)

## ஏறாவூரில் வீடொன்றின் பின்னால் ஆண் சிசு ஒன்று நேற்று மீட்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சர்வோதய வீதியில் உள்ள வீடொன்றின் பின்னாலிருந்து நேற்றுப் பிற்பகல் ஆண் சிசு ஒன்று மீட்கப்பட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது :-

நேற்று பிற்பகல் 3.30 மணி அளவில் ஏறாவூர் சர்வோதயா வீதியில் அமைந்துள்ள வீட்டுக்கு பின்புறமாக இருந்து தொடர்ச்சியாக குழந்தை ஒன்று அழுகின்ற ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. பின்னால் சென்று அவதானித்தபோது பிரசவிக்கப்பட்ட நிலையிலே அங்கு ஆண் சிசு ஒன்று வீசப்பட்டுக் கிடப்பதை கண்ட வீட்டின் உரிமையாளர் அதனை மீட்டு உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் இச்சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

குழந்தையின் தாய் யார், குழந்தை எவ்வாறு இவ்விடத்தில் போடப்பட்டது என்பது தமக்கு மர்மமாக உள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட குழந்தை ஆரோக்கியமான நிலையில் இருப்பதாகவும், மேலதிக பராமரிப்பு மற்றும் பிற நடவடிக்கைகளின் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குழந்தை பராமரிப்பு பிரிவிற்கு குழந்தையை அனுப்பி வைத்துள்ளதாகவும் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

### இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

## தென்னிலங்கை மக்களுக்கு யாழில் பொருள்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 29

தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கருணாகரனின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

தெற்கில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக 13 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களுக்கு உதவும் நோக்குடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள், பொதுமக்கள், ஏனைய பொது அமைப்புக்களிடம் உதவிப் பொருள்கள் பெறப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் பொருள்கள் சேகரிக்கும் செயற்பாடு இடம்பெறும் எனவும் இதற்காக உலருணவுப் பொருள்கள், தண்ணீர் போத்தல்கள், பால்மா வகைகள், உடுபுடைவைகள் மற்றும் இதர பொருள்களை வழங்கி உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டுக்கு பொலிஸாரின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

அராலி, மே 28

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று காலை 9.30 மணிக்கு, பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் எஸ்.திவாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன.

அனைத்துப் பழைய மாணவர்களையும் இந்தக் கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம)

# தேசிய இளைஞர் தினம் முல்லையில் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு மே.28

தேசிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கி வரும் தேசிய இளைஞர் மன்ற முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றன.

'தூய்மையான இலங்கைக்கு இளைஞர்களின் குரல்' என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் இருந்து ஊர்வலமாக பதாகைகளை தாங்கியவாறு விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றன.

இந்த ஊர்வலம் முல்லைத்தீவு எஸ். எல். ஆர். சி. அலுவலகம் வரை நடைபெற்றது. இதன் போது சூழல் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு சுவரொட்டிகளை ஒட்டியதோடு வாகனங்களிலும் அது தொடர்பான ஸ்ரிக்கர்களை ஒட்டினர்.

எஸ். எல். ஆர். சி அலுவலக மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்தோடு இந்த நிகழ்வை முன்னிட்டு இரத்ததான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதவி மாவட்ட செயலர் செல்வி லதுமீரா, தேசிய இளைஞர் மன்றத்தினுடைய மகரகம தேசிய அலுவலக உதவிப் பணிப்பாளர் மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுடைய முல்லைத்தீவு மாவட்ட உதவி பணிப்பாளர், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-81)









# கரைவலைப்பாடு பகுதியில் அடாத்தாக கடற்படை முகாம்

## தாழ்வுபாடு மீனவர் கொதிப்பு; விசனம்

மன்னார் - தாழ்வுபாடு மீனவர்களின் கரைவலைப் பாடு பகுதியில் இலங்கை கடற்படையினர் அடாத்தாக முகாம் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் அரை கிலோ மீற்றர் அகலமும் ஒரு கிலோ மீற்றர் நீளமும் கொண்ட மீனவர்களின் கரைவலைப்பாட்டு தொழிலுக்கு பயன்படுத்தப் பட்ட பிரதேசத்தையே இவ்வாறு இலங்கைக் கடற்படை கையகப்படுத்தி முகாம் அமைக்கும் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையினரின் அந்தச் செயற்பாடு தொடர்பாக மன்னார் - தாழ்வுபாடு பங்குத் தந்தை சுகுணராஜ் குருஸிடம் தாழ்வுபாடு மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மீனவர்களின் முறைப்பாடு தொடர்பாக தாழ்வுபாடு கடற்படை அதிகாரியிடம் தாழ்வு



பாடு பங்குத்தந்தை சுகுணராஜ் குருஸ் தெரிவித்தபோது, தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப் படுகிறது என்றும் தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கும் அந்த பகுதியில் முகாம் அமைக்கவேண்டிய தேவைப்பாடு உள்ளது என்று கடற்படை கூறியுள்ளது.

மீன்பிடியை வாழ்வாதாரமாகக்கொண்ட தாழ்வுபாடு கிராமத்தில் 650 மீனவக் குடும்பங்கள் உள்ளனர்.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டும் அரச படையினர் யுத்தத்தின் பின்னரும் மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் முகாம்களை அமைப்பது பொது மக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-81)

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் தற்போது அடிக்கடி நிகழும் விபத்துகள்

## உரிய கவனம் அவசியம் என்கிறார் டக்ளஸ்

கொழும்பு, மே 28

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பில் அரசு கவனம் எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

வடக்கில் அதிகரித்துவரும் ரயில் விபத்துகள் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளின் மூலமாக ஏற்படும் விபத்துகள் இன்று வடக்கு மாகாணத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத் துள்ளது. அண்மைக் காலமாக தொடர்ந்து பலர் இவ்வாறான விபத்துக்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

கடந்த காலங்களில், பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் பணியில் நியமிக்கப்பட்டிருந்த காப்பாளர்கள்கூட தற்போது பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் அரசு முக்கிய அவதானம் எடுக்க வேண்டும். இவ்வாறான ரயில் கடவைகளின் மூலமான உயிரிழப்புகள் வடக்கில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை மிகவும் வேதனையான விடயமாகும்.

அந்த வகையில் பார்க்கின்ற போது நாடளாவிய ரீதியில் சுமார் 880 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளன என்பது தெரிய வருகின்றது. இவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட வேண்டும்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் சுமார் 3 ஆயிரத்து 628 பேர் தற்போது கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையில், இவர்களது தொழில் மற்றும் ஊதியப் பிரச்சினை என்பது பெரிய பொருளாதாரப் பிரச்சினையாக இந்த பணியாளர்களிடையே நிலவி வருகிறது.

தங்களது ஊதியம் தொடர்பிலான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணியாளர்கள் அவ்வப்போது பணிப் பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகள் நாட்டில் ஏற்படாத சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சுமார் ஆயிரத்து 230 பேர் பொலிஸ் திணைக்களத்தால் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர்

இந்தப் பணியாளர்கள் நாளொன்றுக்கு 8 மணி நேரம் பணி புரிந்து வருகின்ற நிலையில், நாளொன்றுக்கு 250 ரூபா வீதமாக மாதம் 7 ஆயிரத்து 500 ரூபா மாத்திரமே கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகிறது.

அரச பணியாளர்கள் என்ற ரீதியிலோ அல்லது தனியார் துறை பணியாளர்கள் என்ற ரீதியிலோ அல்லாமல் எந்தவொரு தரத்தில் அல்லாமலும் இந்தப் பணியாளர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

எனவே, இந்தப் பணியாளர்களை இலங்கை ரயில்வேத் திணைக்களத்துடன் இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையில் இவர்களது தொழில் உரிமைகள் நிலை நிறுத்தப்படக் கூடிய ஏற்பாடுகள் குறித்து அவதானத்தைச் செலுத்துமாறு போக்குவரத்து அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன்.- என்றார். ,(ஐ)

# அம்பாந்தோட்டை மாணவர் விடுதி தொடர்பாக விசாரணைகள் ஆரம்பம்

பல்கலைக்கழகம் ஒன்று இல்லாத அம்பாந்தோட்டையில் 100 அறைகளைக் கொண்ட மாணவர் விடுதி எதற்காக உருவாக்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை வெலி கத்த பிரதேசத்தில் சுமார் 22 கோடி மில்லியன் ரூபா செலவில் இந்த மாணவர் விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான தகவல்கள் அரச கணக்காய்வு சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. 100 அறைகளைக் கொண்ட இந்த விடுதி இதுவரையில் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாணவர் விடுதி குறித்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட் நாயக்க முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாக்.பிரஜை!

கொழும்பு, மே 28

ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். மாலே நகருக்குக் கொண்டு செல்வதற்காக ஹெரோயின் கொண்டு வரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது என்று சுங்க ஊடகப் பேச்சாளர் தர்ம சேன கஹதவ தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ 26 கிராம் ஹெரோயினுடன் 53 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணப் பொதியில் மிக சூட்சுமமாக வைத்து ஹெரோயின் கொண்டு வரப்பட்டுள்ளது என்று சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.(ஐ)



தெற்கில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தில் கவச வாகனங்களில் மீட்புப் பணியில் ஈடுபடும் இராணுவத்தினர்.




# கண்டி - பிலிமத்தலாவையில் பதற்றம்; பொலிஸார் விரைவு!

கண்டி, மே 28

கண்டி – பிலிமத்தலாவை, தந்துர பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் முகநூலில் புத்தரை அவமதிக்கும் வகையில் பதிவிட்டார் எனக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு நேற்று முன்தினம் முதல் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

நேற்று முன்தினம் இரவு பெரும்பான்மையினத்தவர்கள் முச்சக்கரவண்டிகளில் அப்பகுதிக்கு வந்து சென்றிருந்த நிலையில், நேற்று நோன்பு துறக்கும் நேரத்தில் முனவத்து கொட பள்ளிவாசல் அருகில் பல சிங்கள இளைஞர்கள் கூடியதால் மீண்டும் பதற்ற நிலை அதிகரித்தது. இதன்போது ஆங்காங்கே கற்கள் வீசப்பட்டன எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, வீடுகள் சிலவற்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் உடனடியாக மத்திய மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அங்கு பொலிஸார் விரைந்தனர் என்றும் கூறப்பட்டது. நேற்றிரவு அங்கு விசேட அதிரடிப்படையினர் மேலதிகமாக இறக்கப்பட்டனர்.


அதேநேரம், பிரதேசத்தின் விகாரையில் இவ்விகாரத்தை சுமுகமாக முடித்துக் கொள்வது தொடர்பில் சாதகமான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரியவந்தது. (உ)

# நிவாரணப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு கட்டணச் சலுகை

அனர்த்தத்தில் சிக்கியுள்ளவர்களுக்கு நிவாரணங்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் தெற்கு அதிவேக வீதியில் இலவசமாகப் பயணம் செய்ய முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உலக சுகாதார தாபனம் உறுதியளித்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறினார். (உ)

# முல்லையில் கடுங் காற்று; வீடு, வாசல்களுக்குச் சேதம்



நாட்டில் சீரற்ற காலநிலை தொடரும் சூழலில், முல்லைத்தீவில் கடும் காற்றுக் காரணமாக வீடுகள் பல சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காற்று நேற்றுப் பிற்பகல் தொடக்கம் அதிகரித்த வேகத்தில் வீசுவதுடன், அந்த நிலைமை நேற்றிரவு வரையிலும் தொடர்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கடும் காற்றினால் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் வீதியோர மரங்கள் மற்றும் வீட்டு முற்றத்தில் நின்ற மரங்கள் சில முறிந்து வீடுகளுக்கு மேல் விழுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

தற்காலிக குடிசைகளில் வசிக்கும் பொதுமக்களின் வீட்டு கூரைகளும் பலமான காற்றுக் காரணமாக சேதமாகியுள்ளன.

## VACANCIES

வவுனியாவில் அமைந்துள்ள BIS சர்வதேச பாடசாலைக்கு

1. Montessori teacher
2. Primary teacher
3. English teachers

Email மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH INTERNATIONAL SCHOOL
email : bcejaffnabranch@gmail.com

## முக்கிய அறிவித்தல்

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்கள் தற்போது A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்று ஒரு பிழையான தகவல் இலங்கையிலும், UK இலும் பரவியுள்ளது. அது முற்றிலும் தவறான தகவல் என அறியத்தருகின்றோம். அதன் உண்மைத்தன்மை என்னவெனில் ஏற்கனவே UK இல் வசிக்கும் partner அவரது விசா காலத்தினை நீடிப்பதாயின் A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதே உண்மையாகும். ஆகவே புதிதாக Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு இப் புதிய நடைமுறை தேவையற்றது. அவர்கள் வழமை போன்று A1 பரீட்சைக்கு தோற்றினால் போதுமானது.

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

## விசா விண்ணப்பித்தல்

2003ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க Green Card விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில் USA, Canada, Australia, மற்றும் UK உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்று மிகச் சரியாக பூர்த்தி செய்துகொள்வதுடன் விசா சம்பந்தமான கடிதங்களையும் ஏற்பாடு செய்துகொள்வதற்கும் மற்றும் பயண காப்பீடு போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கும் எமது நிறுவனத்தை அணுகவும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளும் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ, பிரதிநிதிகளோ இலங்கையின் எப் பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

8-3-4, Bristol Street, Colombo 01
0112 393 919 / 077 427 6579
www.bristolvisa.com
(C/648)

Bristolvisa CONSULTATIONS

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள். பொதிகள் சேவை

எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாரா கி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.